www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-30 ஏப்ரல் 89
4-11
விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை

## தொடரும் வெகுஜனப் படுகொலை

## திசை திருப்ப சமாதான நாடகம்

இலங்கை பாசிச ஜெயவர்த்தனேயின் வாரிசு பிரேமதாசா மீண்டும் சமாதானம் -போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை என்ற நாடகத்தைத் துவங்கியுள்ளார். தென்னிலங்கையில் இராணுவமும் இரகசியக் கூலிப்படைகளும் நடத்திவரும் பாசிச பயங்கரவாதப் படுகொலைகளையும், ஈழத்தில் இந்திய இராணுவம் மேற்கொண்டு வரும் புலிகளைத் தேடி அழிக்கும் தீவிர வேட்டையையும் மூடிமறைத்து, மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதற்கான முயற்சிதான் இது

பஞ்சாபிலே போலீசு கொலைவெறியன் ரிபைரோ உருவாக்கியுள்ள இரகசியக் கொலைப்படை அனுபவத்தைக் கற்றுக் கொண்டு ''கருப்புப் பூனைகள்'', ''பச்சைப் புலிகள்'', ''மக்கள் புரட்சி செம்படை'' ஆகிய இரகசியக் கொலைப்படைகளைக் கூட்டியுள்ளது இலங்கை பாசிச கும்பல். தென்னிலங்கையில் அரசுக்கு எதிராகவும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் ''கொரில்லாப் போர்'' நடத்திவரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இளைஞர்களைக் கொன்று பயபீதியை உருவாக்குவதுதான் இப்படைகளின் பணி. இவர்கள் ஜே.வி.பி. ஆதரவாளர் என்று சந்தேகிக்கப்படும் சிங்கள இளைஞர்களைப் பிடித்து, பின்புறம் கைகளைக் கட்டி, நெற்றிப் பொட்டைத் துப்பாக்கியினால் துளைத்து தெருவோரங்களில் வீசி எறிகின்றனர். ஈக்கள் மொய்க்கும் அந்தப் பிணங்களில் ஒரு கயிறு கட்டிய சிறுகுறிப்பு: ''ஜே.வி.பி.த் தலைவன் ரோகன விஜயவீராவைப் பின்பற்றியதற்கான தண்டனை''. இன்னும் பல இளைஞர்களின் பிணங்கள் கழுத்திலே 'டயர்' சுற்றிப் பாதி எரித்த நிலையில் தெருவோரங்களில் கிடக்கின்றன.

இலங்கைப் பொதுத் தேர்தலை ஒட்டிப் பல நாட்கள் ஜே.வி.பி. நடத்திய பொது வேலைநிறுத்தத்தின் போதிருந்தே இம்மாதிரியான படுகொலைகள் பெரும் எண்ணிக்கையில் நடக்கின்றன. ஜே.வி.பி.யினரை அழிப்பது மட்டுமல்ல, மக்களிடையே பயங்கர பயபீதியையும் விதைக்கிறது பாசிச ஆளும் கும்பல். ஆனால் இவை எதுவும் ஜே.வி.பி.யின் தனிநபர் அழித்தொழிப்பு கொரில்லா போரைத் தடுத்து நிறுத்திவிடவில்லை. அரசியல் கட்சிப் பிரமுகர்கள் -தொண்டர்களும், அரசு அதிகாரிகள் -இராணுவத்தினரும் தொடர்ந்து அழித்தொழிக்கப்படுகின்றனர். துரோகிகள், எதிரி உளவாளிகள் விளக்குக் கம்பங்களிலே கட்டி சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இப்படி அரசு பயங்கரவாதப் படுகொலைகளும், ஜே.வி.பி. எதிர்த்தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 3000 பேர் இவற்றுக்குப் பலியாகியுள்ளனர்.

பாசிச் பிரேமதாசா கனவு காண்பதைப் போல ஜே.வி.பி. அழிக்கப்பட்டுவிடவில்லை. மார்ச்சு 22ம் தேதி இலங்கை - இந்திய இராணுவப் படுகொலைகளுக்கு எதிராக ஒரு கண்டனப் பொது வேலைநிறுத்தம்; ஏப்ரல் 5ம் தேதி ஜே.வி.பி. 1971 ஆம் ஆண்டு பொது எழுச்சித் தியாகிகள் நினைவு நாளும் வெற்றிகரமாக நடத்தியது.

அதேபோல், 10,000 இந்தியப் படையினரைக் கொண்டு வவூனியா காடுகளில் புலிகளைத் தேடி அழிக்கும் முயற்சியிலும் இந்திய இராணுவம் தோல்வியுற்றுவிட்டது. புலிகளின் தலைமையகத்தைத் தேடும்படி வவூனியா காடுகளுக்குப் போன 90 கூர்க்காப் படையினர் பூண்டோடு அழிக்கப்பட்டனர். இந்திய இராணுவ முற்றுகையினால் கணிசமான இழப்புக்களைச் சந்தித்த போதும் புலிகளின் தலைமை முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பிவிட்டது. ஆத்திரமுற்ற இந்திய இராணுவம் நூற்றுக்கணக்கான சிவிலியன் தமிழர்களைக் கொன்றது. இப்போது 3000 துருப்புக்களை ஏவி முல்லைத் தீவை முற்றுகையிட்டுள்ளது.

இந்திய - இலங்கை பாசிஸ்டுகள் மேற்கொண்டுள்ள இந்தப் படுகொலைகள் இலங்கை மக்களிடையே கடும் வெறுப்பு -எதிர்ப்பைத் தூண்டிவிட்டுள்ளது. எனவேதான் ஜே.வி.பி. கொடுத்த பொது வேலைநிறுத்த அறைகூவலுக்கு பெரும் ஆதரவு கிட்டியது; மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப சமாதான - போர்நிறுத்த -பொதுமன்னிப்பு நாடகமாடுகிறது பாசிச பிரேமதாசா கும்பல்.

ஆனால் அடுத்தடுத்து இராணுவ ரீதியில் தோல்விகளையும், இழப்புகளையும் சந்தித்துவரும் இந்திய இராணுவம் இதை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதுகிறது. இதனால் மேலும் இலங்கைப் பிரச்சினைகளில் பிரேமதாசா முன்முயற்சி எடுத்து எந்த நடவடிக்கை எடுப்பதையும் இந்தியா விரும்பவில்லை. ஏற்றுக்கொள்ளாது. இதை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையிலே பிரேமதாசா அறிவித்த போர்நிறுத்தத்துக்குக் கட்டுப்பட இந்திய இராணுவம் மறுத்துவிட்டது. தனது கோரிக்கைக்கு மாறாக ஒரு இந்திய இராணுவம் தனது மண்ணில் போரைத் தொடருகிறது. இருந்தபோதும், பாசிச பிரேமதாசா அரசு அதை ஏற்றுக் கொண்டுள்ளது. முதலாவதாக இந்த போர்நிறுத்தச் சமாதானம் - பேச்சுவார்த்தை - பொது மன்னிப்பு ஆகியன ஒரு நாடகம்தான்! இரண்டாவதாக இந்திய இராணுவத்தை இந்திய ஆதிக்கத்தை எதிர்க்கும் நிலையில் அது இல்லை. மூன்றாவதாக, இந்திய இராணுவத்துக்குப் பதிலாக ஈழவிடுதலைப் போராளிகளை ஒடுக்குவதற்கு சிங்கள இராணுவத்தை அனுப்புவதற்கு இயலாதவாறு ஜே.வி.பி. இயக்கம் ஆயுத பலம் பெற்றுவிட்டது. எனவேதான் முன்பு இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பப் போவதாகக் கூறிவந்த பிரேமதாசா இப்போது அது காலவரையறையின்றி நீடிப்பதைப் பகிரங்கமாகவே ஆதரிக்கிறார்.

பிரேமதாசாவின் போர்நிறுத்தம் -சமாதானம் - பேச்சுவார்த்தைக்கான அழைப்பை முதலில் நிராகரித்த புலிகள் பிறகு அதற்கு சம்மதித்துள்ளனர். இதன்மூலம் அவர்கள் ஒரு தற்காலிகத் தீர்வைக் கூட அடையமுடியாது என்ற போதும் அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முதலிய தனது கைக்கூலிகளைத் தூண்டிவிட்டு மத்திய அரசு எதிர்ப்புக் கூச்சலிடச் செய்கிறது. 'குடிமக்கள் தொண்டர் படை' என்ற கூலிப்படைக்குப் பயிற்சியும் ஆயுதமும் வழங்குவதைத் தீவிரப்படுத்தியுள்ளது.

ஆனால் இந்திய - இலங்கை பாசிச ஆளும் கும்பல்களிடையிலான இந்த முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு ஏதாவது தற்காலிக ஆதாயம் அடைந்துவிடலாம் என்று விடுதலைப் போராளிகள் நம்பினால் அது வெறும் கனவுதான்! ஜே.வி.பி.யினருக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ அரசியல் ரீதியில் அதிகாரப்பகிர்வு செய்து கொடுப்பதற்கான தீர்வு எதுவும் அவர்களிடம் கிடையாது. மாறாக அவர்களை பூண்டோடு அழிப்பதற்கான ''தனிவகை'' கொலைப்படையைத் திட்டமிட்டு உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கூலிப்படைகளை வைத்து கொழும்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் வெடிகுண்டுகளை வைத்தும், கிராமமக்கள் மீது வெறித்தாக்குதல்கள் நடத்தியும் சிங்களர் தமிழ் மக்களைப் படுகொலை செய்கின்றனர். ''தீவிரவாதிகள்'' மீது பழி போட்டு இரு இன மக்களிடையே பகைமையை நிரந்தரமாக்கி வளர்க்கிறார்கள். ஆகவே, பிரமைகளைத் தாக்கி எறிந்து போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. ●

**ஈழத்தில் ஆக்கிரமிப்புப் போர் படுகொலைகளைத் தொடாந்து ''வெற்றிகரமாக'' நடத்தி வருவதற்காக இந்தியத் துணைத் தளபதி கல்கத்துக்கு ''சர்வோத்தம் யுத்தம்'' விருது**



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

11

16-30 ஏப்ரல்' 89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

## நேபாளத்துக்கு எதிராக இந்தியப் பொருளாதார முற்றுகை

# இன்னொரு பிராந்திய ஆதிக்க - விரிவாக்க நடவடிக்கை

கடல்வழித் தடமில்லாதபடி, நான்குபுறமும் நிலம் சூழ்ந்த சிறிய, இமயமலை அண்டை நாடான நேபாளத்துக்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடை - முற்றுகை விதித்துள்ளது. இதன்மூலம் தெற்கு ஆசியாவில் தனது விரிவாக்கம் மற்றும் பிராந்திய ஆதிக்க நோக்கத்தை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. இது, பலவீன மான ஒரு அண்டை நாட்டின் கையை முறுக்கி கழுத்தைத் திருகி தனது ஆதிக்கத்துக்கு உட்பட் டுத்தான் தொடர்ந்து அடங்கி இருக்கவேண்டும் என்று நிர்பந்திக்கும் பிராந்திய ரௌடித்த னம் தவிர வேறு ஒன்றுமில்லை.

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான அரசியல், இராணுவ, சமூக -கலாச் சார உறவுகளைத் தீர்மானிப்பது 1950 ஆம் ஆண்டு இரு நாடுகளும் கைச்சாத்திட்ட சமாதான மற்றும் நட்புறவு ஒப்பந்தம் ஆகும். அது இரு நாடுகளின் சுதந்திரம் மற்றும் சுயாதிபத்தியத்தை அங்கீகரித்தாலும், மறைமுகமாக இந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதாகும். இந்தியர்களும் நேபாளியர்களும் இருநாடுகளிலும் சில உயர் அரசு பதவிகள் தவிர இராணுவம், அரசு பணி கள் உட்பட வேலைசெய்யும் உரிமை, சொத்துரிமை, வர்த்தக உரிமை,பயண உரிமை ஆகி யன தடையின்றி அனுபவிக்கலாம்.

அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்தியாவும் நேபாளமும் கூட்டுப் பொறுப்பேற்பது -கலந்தாலோசிப்பது; நேபாளத்துக்குத் தேவையான ஆயுதங்கள் - தளவாடங்கள், வெடி பொருட்களை இந்தியா வழியாக எடுத்துச்செல்ல அனுமதிப்பது; இருநாடுகளின் பாதுகாப் புக்குப் பாதகம் விளைவிக்கும் அந்நியர்களை பணியமர்த்திக் கொள்ளக்கூடாது ஆகியவை போன்ற பிரிவுகள் 1950 ஆம் ஆண்டு சமாதான மற்றும் நட்புறவு ஒப்பந்தத்தில் உள்ளன. கூடவே போக்குவரத்து மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தானது. இது அவ்வப் பொழுது புதுப்பிக்கப்பட்டது. இதன் கீழ் இந்தியா பல சலுகைகள் வழங்கியுள்ளதாகவும், பல வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடனும், உதவியும் செய்துள்ளதாகவும் இந்தியா கூறிக்கொள்கி றது. ஆக, அரசியல் இராணுவ ரீதியில் நேபாளத்துடன் ''தனிச்சிறப்பான உறவும்'', பொரு ளாதார ரீதியில் ''நேபாளம் மிகவும் சலுகை பெற்ற நாடு'' என்ற தகுதியில் வைத்தும் நடத்துகி றது.

ஆனாலும் போக்குவரத்து மற்றும் வர்த்தகம் ஆகிய இரண்டுக்கும் தனித்தனி ஒப்பந்தம் போடவேண்டும் என்று நேபாளம் வற்புறுத்தி வந்தது. அதன்மூலம் நேபாளச் சந்தையின் மீது இந்தியா பெற்றிருந்த ஏகபோக ஆதிக்கத்தைத் தடுப்பதும், போக்குவரத்து மற்றும் கிடங்குவ சதி போன்ற கட்டணங்களைச்செலுத்திவிட்டு உலகச் சந்தையில் இருந்து எந்தப் பொருளை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளும் உரிமை பெறுவதும் நேபாளத்தின் நோக்கமாக இருந்தது. 1978 ஜனதா கட்சி ஆட்சியின்போது இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்ட போது நேபாளத்தின் கோரிக்கையை ஏற்றுத்தனித்தனி ஒப்பந்தம் போட்டனர். 1983 மற்றும் 1988 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் புதுப்பிக்க வந்தபோது போக்குவரத்து மற்றும் வர்த்தகம் ஆகிய இரண்டுக்கும் ஒரே ஒப்பந்தம் போடவேண்டும் என்று வற்புறுத்தியது இந்தியா. எனவே 1988 மார்ச் மாதம் ஒப்பந்தங்கள் காலாவதியான போது, அவற்றைப் புதுப்பிக்க மறுத்து, இரு தவணைகளில் ஓராண்டு நீட்டிப்பதற்கு மட்டும் ஒப்புக்கொண்டது. இரு அரசுப் பிரதிநிதிகளும் சந்தித்து ஒரு நகல் ஒப்பந்தத்தைத் தயாரித்தனர். அதையும் அங்கீகரிக்காது, பழைய ஒப்பந்தத்தையும் காலாவதி ஆகிப்போனது என்று அறிவித்துவிட்டு நேபாளத்துக்கு எதிராக ஒரு பொருளாதார முற்றுகையை அமுலாக்கிவிட்டது இந்திய அரசு. இப்போது நேபாளத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்குக் கடும் தட்டுப்பாடு உருவாகி நாட்டின் பொருளாதாரமே நிலை குலைந்து போயுள்ளது.

இந்நிலைக்குக் காரணம் நேபாள அரசுதான் என்று கூறும் இந்தியா பின்வரும் குற்றச் சாட்டுகளை அதன்மீது சுமத்துகிறது. ★ இந்தியாவில் 35 லட்சம் நேபாளியர்களும், அங்கே 1.5 லட்சம் இந்தியர்களும்தான் பணியாற்றுகிறார்கள். இருந்தாலும் வேலை உரி மைச் சான்றிதழ் முறையை அறிமுகப்படுத்தி நேபாளம் கட்டுப்படுத்துகிறது. ★ இந்தியர் கள் வங்கிக்கணக்கு வைத்துக் கொள்வதிலும், வாகனங்களைப் பதிவுசெய்வதிலும் கட்டுப் பாடுகள் போடப்பட்டுள்ளன. ★ நேபாள -சீன எல்லை நெடுக 10 மைல் தூரம் இந்தியர்கள் போவதற்குத் தடைவிதித்துள்ளது. ★ இந்தியப் பொருட்களுக்கு கூடுதலான தீர்வை விதித்துள்ளது; ஆனால் சீனா போன்ற பிற நாடுகளுக்குச் சலுகை வழங்கியுள்ளது; ★ இந்திய எல்லை அருகே உள்ள தராய் பிராந்தியத்தில் சாலை அமைப்பதற்கு சீனாவை அனுமதித்தது; இந்தியாவின் தலையீடு காரணமாக அதைத் தவிர்த்து கொரியாவுக்கு ஒதுக்கி யது. ★ சீனாவில் இருந்து ஆயுதங்களை, குறிப்பாக விமான எதிர்ப்பு பீரங்கிகளை நேபா ளம் வாங்கியுள்ளது. ★ சர்வதேச விவகாரங்களில், குறிப்பாக ஆஃப்கான், கம்பூச்சியா போன்ற விவகாரங்களில் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடுகள் எடுத்து வருகிறது.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது வெறுமனே பொருளாதார ரீதியானதாகத் தோன்றும் இந்திய - நேபாள விவகாரம், ஆழமாக ஆராயும்போது அரசியல் மற்றும் இரா ணுவ சிக்கல் நிறைந்திருப்பதைக் காணமுடியும். ''மிகவும் சலுகை பெற்ற நாடு'' என்ற தகுதி யினால் ஆதாயம் அடையும் நேபாளம் இந்தியாவுடனான ''தனிச்சிறப்பான

படிப்பகம்

www.padippakam.com

உறவுகளை'' முறித்துக்கொண்டு தனது சுயாதிபத்திய உரிமையை நிறுவிக்கொள்ள முயலுவதை இந்தியா எப்படி அனுமதிக்க முடியும் என்பதுதான் இதன் கேள்வி! உண்மை என்னவென்றால் பூகோள நிலைமையின் காரணமாக நேபாளத்தின் மீது இந்தியா செலுத்திவரும் மேலாதிக்க, விரிவாக்க முயற்சிகளை முறியடிப்பதற்காக நேபாளம் தொடர்ந்து முயன்று வருகிறது.

இரானா பரம்பரை ஆட்சியின்கீழ் நீண்டகாலமாக இருந்து வரும் நேபாளத்தின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிட்டு 1950 இல் பி.பி.கொய்ராலா என்பவரது தலைமையிலான நாடாளுமன்ற ஆட்சியை ஏற்படுத்தியது. அரசின் அதிகாரபூர்வமற்ற அதிபராக மன்னர் நீடித்தார். ''முடியரசு'' மற்றும் ''குடியரசு'' இரண்டுக்குமிடையே நிலவிவந்த முரண்பாட்டை இந்தியா பயன்படுத்திவந்தது. ஆனால் 1960 இல் மன்னர் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தி நேரடி நிர்வாகப் பொறுப்பேற்றார். இந்திய அரசு அதற்கு எதிராக கண்டனம் தெரிவித்ததற்குமேல் ஒன்றும் செய்யமுடியவில்லை. பிறகு ஜனநாயக ஆட்சிமுறைக்காக நேபாள மக்கள் தொடர்ந்து போராடியபோது ''பஞ்சாயத்து'' என்னும் போலி ஜனநாயக பொம்மை ஆட்சியை நிறுவி மன்னரே ஆண்டு வருகிறார்.

நேபாளத்தின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவதை எதிர்த்தும், அதன் மேலாதிக்கத்தை எதிர்த்தும் அரசியல் இராணுவம் மற்றும் பொருளாதார ரீதியில் சுயாதிபத்தியத்தை நிறுவிக்கொள்ள மன்னர் விரும்புகிறார். குறிப்பாக இந்தியாவின் சீன ஆக்கிரமிப்புப்போர், பாகிஸ்தானுடனான தகராறு, வங்கதேசத்தை உருவாக்க பாகிஸ்தானை துண்டாடியது, சிக்கிம் கைப்பற்றுதல் கடைசியாக இலங்கை மற்றும் மாலத்தீவுகளில் இந்திய இராணுவ நடவடிக்கை ஆகிய இந்தியாவின் விரிவாக்க - பிராந்திய ஆதிக்கச் செயல்கள் நேபாளத்தை அச்சுறுத்தின. ''ஜனநாயக ஆட்சி'' முறைக்காகப் போராடி வரும் சக்திகளில் ஒரு பிரிவினரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு மன்னருக்கு எதிராக இந்தியா தலையிடும்; இலங்கையிலே ''பூமாலை நடவடிக்கை'' என்ற பெயரில்




தலையிட்டதைப் போல நடக்கும் என்றும் அஞ்சுகிறது. எனவேதான் இராணுவத்தை இரட்டிப்பாக்கவும், விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் வாங்கியுள்ளது.

''தனிச்சிறப்பான உறவோ'', ''மிகவும் சலுகைபெற்ற நாடு'' என்ற தகுதியோ தனக்குத் தேவையில்லை; சர்வதேச விதிகளின்படியிலான போக்குவரத்து மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்டுகொள்வோம் என்று நேபாளம் கோருகிறது. ஆனால் நிலம் சூழ்ந்த நாடுகளுக்கான வழித்தடம் பற்றிய ஐ.நா. தீர்மானத்திலேயோ, கடல்வழி விதிகளுக்கான மாநாட்டுத் தீர்மானத்திலேயோ இந்தியா கையொப்பமிட மறுத்துவிட்டது. எனவே அவை இந்தியாவைக் கட்டுப்படுத்தாது. தெற்கு ஆசிய நாடுகளிடையே நேபாளத்துக்கே ஆதரவு உள்ளது. கங்கை - பிரம்மபுத்திரா ஆறுகள் பற்றிய பேச்சுவார்த்தையில் நேபாளத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வங்கதேசம் நிர்பந்திக்கிறது; அதனால் ஒப்பந்தம் காணமுடியாமல் கிடக்கிறது. நேபாளத்தையும் நதிநீர் ஒப்பந்தத்தில் சேர்க்கும்போது வங்கதேசத்தின் வழியாக நதிவழி - கடல்வழி போக்குவரத்து உரிமையை நேபாளம் பெற்றுவிடும் என்பதால் இந்தியா அதற்கும் மறுத்துவிட்டது.

இப்போது பொருளாதா முற்றுகை நிர்பந்தத்தின் மூலம் நேபாளத்தைப் பணிய வைத்துவிட முடியும் என்று இந்தியா நம்புகிறது. நேபாளத்தின் மீதான இந்திய மேலாதிக்கம் நியாயமானது, உரிமையுடையது என்று இந்தியப் பத்திரிக்கைகளும் பிரச்சாரம் செய்கின்றன. ''இவ்வளவு குட்டிநாடான எங்கள் மீதா மிகப்பெரிய நாடான இந்தியா தனது வீரத்தைக் காட்டுவது'', ''இந்தியாவின் உதட்டிலே தேனும் உள்ளத்திலே நஞ்சும் வைத்துப் பேசுகிறது'' என்று நேபாளியர்கள் சாடுகிறார்கள். இந்தியாவின் பொருளாதார முற்றுகையினால் கடுமையான நெருக்கடியை சிக்கித்தவிக்கும் நேபாளத்திலே இந்திய எதிர்ப்பு - வெறுப்பு வளர்ந்துவருகிறது. ஆங்காங்கே இந்திய எதிர்ப்பு இயக்கங்கள் நடக்கின்றன.

''இந்திய ஆதிக்க எதிர்ப்பு என்கிற பெயரில் மேற்கு ஏகாதிபத்திய உலகச்சந்தைக்கு நேபாளத்தைத் திறந்துவிடவே முடியரசு முயலுகிறது'' என்று கூறி, முடியரசுக்கு எதிராக ஜனநாயக முற்போக்கு சக்திகளை'' விலைக்கு வாங்கி நேபாள அரசியலில் இந்தியா தலையிடும். இலங்கையின் ஜெயவர்த்தனேயைப் போல ஆரம்ப சவடாலுக்குப்பிறகு நேபாள முடியரசும் இந்திய முற்றுகை - மிரட்டல் -நிர்ப்பந்தத்துக்குப் பணிந்துபோகக் கூடும். எனவே ஏற்கனவே நேபாளத்தில் ஜனநாயகப் புரட்சிக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள புரட்சிகரக் குழுக்கள் அதன் ஒரு அங்கமாக இந்திய விரிவாக்க, பிராந்திய ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்தையும் நடத்த வேண்டும். அண்டை நாடுகளின் மீது விரிவாக்க, பிராந்திய ஆதிக்க வெறிகொண்டு இந்திய பாசிஸ்டுகள் எடுக்கும் நடவடிக்கைகளை இந்திய மக்கள் எதிர்த்து முறியடிக்க வேண்டும். ●

**நேபாள எல்லை நகரமான பீர்கஞ்ச்சில் மண்ணெண்ணெய் முதலிய அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் காத்துக்கிடக்கிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# சாதிவெறிக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடும்

# கலப்புமணத் தம்பதிகளின் கதை!

ஈராயிரம் ஆண்டுகளாகக் கட்டி வளர்த்த சாதி முறை - அதை அவ்வளவு எளிதில் மீறிவிட அனுமதிப்பார்கள் சாதி வெறியர்கள்? எத்தனையோ இளங்காதலர்களைக் கொன்றவர்கள், எத்தனையோ, இளைஞர்களைத் தற்கொலைக்குத் தள்ளியவர்கள் - இளம் கலப்புமணத் தம்பதிகளான கீலானந்த் ஜாவையும் மீனாத்தி தேவியையும் வாழவிடுவார்களா?

கீலானந்த்ஜா — சாதிவேறுபாட்டைக் கடந்த காதலின் உன்னதத்தை நிலைநாட்டத் துணிந்து, தனது பிராமணச் சாதியை விட்டு தாழ்த்தப்பட்ட பெண்ணான மீனாத்தி தேவியை 1979ல் மணந்தார். அதே ஆண்டு பீகார் அரசு கலப்புத் திருமணத்தை ஆதரிக்கும் சீர்திருத்தத் திட்டம் ஒன்றை அறிவித்து, ஐபாயிரம் ரூபாய் பரிசும் அரசு வேலையும் தருவதாகச் சொன்னது. தாழ்த்தப்பட்ட மக்கள சாதிவெறிபிடித்த நிலப்பிரபுக்களால் தினமும் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க வக்கற்ற பீகார் அரசு கலப்புத் திருமணத்துக்குப் பரிசளித்து ஆதரிப்பதை நம்பி அரசை அணுகினார். எதிர்பார்த்த படியே அவருக்கு ஐயாயிரம் ரூபாயும் தர்பங்கா மாவட்டக் கமிஷனர் அலுவலகத்தில் பியூன் வேலையும் கிடைத்தது. இனி என்ன, வாழ்க்கைப் பயணம் மகிழ்ச்சியாக இருக்கும் என்று நம்பினார்.

ஆனால் சாதிவெறியர்கள் விட்டுவிடுவார்களா? அவரது செய்கை தங்கள் சாதிக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதி தொல்லைகள் கொடுத்தனர் பார்ப்பன அதிகாரிகள். இதர மேல் சாதியினருடன் சேர்ந்து கொண்டு இழிவாக நடத்தினர். ''அவளை விவாகரத்து செய்துவிடு'' என்று மிரட்டினார்கள். எதிர்பாராத விதமாக மீனாத்தி தேவி மிக மோசமாகத் தீக்காயம் பட்டுத் தவித்தபோது மருத்துவ வசதிக்குக்கூட உதவ மறுத்தனர். கீலானந்த்ஜா தமக்குச் சொந்தமான கொஞ்சநஞ்ச நிலத்தை அடகு வைத்து மரணப் படுக்கையிலிருந்த மனைவிக்குச் சிகிச்சையளித்தார். ''அவள்இறந்து போகட்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். காரணம், அவள் தாழ்த்தப்பட்டவள்'' என்று வேதனையுடன் குமுறினார் கீலானந்த்ஜா. மனைவியின் சிகிச்சைக்காக விடுப்பிலிருந்த ஒரு மாதத்திற்குப் பிறகு அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக மேல்சாதி அதிகாரிகள் வாய்வழி உத்தரவு போட்டனர். முறைப்படி அதிகார பூர்வமான ஆணைகூடத் தரவில்லை. சட்டவிரோதமாகவும், அடாவடித்தனமாகவும் இதைச் செய்தனர்.

1984 ஜூனில் குடும்பத்துடன் டெல்லிக்குப் போய் பீகார் பவனின் தமக்கு நியாயம் கோரி உண்ணாவிரதமிருந்தார். மக்கள் உரிமைக்காகப் போராடும் சிலர் அவர் பிரச்சினையை அரசின் கவனத்துக்குக் கொண்டு போனார்கள். அப்போது டெல்லிக்கு வந்த அன்றைய பீகார் முதல்வர் பிந்தேஸ்வரி துபேயை கீலானந்த்ஜா சந்தித்தார். உடனடியாக வேலை கொடுக்கவும், மனைவியின் மருத்துவச்செலவுக்கான தொகையைத் தரவும், அடகு வைத்த நிலத்தை மீட்கவும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

நீதி கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு குடும்பத்துடன் பீகாருக்குத் திரும்பினார். ஆனால் தர்பங்கா அலுவலகத்தில் உத்தரவு வரவில்லையென்று அவரை விரட்டினர். தான் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்தார். இருப்பினும் சமாதானப்படுத்திக் கொண்டு பீகார் அரசின் நம்பிக்கைத் துரோகம், மோசடியை பிரதமர் ராஜீவிடமே நேரில் முறையிட முடிவு செய்தார்.

மீண்டும் 1984 அக்டோபரில் டெல்லிக்குச் சென்று இரண்டாம் முறையாக தமக்கு நியாயம் கோரி பீகார் பவனில் தம் குடும்பத்துடன் உண்ணாவிரதமிருந்தார். ஆனால் மேல்சாதி பீகார் அதிகாரிகள் இதைச் சகித்துக் கொள்ள முடியாமல் அங்கிருந்து அவர்களை விரட்டினர். அவர் குழந்தைகளில் ஒன்றிற்கு மஞ்சள் காமாலை நோய் தாக்கியது. ஆனாலும் உறுதி குலையாமல் குடியரசுத் தலைவர் மாளிகை முன்னுள்ள ''போட்கிளப்'' மைதானத்திற்குப் போய் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். பின்னர் பிரதமரின் புகார் மனு அலுவலகத்திலிருந்து அவருக்கு கடிதம் வந்தது. வேலைக்குச் செல்ல முடியாத காலத்துக்கு சம்பளம்; மனைவி - குழந்தைகளின் மருத்துவச் செலவுக்கான உதவித் தொகை; அடகு வைத்த நிலத்தை மீட்க நிதி; ஜா கேட்டுக் கொண்டபடி இடமாற்றம் செய்து கோசி மாவட்டத் தலைநகர் கிருஷ்ணகாஞ்ச்சில் வேலை போட்டுத்தருவது; ஜாவை மிரட்டித் துன்புறுத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை - இவ்வளவு வாக்குறுதிகளையும் கொடுத்தது பிரதமர் அலுவலகம்! அந்த நம்பிக்கையில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு குடும்பத்துடன் பீகாருக்குப் புறப்பட்டார் கீலானந்த்ஜா.

நம்பிக்கையோடு கிருஷ்ணகாஞ்ச் அலுவலகத்துக்குச் சென்ற ஜாவுக்கு மீண்டும் காத்திருந்தது ஏமாற்றம். உத்திரவு வரவில்லை என்று அங்கேயும் விரட்டினர். அமைச்சர் என்ன, அதிகாரிகள் என்ன, பிரதமரே கூட சாதிய எல்லையை மீறி எதையும் செய்து விடமுடியாது என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டினார்கள். தொடர்ந்து அவருக்கு வேலை மறுக்கப்பட்டது; தொடர்ந்து வாக்குறுதிகள் மீறப்பட்டன. அதிகாரவர்க்க சாதிவெறியர்களின் அக்கிரமங்களுக்கு அடிபணிந்துவிடாமல், உறுதிகுலையாமல் 1986 ஜூலையில் மூன்றாவது முறையாக மீண்டும் டெல்லியிலே உண்ணாவிரதத்தைத் தொடங்கினார் கீலானந்த்ஜா. அதிகாரிகளுக்கு உத்தரவு வந்து சேருவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், உடனே வேலையில் வந்து சேரும்படியும் அவருக்கு பீகார் அரசு கடிதம் எழுதியது.

அரை நம்பிக்கையோடு மீண்டும் கிருஷ்ணகாஞ்சுக்குப் போனார் ஜா

டெல்லி போட்கிளப் மைதானத்தில் தன் குடும்பத்துடன் சாதிவெறியர்களுக்கு எதிராகப போராடும் கீலானந்த்ஜா.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் மீண்டும் உத்தரவு வரவில்லையென்று சாதிவெறிபிடித்த அதிகாரவர்க்கத்தினர் அவரை விரட்டினர். ''வேலையை விட்டு ஓடிவிடு! இல்லையேல் உன் குடும்பத்தையே பூண்டோடு அழித்துவிடுவோம்'' என்று அச்சுறுத்தினர். விரக்தியின் விளிம்புக்கே தள்ளப்பட்ட ஜா, இனி பீகாரில் வாழ முடியாது என்று முடிவு செய்து மே.வங்கத்திலுள்ள சிலிகுரியில் குடியேறி பீடா கடை வைத்து பிழைத்து வந்தார். அப்பகுதியிலுள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அவரது கண்ணீர் கதையைக் கேட்டு உதவ முற்பட்டார்.

அவரது நம்பிக்கையில் உத்வேகம் பெற்ற ஜா, மீண்டும் டெல்லி போட்கிளப் மைதானத்தில், தம் குடும்பத்தாருடன் கிழிந்த தார்ப்பாய் கொட்டகையில், கடந்த ஜனவரி 27ந் தேதி முதலாக தர்ணா போராட்டத்தை நடத்தி வந்தார். அவரது நியாயமான போராட்டத்தை ஆதரிக்கும் பலர், அவர் குடும்பத்துக்கு உணவுப் பொருட்களையும், துணிமணிகளையும் கொடுத்து உதவி வந்தனர். ''பீகாரில் எந்த இடத்தில் வேலை கொடுத்தாலும் நான் போகமாட்டேன். அவர்கள் என்னையும் என் குடும்பத்தையும் அழித்தொழித்து விடுவார்கள். டெல்லியிலுள்ள பீகார் கமிஷனர் அலுவலகத்திலேயே எனக்கு வேலை வேண்டும். நான் மூன்றுமுறை முட்டாளாக்கப்பட்டு விட்டேன். இனியும் நான் ஏமாறத் தயாராக இல்லை'' என்று உறுதியுடன் கூறி தொடர்ந்து போராடினார், கீலானந்த்ஜா.

சாதிவெறிக்கெதிராக தன்னால் இயன்ற முறையிலே தர்ணா போராட்டத்தை நடத்தி வந்த ஜா குடும்பத்தினரை கடந்த ஏப்ரல் 5ந் தேதி இரவு டெல்லி போலீசார் மிருகத்தனமாகத் தாக்கி போட்கிளப் மைதானத்தை விட்டு வெளியேற்றியுள்ளனர். அடுத்தநாள் இதை எதிர்த்து பாராளுமன்றத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் வாதம் செய்தனர். சர்வாதிகார சபாநாயகர் பலராம் ஜாக்கர் ''இது ஒரு மாநிலத்தின் விவகாரம்; அதை இங்கே விவாதிக்க முடியாது'' என்று தீர்ப்பளித்தார். தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல், மக்கள் உரிமை முதலான விவகாரங்களுக்கு உள்துறை அமைச்சர்தான் பொறுப்பாக பதிலளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வாதிட்டும்கூட 'இது முறையற்றது' என்று விதிகளைக் காட்டி வாயடைத்தார் சபாநாயகர்.

சமூகக் கொடுமைகளை எதிர்த்து தோளோடு தோள் கொடுத்துப் போராடிய கீலானந்த் ஜாவும் அவர் மனைவியும் குழந்தைகளும் இன்று வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். சாதிக் கொடுமையையும் தீண்டாமையையும் சீர்திருத்தங்களால் ஒழித்துக்கட்டிவிட்டதாக நாடகமாடும் ஆட்சியாளர்களின் முகத்திரையைக் கிழித்து, அவர்களின் சாதி -மதவெறியின் கோர முகத்தை தெளிவாகவே படம் பிடித்துக் காட்டிவிட்டது ஜா குடும்பத்தினரின் உறுதிமிக்க போராட்டம்! கூடவே, சாதிவெறியர்களுக்கு எதிராக எதையும் செய்ய வக்கற்ற பாராளுமன்றம்; அதன் யோக்கியதையை அம்பலப்படுத்த திராணியற்ற போலிக் கம்யூனிஸ்டுகளின் உண்மைச் சொரூபத்தையும் தெளிவாகவே படம் பிடித்துக் காட்டிவிட்டது!

— மனோகரன்

## பகுத்தறிவா? ஆபாசமா?



கடலூரில் 'பரபரப்பான பட்டிமன்றம்' என்று பகுத்தறிவாளர் கழகம் நடத்திய அரங்கத்துக்குள் அனுமதிச் சீட்டு வாங்கி ஆவலோடு சென்றேன்; ஏமாற்றப்பட்டேன். வாலிபர்களின் சிரிப்பொலியும் கைத்தட்டலும் அரங்கத்தை நிறைத்துக் கொண்டிருந்தன. அப்படி என்னதான் அங்கு நடந்தது என்கிறீர்களா?

இராமாயணத்திலே இடம்பெறுகிற ஆபாசங்களை மட்டும் தொகுத்து பச்சையாக -கொச்சையாக ஒரு குழு பேச, அதனைவிட மகாபாரதத்தில்தான் அதிகம் என்று எதிர்குழு ஆபாசங்களை அடுக்கி வைக்க வக்கிரமான, கீழ்த்தரமான பேச்சுக்களின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தனர். இந்த ஆபாச விஷயங்களை ஆர்வமாகக் கேட்டு ஆனந்தப்படுபவர்களைத் தான் அதிகமாகப் பார்க்க முடிந்தது. அதுமட்டுமா? பட்டிமன்றத்தில் வாதிடுபவர்களும் தங்களுக்குள் ஆபாசமான 'ஜோக்'குகளால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு தமது அரிப்பைச் சொறிந்து கொண்டனர். இது, கிராமங்களில் கரக ஆட்டக்காரர்கள் தமது ஆபாச சைகைகளால் கூட்டத்தினரை கவர்ந்திழுக்கும் கீழ்த்தரமான உத்தியைப் போலவே இருந்தது.

மகாபாரதம், இராமாயணம் முதலான புராண இதிகாசங்கள் எல்லாமே ஆபாசக் குப்பைகள், கட்டுக் கதைகள், விஞ்ஞானத்துக்கு விரோதமானவை தான்! இதனை மக்களுக்கு உணர்த்தி மூட நம்பிக்கை சகதியிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது அவசியமான பணிதான்!

ஆனால் இதை ஆபாசப் பட்டிமன்றங்கள் மூலம் சாதிக்க முடியுமா? அறியாமையில் உழலும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் மூட நம்பிக்கை முக்கிய பங்கு வகிக்கின்றது. முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றது. இந்த அரசும் இதை ஆராதிக்கிறது. ஆரம்பப் பள்ளி, ஆல் இண்டியா ரேடியோ, டி.வி. உள்ளிட்ட அனைத்திலுமே மூட நம்பிக்கைகளை திட்டமிட்டு ஊட்டி வளர்க்கின்றனர். இவைகளிலிருந்து மக்களை மீட்க வேண்டுமானால் அறிவுபூர்வமான பிரச்சாரத்தாலும், ஆக்கபூர்வமான வெகுஜன இயக்கங்கள் மூலமாகத்தான் முடியுமேயன்றி, இத்தகைய ஆபாச பட்டிமன்றங்களால் அல்ல; இதன் மூலம் வக்கிர உணர்வைத்தான் வளர்க்க முடியுமே தவிர, பகுத்தறிவைப் பரப்ப முடியாது.

இன்று பெருவாரியான பெண்கள்தான் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். ஒரு பெண்ணாவது அங்கே அரங்கத்துக்குள் வந்தாரா? வக்கிர உணர்வு கொண்ட வாலிப - வயோதிக அன்பர்கள் அணி திரண்டார்களே தவிர, பகுத்தறிவாளர் கழக முன்னோடிகளின் குடும்பப் பெண்கள் கூட அங்கே வரவில்லையே ஏன்?

சுருக்கமாகச் சொன்னால், ஆபாசத் திரைப் படங்களைப் போட்டு இளைஞர்களைச் சீரழித்து காசு பண்ணும் சினிமா கொட்டகைக்காரனுக்கும் இவர்களுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. இதில் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்ற கௌரவமான போர்வை வேறு! இற்றுவிழும் தமது அமைப்புக்கு முட்டுக் கொடுத்து நிறுத்த இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கிவிட்ட இக்கழிசடைகளை, புரட்சிகர இளைஞர்களே, புறக்கணியுங்கள்!

— தகவல்: மோகன், கூடலூர்.

## ஆபாச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் உள்ள காமதேனு திரையங்கு முன்பு 26-3-89 அன்று ம.க.இ.க. திருச்சி கிளை ஆபாச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்தத் திரையங்கில் காலைக் காட்சியாக மலையாள - ஆங்கில ஆபாசப் படங்களும், இடையிடையே நீலப்படங்களும் திரையிடப்பட்டு வந்தன. இதையறிந்த பகுதிவாழ் மக்கள் இந்த அயோக்கியத்தனத்தைச் சாடுவதும், தங்களுக்குள் வருத்தப்பட்டுக் கொண்டும் இருந்த நிலையில், ம.க.இ.க. துணிந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பெரிதும் வரவேற்று ஆதரவளித்தனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தோழர் தமிழ்மணி ஆபாசத்தை எதிர்த்துப் பேசிய விளக்க உரையை நூற்றுக்கணக்கானவர்கள் வரவேற்று அங்கீகரித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்காக போலீசாரிடம் முன்கூட்டியே அனுமதிக்காக எழுதிக் கொடுக்கப்பட்டதால், போலீசார் மூலம் திரையரங்கு நிர்வாகத்திற்கு செய்தி பரிமாற்றம் நடந்து, அதன் விளைவாக ஆர்ப்பாட்டம் நடந்த குறிப்பிட்ட வாரத்தில் திரையங்க நிர்வாகம் பக்திப் படத்தை ஓட்டியது! இதை அம்பலப்படுத்தி பகுதி மக்களிடம் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் விளக்கப்பட்டது. மூக்குடைப்பட்ட அத்திரையரங்க நிர்வாகம் ஆபாசப் படங்களைத் திரையிடாமல் இருப்பதைக் கண்டு, இதுபோன்ற போராட்டங்களின் மூலம்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை பகுதிவாழ் மக்கள் பெற்றுள்ளனர்.

— தகவல்: மக்கள் கலை இலக்கியக் கழகம், திருச்சி கிளை.

படிப்பகம்

www.padippakam.com

# 'அரிஜன'ங்களைக் கொன்ற நிலப்பிரபு அழித்தொழிக்கப்பட்டான்!



நிவாரண முகாமுக்கு வந்து ஆசைவார்த்தை கூறியும் மிரட்டியும் வழக்குகளை விலக்கிக் கொள்ளும்படி கோரும் போலீசு.

**சா**திவெறிபிடித்த பண்ணை பிரபுக்களால் துடிக்கத் துடிக்க கொல்லப்படும் தாழ்த்தப்பட்ட மக்களை அரசோ, அதன் காவல் துறையோ காத்ததாக வரலாறில்லை. கொலை பாதக கிரிமினல் பேர்வழிகளான நிலப்பிரபுக்களை அரசின் சட்டங்களோ நீதி மன்றங்களோ தண்டித்ததாக வரலாறில்லை.

ஆனால் அடக்கு முறைக்குள்ளானவர்கள் இப்படியே அடங்கிவிட மாட்டார்கள். தங்கள் மீது ஏவப்பட்ட அடக்கு முறையை மறந்துவிடவும் மாட்டார்கள். வஞ்சம் தீர்க்க அவர்கள் நெஞ்சம் கொதித்துக் கொண்டேதான் இருக்கிறது.

1969ல் தஞ்சை கீழ்வெண்மணி கிராமத்தில் அரைப்படி நெல் அதிகமாக கூலி கேட்டுப் போராடிய விவசாயத் தொழிலாளர்கள் 43 பேரை ஒரே குடிசையில் போட்டு பூட்டி உயிருடன் கொளுத்தினார்கள் பண்ணை பிரபுக்கள். ஆனால் கொலைகாரர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை. இப்படு கொலையை முன்னின்று தலைமையேற்று நடத்திய கொலைபாதக மிராசுதார் கோபால கிருஷ்ண நாயுடு போன்ற பெரிய மனிதர்கள் இயல்பிலேயே இத்தகைய செயலைச் செய்யத் தயங்குவார்கள் என்று கூறி உயர்நீதி மன்றம் விடுதலை செய்தது. போலிக் கம்யூனிஸ்டுகள் வெண்மணி தியாகிகளுக்கு நினைவுச் சின்னம் எழுப்பினார்களே தவிர, கொலைகார மிராசுதாரைத் தண்டிக்கவில்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குமுன் அதே நினைவுச் சின்னத்திற்கு முன்பு கோபாலகிருஷ்ண நாயுடு அழித்தொழிக்கப்பட்டான்.

இப்போது ஆந்திராவிலிருந்து, ஒரு கொடிய நிலப்பிரபு அழித்தொழிக்கப்பட்ட செய்தி வெளியாகியுள்ளது. 1985ல் கரம்சேடு கிராமத்தில் 8 தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்று, அவர்களது அற்ப உடமைகளைச் சூறையாடி; பெண்களைக் கற்பழித்து அட்டூழியம் புரிந்த "கம்மா" சாதி வெறியர்களின் தலைவனும், கொடிய நிலப்பிரபுவும், ஆந்திர முதல்வர் என்.டி.ஆரின் சம்பந்தியுமான செஞ்சுராமையா சமீபத்தில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

**க**ரம்சேடு; ஆந்திராவின் பிரகாசம் மாவட்டத்திலுள்ள சின்னஞ்சிறு கிராமம். 1000க்கும் சற்றே அதிகமான தாழ்த்தப்பட்ட மக்களான "மடிகா" சாதியினர் பண்ணையடிமைகளாக வாழ்ந்த கிராமம். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கல்ளக் குவித்துக் கொண்டு கம்மா நாயுடு சாதிவெறி நிலப்பிரபுக்கள் கோலோச்சும் பகுதி.

செஞ்சுராமையா அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய நிலப்பிரபு; கந்துவட்டிக்காரர். 4 ஏக்கரா பரப்பளவில் அந்தப் பகுதியிலேயே மிக ஆடம்பரமான அரண்மனை போன்ற பங்களாவைக் கட்டிக் கொண்டு அடக்குமுறை தர்பாரை நடத்தி வந்தார். என்.டி.ஆர். குடும்பத்தில் பெண் எடுத்து பெண் கொடுத்த நெருக்கமான உறவினர்.

கீழ்த்தஞ்சை மாவட்டக் கிராமங்களைப் போலவே கரம்சேடு கிராமமும் நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைக்கு எடுப்பான முன்னுதாரணம் ஆகும். அரசின் சட்டங்களோ திட்டங்களோ அங்கே செல்லுபடியாகாது. காலங்காலமாக நீடித்துவரும் நிலப்பிரபுத்துவ மரபுகளும், நீதியும், நிலப்பிரபுக்களின் சட்டங்களும் தான் அங்கே செல்லுபடியாகும். சுருக்கமாகக் கூறினால் ஒரு இணையான அரசாங்கத்தை - சமஸ்தானத்தை கேள்வி முறையின்றி நிலப்பிரபுக்கள் ஆண்டு வந்தனர்.

அதிகாலையில் அந்தக் கிராமத்துக் கோயில் மணி ஒலிக்கத் துவங்கும். உடனே பண்ணைக் கூலிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் வேலைக்கு செல்ல வேண்டும். இல்லையேல் சவுக்கடிதான் கிடைக்கும். வேலைக் களைப்பால் அசந்து தூங்கிவிட்டால் அந்தப் பண்ணைக் கூலியை கட்டிலில் வைத்து கட்டி ஊர் நடுவே வைத்து நிலப்பிரபுக்கள் சவுக்கால் அடிப்பார்கள். தாழ்த்தப்பட்ட பெண்களை நிலப்பிரபுக்கள் கற்பழிப்பது கேள்வி முறையற்றது.

1985ம் ஆண்டு ஜூலை 16ம் நாளன்று 'தாழ்த்தப்பட்ட' பெண்ணுக்கும், மேல்சாதி கம்மா இளைஞனுக்கும் தண்ணீர் எடுக்கும் போது ஏற்பட்ட வாய்ச் சண்டையைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற கம்மா சாதி நிலப்பிரபுக்கள் தாழ்த்தப்பட்டோரின் சேரிகளைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். பயங்கர ஆயுதங்களுடன் சாதிவெறியர்கள் நடத்திய தாக்குதலில் தாழ்த்தப்பட்ட 8 பேர் மாண்டனர். 70 பேர் படுகாயமுற்றனர். ஏறத்தாழ மூன்று மணி நேரத்துக்கு நிலப்பிரபுக்களின் கொலைவெறியாட்டம் நடந்தது. சேரிப் பகுதி ரணகளமாக்கப்பட்டு அவர்களின் அற்ப உடமைகள் அடித்து நொறுக்கப்பட்டன. பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டு குற்றுயிரும் கொலையுயிருமாக வயல்களில் வீசியெறியப்பட்டனர். தாழ்த்தப்பட்ட ஒரு முதியவரை இழுத்துவந்து மிதித்து அவர் மீதேறி நிலப்பிரபுக்கள் நடனம் ஆடினர். சாதிவெறியும் கொலைவெறியும் பிடித்த நிலப்பிரபுக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் கரம்சேடு கிராமமே நிலை குலைந்து போனது.

இக் கொலைவெறியாட்டத்தையடுத்து உயிருக்கு அஞ்சிய 'தாழ்த்தப்பட்ட' மக்கள் ஊரைவிட்டே ஓடினர். பிரதமரின் நிவாரணத் தொகை முதல் மாநில முதல்வரின் நிவாரணத் தொகை வரை அனைத்தையும் தருகிறோம்; மீண்டும் ஊருக்குத் திரும்புங்கள் என்று அதிகாரிகளும் போலீசும் சமாதானக் கமிட்டி நிறுவி ஆசைகாட்டி அழைத்தனர். ஆனால் பெரும்பாலான மக்கள் கரம்சேடுக்குத் திரும்பவில்லை. மருத்துவமனையில் மரணப்படுக்கையில் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூற பழங்களுடன் வந்த பாசிச சன்னியாசி என்.டி.ஆரை அவர்கள் விரட்டியடித்தனர். ஆந்திர மக்கள் உரிமைக் கழகமும் இதர அமைப்புகளும் உண்மை அறியும் குழுவை நிறுவி கரம்சேடு சென்று நிலைமையை ஆராய்ந்து செஞ்சுராமையாவையும் இதர நிலப்பிரபுக்களையும் முதன்மைக் குற்றவாளிகளாக அம்பலப்படுத்தி அறிக்கை வெளியிட்டன. முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்ட பின்னரும் கூட தமது சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள் என்ற வர்க்கப் பாசம் காரணமாக அவர்கள் மீது அரசு சார்பில் வழக்கு கூட தொடுக்காமல் விசாரணைக் கமிஷன் நாடகமாடினார் என்.டி.ஆர். பின்னர், பாதிக்கப்பட்ட மக்கள் தாமே தனியாக குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடுத்து விசாரணைக் கமிஷனைப் புறக்கணித்தனர். கொலை பாதகன்

படிப்பகம்

www.padippakam.com



மேல்சாதிக் குளத்தில் இந்தப் பெண் குடிநீர் எடுத்ததாக கம்மா நாயுடு இளைஞன் செய்த தகராறுதான் கரம்சேடு படுகொலை துவக்கம்

செஞ்சுராமையாவை முதல் குற்றவாளியாக வழக்கில் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

கரம்சேடுக்குத் திரும்ப மறுத்த பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் சிராலா நகர் அருகே விஜயபுரியில் பல சமூக சேவை அமைப்புகளின் உதவியுடன் பனை ஓலைகளால் கொட்டகை போட்டுக் கொண்டு நிரந்தரமாக தங்கிவிட்டனர். அங்கேயே தமது பிழைப்புக்கான வழியைத் தேடிக் கொண்டு, கூட்டாக சோறாக்கி உண்டு, உறங்கி, கடந்த நான்காண்டுகளாக வழக்கை நடத்திவருகின்றனர்.

வழக்கை வருடக் கணக்கில் இழுத்தடிப்பதன் மூலம் வர்க்கப் பகைமையை நீர்த்துப்போகச் செய்து விடலாம் என்று கொலைகார நிலப்பிரபுக்களின் பாதந்தாங்கும் பாசிச என்.டி.ஆர். பகற்கனவு கண்டார். ஆனால் இரும்பாலான நகங்களால் மக்களின் மார்பகங்களைப் பிளந்து உழுது பகைமையை விதைத்த நிலப்பிரபுக்களுக்கு பகைமையே பயிராக விளைந்தது. ஏப்ரல் 6ந் தேதியன்று இரவு 9 மணியளவில் கொடுங்கோலன் செஞ்சுராமையாவை அவரது பங்களாவிலேயே ஆறு இளைஞர்கள் சுட்டுக் கொன்றனர். "புரட்சி ஓங்குக! கரம்சேடு தியாகிகளுக்கு வீரவணக்கம்!" என்ற முழக்கமிட்டுக் கொண்டே அவர்கள் தலைமறைவாகிவிட்டனர். அவர்கள் நக்சல்பாரி புரட்சியாளர்களாக இருக்கலாம் அல்லது "தலித் செயல்பாட்டுக் குழு"வினராக இருக்கலாம் என்று செய்திகள் வருகின்றன.

அரண்டு போன என்.டி.ஆர், "வன்முறை பெருகிவிட்டது. ஆந்திரா மட்டுமின்றி தேசிய அளவில் இதற்கு முடிவு கட்ட வேண்டும். மாறுபட்ட கருத்துக்கள், சித்தாந்தங்களைக் கொண்டவர்களை அழித்தொழிக்கும் போக்கு பெருகி அரசுக்கும் சமூகத்துக்கும் சவாலாக அமைந்துவிட்டது. என் உறவினர்கள் மட்டுமல்ல; என் கொள்கையை ஆதரித்தால் நீங்களும் கூட கொல்லப்படும் அபாயம் உள்ளது" என்று செஞ்சுராமையாவின் ஈமச்சடங்கில் கலந்து கொண்டபோது பீதியில் அரற்றினார்.

ஆந்திரத்தைப் போலீஸ் ராஜ்ஜியமாக்கி, மாற்று சித்தாந்தத்தைக் கொண்ட கம்யூனிசப் புரட்சியாளர்களை நரவேட்டையாடிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நிலப்பிரபுக்கள் அடக்கு முறையை ஏவிய போது வாயை மூடிக்கொண்டு வேடிக்கை பார்த்த பாசிச என்.டி.ஆர். தம்வர்க்கத்தைச் சேர்ந்தவனுக்கு அடக்கப்பட்டவர்கள் தண்டனை அளித்ததும் துடிதுடித்துப்போய் வர்க்கப் பாசத்தோடு பொருத்தமாகவே புலம்புகிறார். உண்மைதான்! அவர் கூறுவதைப் போல, அவரது பாசிசக் கொள்கையை ஆதரிக்கும் அவரது கூட்டாளிகளான கொடிய நிலப்பிரபுக்களுக்கு ஒரு புரட்சியில் இறங்கும் உழைக்கும் மக்கள் உரிய தண்டனையை அளித்து தம் வர்க்க நீதியை நிலைநாட்டியே தீருவார்கள்!

— குமார்

**ஏப்ரல் 22:**
**உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் மாபெரும் தலைவர் லெனின் பிறந்தநாள்**

புத்துலகச் சிற்பியே,
புரட்சிப் புயலே,
அடிமை விலங்கொடித்து
ஆர்த்தெழுந்த ரஷ்ய சோசலிசப்
புரட்சி நாயகனே,
உலக உழைக்கும் மக்களின்
கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த
சோசலிச நாடுகளிலே
முதலாளித்துவத்தை மீட்ட துரோகிகள்,
உனது உருவத்தை படத்தை பூசிக்கிறார்கள்.
அந்தத் துரோகிகளைத் தோலுரித்து
ஆயிரமாயிரம் தியாகிகளின்
உதிரத்தால் சிவந்த புரட்சிப் பாதையில்
தடம்புரளாமல் முன்னேற
உனது 120வது பிறந்தநாளில்
சூளுரைப்போம்!



**ஏப்ரல் 22:**
**வசந்தத்தின் இடிமுழக்கம் நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியில் உதித்த செந்தீ இந்தியப் பொதுவுடமை (மார்க்சிஸ்டு லெனினிஸ்டு) கட்சி நிறுவன நாள்.**

அறுபதாண்டு திரிபுவாத
இருள் கிழித்து,
தரகுமுதலாளிகள் - நிலப்பிரபுக்களை
குலைநடுங்க வைத்த புரட்சிப்படை,
போர் முறைத் தவறுகளினால்
துரோகிகள், ஓடுகாலிகளின்
சீர்குலைவுகளினால்
எதிரிகளின் கொலை வெறியினால்
பின்னடைவு பிளவுகளைக் கண்ட போதும்
இந்திய மக்களின்
ஒரே நம்பிக்கை நட்சத்திரம்.
புரட்சி வானிலே அதன்
செம்பதாகை உயர்த்திய
ஆயிரமாயிரம் தியாகிகளின்
வழி நடப்போம்.
புதிய ஜனநாயகப் புரட்சியில்
வெல்வோம்!

— ஆசிரியர் குழு.

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய-சீன எல்லைத் தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

## இந்தியா சீண்டியது; சீனா பதிலடி தந்தது;

## படைகளைப் பலியிட்டு தளபதி தப்பி ஓட்டம்!


இந்திய - சீன எல்லையென்று இந்தியா ஒருதலைப்பட்சமாக உரிமை கொண்டாடிய மக்மகோன் கோட்டையும் தாண்டி நான்கு மைலுக்கு அப்பால் நாம்காசு என்னும் சிற்றாற்றின் கரையில் தோலா சாவடியை நிறுவியது இந்தியா. அதே சமயம் எதிர்க்கரையில் முகாமிட்டிருந்த சீனப் படைப்பிரிவு தான் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும், அங்கிருந்து தாக்லா மலை முகட்டு வரைக்கு அப்பால் அதைவிரட்டுவது என்றும் இந்தியா முடிவு செய்தது. அது சாத்யமில்லையென மறுத்த அதிகாரியை இடமாற்றம் செய்து நேரு கும்பலின் செல்லப்பிள்ளை மேஜர் ஜெனரல் கௌல் தலைமையில் ஒரு புதிய காலாட்படை அமைத்தது. இப்படிச் செய்வது ஓர் இராணுவ இரகசியம் என்ற போதும் தனது விளம்ரபத்துக்காக பத்திரிக்கைகளில் பரபரப்போடு வெளிவரச் செய்தார் கௌல்.

இடமாறிப் போகும் அதிகாரி உம்ராவ் சிங்குடைய ஆலோனைகள், உதவிகளை நிராகரித்துவிட்டு தனக்குப் பிடித்தமான துணை அதிகாரிகளைப் பொறுக்கிப் புதிய காலாட்படைப் பிரிவு அமைத்தார் கௌல். வெறுமனே வரைபடத்தைப் பார்த்து சீனர்கள் தாக்கினார்கள் என ஊகித்த எல்லைப் பகுதிகளுக்கு அனுபவமும், பயிற்சியும், ஆயுதத் தேவைகளும் இல்லாத படைப்பிரிவுகளை பிரித்து அனுப்பினார். கீழ் அதிகாரிகள் கோரியிருந்த துருப்புகளோ, உணவு, ஆயுத உதவியோ ஏற்பாடு செய்ய மறுத்துவிட்டு உடனடியாக தோலா சாவடிக்குப் போகும்படி பிரிகேடியர் தால்வியையும், அதற்கு முந்திய லும்பு முகாமுக்குப் போகும்படி ஜெனரல் பிர்சாத்தையும் விரட்டினார்.

1962 அக்டோபர் 10ம் தேதி தாக்லா மலைமுகட்டுவரைக்கு அப்பால் விரட்டும் வெள்ளைக்கால் நடவடிக்கையைத் துவங்கி விடுவதாக கௌல் சபதமெடுத்தார். எனவே நேரடியாக தோலா சாவடிக்குப் புறப்பட்டார். எலிக்காப்டர் அங்கே போய் இறங்க முடியாது என்பதால் ஒரு திபேத்தியரின் தோள் சுமையேறிப் போய்ச் சேர்ந்தார். வழி நெடுக பல்வேறு சிரமங்களுக்கிடையே நடந்துவரும் இந்தியத் துருப்புக்களை ஏளனமாகப் பார்த்துக் கொண்டே போனார்.

நாம் ஆற்றங்கரையின் இருபுறமும் நோட்டம்விட்ட கௌல் சீனர்களுக்கு சாதகமாக அமைந்திருப்பதை கண்டார். இருந்தாலும் சீனர்கள் தாக்கமாட்டார்கள் என்றே கணித்து வெற்றி மிதப்பிலே டெல்லிக்குச் செய்திகள் அனுப்பினார். பாதகமான நிலைமையிலும் வெற்றியை ஈட்டும் மாவீரனாகத் தன்னைக் காட்டிக்கொண்டார். முதல் தாக்குதலில் வெற்றியை சாதித்துவிட முடியும். ஆனால் தொடர்ந்து காலாட்படை மற்றும் விமானப்படைத் தாக்குதல் நடத்தி உதவ வேண்டும் என்று கோரினார். இராணுவப் பொதுப்பணியாளர் தலைமைத் தளபதி என்கிற முறையில் அது சாத்தியமில்லை என்பதும் அவருக்குத் தெரியும். இருந்தாலும் தோல்வி ஏற்பட்டால் பின்னணி உதவி தரத் தவறியதால் இராணுவத் தலைமை மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனத் தட்டிக் கழிக்கும் முன்னேற்பாடு செய்து கொண்டார். கனரக துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் கொண்ட ஒரு படைப்பிரிவை சீனா தாக்லா பகுதிக்கு அனுப்பியுள்ளது என்ற திபேத் தலைநகர் லாசாவில் இருந்த தூதரக உளவுச்செய்தி ஒன்று இந்திய இராணுவத் தலைமையகத்துக்கு வந்தது. அதன் மீது எவ்விதக் கருத்தும் கூறாது அக்டோபர் 7ம் தேதி கௌலுக்கு அனுப்பியது தலைமையகம். அதன்மூலம் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்தது.

1962 அக்டோபர் 8ம் தேதி துருப்புகளைத் தாக்கும் நிலையில் குவிக்கத் துவங்கினார். "ஒரு அபாயகரமான' பொறி அமைவு" என்று கௌலே கூறிய நாமகாசு ஆற்றங்கரையிலே பலியிட இந்திய துருப்புகளைக் கொண்டுபோய் நிறுத்தினார். அக்டோபர் 9ம் தேதி ஜெனரல் பிரசாத், பிரிகேடியர் தால்வி மற்றும் பிற அதிகாரிகளிடம் தன்னுடைய போர்த் திட்டங்களை விளக்கினார். மந்திரிசபை தீர்மானித்தபடி அக்டோபர் 10ம் தேதி எப்படியும், எந்த விலை கொடுத்தாவது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்றார் கௌல். அடுத்த நாளே யூம்த்சோலா கணவாய்க்குப் போகும்படி ராஜபுத்திரப் படைப்பிரிவுக்கு உத்திரவிட்டார். பலம் வாய்ந்த சீன முகாமுக்குப் பின்னே, தாக்லா மலைக்கு மேற்கே 16,000 அடி உயரத்தில் உள்ள இடம் அது. "அங்கே போனால் போதிய குளிர்கவச உடுப்புகளும் உணவுமின்றி இந்தியத் துருப்புகள் பட்டினியிலும் பனியிலும் உறைந்து மாண்டு போவார்கள். அங்கு போகும் வழியிலேயே சீனர்கள் அவர்களைத் தாக்கி அழிப்பதும் எளிதான காரியம்" என்று கூறி பிரசாத்தும் தால்வியும் ஆட்சேபித்தனர். அவர்கள் தனது உத்திரவை மீறுவதாக -எதிர்ப்பதாகவே கௌல் கருதினார்




ஆனாலும் ஒரு முன்னோட்டப் படைப்பிரிவை மட்டும் அனுப்புவது என்று தீர்மானித்தார். அன்று மதியமே ஒரு பஞ்சாப் படைப்பிரிவு யூம்த்சே கணவாய்க்குப் புறப்பட்டும் போனது. சீனர்கள் அதைத் தாக்கவில்லை. இரவு தலைமைத் தளபதி தபாரிடமிருந்து கௌலுக்கு "அவர் திறமையில் நம்பிக்கையிருப்பதாக" வாழ்த்துச் செய்தி வந்தது. சீனர்கள் திருப்பித் தாக்குவார்கள் என்று கூறியவர்கள் அடிமடையர்களாகக் கருதப்பட்டனர். துணிச்சலான, விரைவான போர்த் தந்திரத்தின் மூலம் பாதகமான அம்சங்களைக் களைந்து வெற்றியீட்டுவோம் என்று உத்தரவிட்டார் கௌல். முன்னோட்டம் போன பஞ்சாபிப் படைப்பிரிவு தாக்கப்படவில்லை என்பதை வைத்து "நமது இலக்கை நாம் அடைந்துவிட்டோம்; சீனா ஆக்கிரமித்த பகுதிகளை மீட்டுவிட்டோம்" என்று தலைமையகத்துக்கு தாக்கீது அனுப்பினார்.

அக்டோபர் 10ம் தேதி. தாக்குதலுக்கான கெடு வந்தது. யூம்த்சேலா கணவாயை நோக்கி ராஜபுத்திரப் படையினர் அனுப்பப்பட்டனர். நாம்காசு ஆற்றுப் பாலத்தை நெருங்கினர். கடைசியாக சீனர்கள் எதிர் நடவடிக்கையில் இறங்கினர். சீனர்களை அப்புறப்படுத்தும் திட்டம் மட்டுமல்ல. முன்னேறும் கொள்கை உட்பட எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக இருந்த "சீனர்கள் தாக்கத் துணியமாட்டார்கள்" என்கிற கணிப்பும் தகர்ந்தது. அதிகாலை வழக்கமான சவரம் செய்து கொண்டிருந்த கௌலுக்கு அதிர்ச்சியூட்டும் வகையிலே சரமாரியாகச் சுடத்தொடங்கினார்கள், சீன இராணுவத்தினா. பஞ்சாபி முன்னோட்டப்படை நிலை கொண்டிருந்த த்சேங்ஜேங் மீது பீரங்கிகளால் சுட்டனர்.

சூராதிசூரன் சூரப்புலி கௌலுடைய கனவுகள் தகர்ந்து சிதறின. அவரது கண் முன்னே ஒரு இந்திய துருப்பு சிப்பாய்க்கு இருபது பேர் என்ற விகிதத்தில் சீனர்கள் சூழ்ந்துகொண்டு தாக்கிக் கொண்டிருந்தனர். "கடவுளே நீங்கள் சொன்னது உண்மைதான். அவர்கள் காரியார்த்தமாக இருக்கிறார்கள்" என்று பிரமிப்போடு தால்வியைப் பார்த்து கதறினார் கௌல். "வெளிப்படையாகச் சொன்னால், நமது சங்கடமான நிலைமையின் எல்லா அர்த்தங்களையும் இப்போது நான் முழுமையாகப் புரிந்து கொண்டேன்... இந்தப் போர் அரங்கத்தில் நம்மு

படிப்பகம்

www.padippakam.com

டைய நிலைப்பாடு முழுவதையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கருதுகிறேன்'' என்று அறிக்கை அனுப்பினார்.

அப்புறம் மிகவும் வெட்கக்கேடான, கோழைத்தனமான முறையிலே யுத்தமுனையிலிருந்து தான் மட்டும் தப்பி ஓடிவிடுவது என்று முடிவு செய்தார் கௌல். ''நிலைமை பற்றி நேருவிடம் நேரடியாகச் சொல்ல வேண்டும். என்னுடன் ஜெனரல் பிரசாத்தும் கிளம்ப வேண்டும்'' என்று அறிவித்து விட்டு, பிரிகேடியர் தால்வியிடம் யுத்தப் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு, புது டில்லி நோக்கிப் புறப்பட்டுவிட்டார், கௌல்.

''சீனர்களை அப்புறப்படுத்துவது சாத்தியமற்ற கனவுதான். எங்கு தாக்குப்பிடிக்க முடியுமோ, எங்கு தேவைகளை அனுப்பித் தர முடியுமோ அந்த இடத்துக்கு நாம்காசு ஆற்றங்கரையிலிருந்து நமது பட்டாளத்தைப் பின்வாங்கிவிட வேண்டும்'' என்பதை பிரசாத் மற்றும் தால்வியிடம் கௌல் ஒப்புக் கொண்டார். ஆனால் அந்த முடிவை அமுல்படுத்தும் உத்திரவைத் தான் பிறப்பிக்க முடியாது. புதுடில்லியிலிருந்து முடிவு வரும்வரை அப்புறப்படுத்துவதை நிறுத்தி வைத்து விட்டு தற்போதைய நிலையைப் பாதுகாக்க முயலவேண்டும் என்று கூறி விட்டு நழுவி விட்டார், கௌல்.

சீனர்களின் முதல்தாக்குதலை இந்தியப்படை முறியடித்துவிட்டது. சீனர்கள் எதிர்பாராதவாறு இருபுறங்களிலும் இருந்து உதவிப் படைத்தாக்குதல்கள் தொடுத்ததால் இது சாத்தியமாயிற்று. சீனர்களுக்கு இழப்புகள் அதிகமாக இருந்தன. இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு மறுதாக்குதல் தொடுத்தனர். சீனர்களின் பக்கம் போய் சிக்கிக் கொண்ட பஞ்சாபிப் படையினர் உதவிக்காக பீரங்கிகளையும் கனரக துப்பாக்கிகளையும் கொண்டு ஆற்றங்கரைக்கு அப்பாலிருந்து சுடும்படி கோரினர். அப்பொழுது தான் பஞ்சாப் படையினர் பின்வாங்கித் தப்பித்து வரமுடியும். ஆனால் அப்படி ஒரு சிறு படைப்பிரிவை மீட்பதற்காக பெருமளவு யுத்தத்தில் இறங்கினால் அந்தப் பிராந்தியத்தில் முகாமிட்டிருந்த ஒரு பிரிகேடு முழுவதையும் தாக்கி அழித்துவிடுவார்கள் என்று அஞ்சி பிரிகேடியர் தால்வி அதற்குச் சம்மதிக்கவில்லை. தமது நிலையைக் கலைத்து விட்டு ஆற்றங்கரைக்குப் பின்வாங்கிவிடும்படி பஞ்சாப் படைப்பிரிவுக்கு உத்திரவிட்டார். அவர்கள் திரும்பிப் போவதற்கு சீனர்கள் அனுமதித்தார்கள். ஆற்றைக் கடந்து தோலா சாவடி திரும்பும் வரை அவர்களை நோக்கிச் சுடவுமில்லை. அன்றைய மோதலில் 31 சீனர்களும் 7 இந்தியர்களும் மாண்டனர். இறந்த இந்தியர்களை இந்தியப் படையினர் கண் முன்னே இராணுவ மரியாதையுடன் மறுகரையில் சீனர்கள் அடக்கம் செய்தனர்.

அக்டோபர் 12ம் தேதி நேரு இலங்கை போவதாக இருந்தது. ''அதற்குமுன்பு, திடீரென்று எழுந்த கடும் சிக்கலான ஆபத்தான நிலைமை பற்றி நேரடியாக அவரிடம் விளக்க வேண்டும்'' என்று செய்தி அனுப்பி விட்டு புதுடில்லிக்கு பறந்தார், கௌல். அக்டோபர் 11ம் தேதி காலை 8 மணிக்கு நேரு



1962 போரில் முன்னேறும் சீனப் படைகள்

வின் மாளிகையிலே ஒரு அவசரக் கூட்டம் கூடியது. நேரு, கிருஷ்ணமேனன் ஆகியோரோடு சிவில், இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். மந்திரிசபையையோ, மந்திரி சபையின் இராணுவக் கமிட்டியையோ கூட்டவில்லை. கௌல் பொத்தாம்பொதுவான விளக்கமளித்தார். அவரது ஆலோசனையைக் கோரினர். நாம்காசு ஆற்றங்கரையிலிருந்து படையைப் பின்வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கோரவில்லை. அமெரிக்காவிடமிருந்து ஏராளமான இராணுவ உதவிகளை விரைவாகப் பெறவேண்டும் என்று யோசனை கூறினார். நேரு அதற்கு மறுப்பு கூறவே, சீனர்களை அப்புறப்படுத்துவதைத் தள்ளிவைக்கக் கோரினார்.

அந்த மந்திராலோசனைக் கூட்டத்திலே முடிவு எதுவும் எட்டப்படவில்லை. படை தோலா சாவடியிலேயே நிலை கொள்ளவேண்டும் என்று தளபதிகள் தபாரும் சென்னும் கூறினர். படைபலத்தைக் கூட்டி அங்கேயே தாக்குவது அல்லது தாக்குதல் முடிவை ரத்து செய்துவிட்டு அங்கேயே படையை நிறுத்தி வைப்பது அல்லது சாதகமான இடத்திற்குப் பின் வாங்குவது ஆகிய மூன்று தீர்வுகளைச் சொன்னதாக அடிமுட்டாள் கௌல் பின்னர் பீற்றிக் கொண்டார். ''வெள்ளைக்கால் நடவடிக்கை'' என்பது கௌரவப் பிரச்சினை ஆகிவிட்டதால் படையைப்பின் வாங்க முடியாது; எனவே அங்கேயே நிலை கொள்வது; தாக்குதலை நிறுத்திவிடுவது என்று தளபதிகள் கூறினர். ''எந்த முடிவானாலும் இராணுவத்தினரே பொறுப்பேற்க வேண்டும்; முடிவுசெய்து அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுங்கள்'' என்று சொல்லி நழுவிக் கொண்டார். அதன்பிறகு நடந்த போரில் பெருந்தோல்வி கண்ட போது, ''அனுபவம்வாய்ந்த இராணுவத்தினரது யோசனைப்படிதான் அரசு நடந்து கொண்டது. படைகள் அந்த நிலையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று சிவிலியன் தலைமை உத்திரவிடவில்லை. நமது படை வீரர்கள் அதை விரும்பினார்கள். அதனால் கணிசமான இழப்புக்கு காரணமான போதும் அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர்'' என்று நாடாளுமன்றத்திலேயே பொறுப்பைத் தட்டிக் கழித்தார் நேரு (8-11-62 நாடாளுமன்ற உரை). உண்மை என்னவென்றால் தனது நெருங்கிய உறவினரும் பங்காளியுமான தளபதி கௌலுடைய முடிவுக்கே ஆடினார்.

தாக்லா மலைப்பகுதியில் சிறுசிறு மோதல்கள் நடப்பதாகவும், சீனர்களுடைய ஊடுருவல் முயற்சியை முறியடித்து வருவதாகவும் தினசரி புளுகிவந்த பத்திரிகைகள் அக்டோபர் 10ம் தேதி சண்டை குறித்து பரபரப்பாக எழுதின. அக்டோபர் 12ம் தேதி இலங்கைக்குப் புறப்பட்ட நேருவை நிருபர்கள் பேட்டி கண்டனர். ''படைகளுக்கு என்ன உத்திரவு போட்டுள்ளீர்கள்?'' என்று நிருபர்கள் கேட்டனர். ''நமது பகுதிகளை மீட்கும்படி உத்தரவிட்டுள்ளோம்'' என்று 'கம்பீரமாக'ச் சொன்ன நேருவிடம் ''எப்போது'' என்று நிருபர்கள் கேட்டனர். ''நான் தேதி குறித்துக் கெடுவைக்க முடியாது. அதை முழுக்க முழுக்க இராணுவம் தான் முடிவு செய்யவேண்டும்'' என்று நேரு பரம்பரைக்கே உரிய தந்திரமான பதில் கூறினார் ''குளிர்காலம் தொடங்கிவிட்டது; மேலும் சீனர்கள் அதிக எண்ணிக்கையில், உயரமான இடத்தில் பின்னணிப் பலத்தோடு இருக்கிறார்கள்'' என்று முதன்முறையாக சீனாவின் சாதகமான யுத்தநிலைமைப் பற்றி பேசினார். ஆனாலும் ''இந்தக் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை நீட்டிக்கும்வரை சீனர்களுடன் பேச்சுவார்த்தைக்கான . வாய்ப்பே கிடையாது'' என்று அடித்துச் சொன்னார்.

ஆக, போர் தொடுக்கும்படி உத்திரவு போட்டிருப்பதாக பகிரங்கமாகவே பிரதமர் நேரு அறிவித்துவிட்டார். சீனர்களை விரட்டுவது நிச்சயம் நடக்கும் என்று அறிவிக்கும்படி கௌல் நேருவை ஊக்குவித்தார். அடுத்த நாள் ''நேருவின் போர் பிரகடனம்'' பற்றி பத்திரிகைகள் பாராட்டி, வரவேற்று பரபரப்போடு எழுதின. ''போதிய அறிவுபூர்வமான சிந்தனையின்றி நேரு அறிவிப்புகள் செய்து அவருடைய அரசியல் வாழ்விலும், அதனால் நவீன இந்தியாவின் வரலாற்றிலும் பரபரப்பும் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்திய பல சம்பவங்கள் உண்டு'' என்று கூறும் 'இந்தியாவின் சீன யுத்தம்' நூலாசிரியர் நிவில் மாக்ஸ்வெல், 1946 ஜூலையில் ஒரு பிரிட்டிஷ் மந்திரிசபைத் தூதுக்குழு பற்றி திடீர் அறிவிப்பு செய்து காங்கிரசு முஸ்லீம் லீக் ஒப்பந்தத்தை உடைத்து தேசப் பிரிவினைக்குக் காரணமாக இருந்ததைக் காட்டுகிறார். இதே விமர்ச

padippakam

www.padippakam.com

னத்தில் எழுதியிருந்தார்.

''நேரு சீனாவின் மீது போர்ப்பிரகடனம் செய்தார்'' என்று தான் உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதின. தேசிய வெறியூட்டப்பட்ட இந்தியர்களும் இதையே எதிர்பார்த்தனர். எனவே ''பிரதமர் என்கிற முறையில் சீனாவுக்கு எதிராக போர் தொடுக்கும்படி இந்திய இராணுவத்துக்கு நேரு உத்திரவிட்டுவிட்டார். இந்திய இராணுவம் எந்த நேரத்திலும் தாக்கக்கூடும். சீன மக்கள் விடுதலைப் படை போராளிகள் நூறுமடங்கு எச்சரிக்கையாக இருந்து முறியடிக்க வேண்டும்'' என்று சீன ''மக்கள் தினசரி'' தலையங்கம் எழுதியது.

வெளியிலே நேரு போர்ச் சவடால் அடித்தபோதும் சிவில், இராணுவ அதிகார வட்டாரங்களில் குழப்பமே நிலவியது. அக்டோபர் 13ம் தேதி எல்லைப்பிராந்திய இராணுவத் தலைமையகமான தேஜ்பூர் திரும்பிய கௌல் சீனர்களை விரட்டும் நடவடிக்கையை நிறைவேற்றியே தீர வேண்டும். நிலைமைகள் பற்றி அரசுக்குப் புரியவைக்க முடியவில்லை என்றே கீழதிகாரிகளிடம் கூறினார். ஆனால் தலைமைத் தளபதி தபார், ''நடவடிக்கை அடுத்த சில மாதங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுவிட்டது; பின்னர் தாக்குதல் தொடுப்பதானால் எவ்வளவு படை தேவை'' என்று கேட்டு கிழக்கு மண்டலத் தலைமையகத்துக்கு எழுதினார். ஒரு நாளோ, ஒரு நூறு நாளோ, ஓராயிரம் நாளோ எவ்வளவு நாளானாலும் வடகிழக்கு பிராந்தியத்தில் இருந்து சீனர்களை விரட்டியடித்தே தீருவோம். கடைசி மனிதன், கடைசித் துப்பாக்கி இருக்கும்வரை லடாக்கில் சீனர்களுக்கு எதிராகப் போரிடுவோம்'' என்று அக்டோபர் 14ம் தேதி முழங்கினார், இராணுவ மந்திரி. இராணுவ நடவடிக்கையை முடிப்பதற்கான இறுதித் தேதி நவம்பர் முதல் நாள் என்று கெடுவைத்து தகவல் அனுப்பினார். அது அக்டோபர் 16ம் தேதி போர்முனைக்கு வந்தது.

இப்படி, என்னவானாலும் போர் தொடுப்பது என்று தீர்மானித்து, அதிகாரபூர்வமான போர்ப் பிரகடனமும் செய்தபிறகு தானே முந்திக் கொண்டு இந்தியாவுக்குப் பாடம் கற்பிப்பது என்று சீனா முடிவு செய்தது. இன்னமும் இந்தியத் தரப்பில் குழப்பமே நிலவியது. பகுதி பகுதியாக தோலா சாவடியிலிருந்து துருப்புகளைப் பின்வாங்கி விடுவது என்று கீழதிகாரிகள் முடிவு செய்தனர். அங்கிருந்து 2 அல்லது 3 மைல் தொலைவில் தென்மேற்கே உள்ள த்சாங்கிள் என்னுமிடத்தில் முகாமிட வேண்டும் என்று கௌல் உத்தரவிட்டார். இன்னும் பின்வாங்கிவிட வேண்டும் என்று ஜெனரல் பிரசாத், பிரிகேடியர்கள் தால்வி மற்றும் கே.கே. சிங் ஆகியோர் வாதிட்டனர். கௌல் மறுத்துவிடவே துருப்புக்களை த்சாங்கிள் பகுதிக்கு நகர்த்தினர். அது பூடானுக்குள் இருப்பதாக பூடான் அரசு ஆட்சேபித்ததையும் சட்டை செய்யவில்லை. கிருஷ்ணமேனன் தேஜ்பூர் போனார். த்சாங்கிள் பகுதியில் இருந்து பின்வாங்கவே கூடாது; துருப்புகளைக் குவிக்க வேண்டும் என்று கௌலோடு சேர்ந்து உத்திரவு போட்டார். முடிவெடுக்க அதே அக்டோபர் 17ம் தேதி தனக்கு உடல்நிலை சரியில்லை என்று புளுகி பொய்யான மருத்துவ சிபாரிசு பெற்று டெல்லிக்கு ஓடிப் போனார், தளபதி கௌல். மருத்துவமனையில் சேராது வீட்டிலிருந்தபடியே யுத்த முனையிலிருந்த இராணுவத்துக்கு உத்திரவுகள் போட்டார். கள அதிகாரிகள் தால்வி மற்றும் பிரசாத்தின் கடுமையான எதிர்ப்பையும் நிராகரித்துவிட்டு மேலும் துருப்புகளை குவிக்கும்படி அக்டோபர் 18ம் தேதி கௌல் உத்திரவு பறந்தது.

அக்டோபர் 18, 19 தேதிகளில் சீனர்கள் போர் தயாரிப்புகளில் ஈடுபட்டிருப்பதையும், துருப்புகள் பின்வாங்குவதன் அவசியத்தையும் குறித்து பீதியுடன் செய்தி அனுப்பினார் தால்வி. கௌல் அடியோடு மறுத்து விட்டார். அக்டோபர் 19ம் தேதி நாம்காசு ஆற்றின் நீர்மட்டம் குறைந்தது. அன்று இரவு சீனப்படை ஆற்றைக் கடந்து அக்டோபர் 20ம் தேதி அதிகாலை ஐந்து மணிக்கு இந்திய நிலைகளின் மீது தாக்குதல் தொடுத்தது. ''தலைக்குமேலுமுதல் வெடிச் சத்தம் கேட்டதும் சில விநாடிகள் அதிர்ச்சியினால் கல்லாக் சமைந்துபோனேன்'' என்றார் தால்வி. நான்கு மணிநேரத்தில் நாம்காசு ஆற்றங்கரையில் இருந்து கோர்கா மற்றும் ராஜபுத்திரப் படைப்பிரிவினர் அனைவரும் பலியாயினர். அத்னுடான தொடர்புகளை இழந்த தால்வி த்சாங்கிள் பகுதியிலிருந்து பின்வாங்குவதற்கு பிரசாத்திடம் அனுமதி கோரினார். மேலும் படை அனுப்புவதாக செய்தி அறிவிக்க இருந்த பிரசாத் அதிர்ச்சியடைந்து, பின்வாங்குவதற்கு அனுமதி அளித்தார். ஆனால் தால்வியின் படை தப்பி ஓடுவதற்கு முன்பே குழப்பட்டு தகர்க்கப்பட்டது. பிரிகேடியர் தால்வி சிறைப்பட்டார்.

> **" என்னவானாலும் போர் தொடுப்பது என்று இந்திய அரசு தீர்மானித்து, அதிகார பூர்வமான போர்ப் பிரகடனமும் செய்த பிறகு, தானே முந்திக் கொண்டு இந்தியாவுக்குப் பாடம் புகட்டுவது என்று சீனா முடிவு செய்தது. "**

வடகிழக்குப் பிராந்தியத்தில் சீனப்பகுதிக்குள் போய் சிக்கிக் கொண்டது போலவே லடாக் பகுதியில் சிப்காட் ஆற்றுக்கு அப்பால் கால்வான் மற்றும் பாங்கோங் ஏரி ஆகிய இடங்களில் இராணுவம் சாவடி அமைத்திருந்தது, இந்திய இராணுவம். அங்கேயும் சீன இராணுவம் தாக்கியது. இந்தியத் துருப்புக்களைக் கொன்றோ, கைது செய்தோ சில சாவடிகளைக் கைப்பற்றியது. மற்றவைகளில் இருந்து பின்வாங்கும்படி மேற்குமண்டல ஆணையகம் அனுமதித்து விட்டது.

அக்டோபர் 19ம் தேதி கூட ''இந்தியப் பிராந்தியத்திலிருந்து சீனாவை விரட்டுவது என்று இந்திய அரசு தீர்மானமாக உள்ளது'' என அறிவித்தார் கிருஷ்ணமேனன். 15 மைல் அகலத்துக்கு இரண்டு மைல் தூரம் இந்திய இராணுவம் முன்னேறிவிட்டதாக பத்திரிகைகள் புளுகின. அடுத்தநாள் அதிகாரிகள் அந்தச் செய்தியை மறுத்தனர். சில மணி நேரங்களிலேயே இந்திய இராணுவத்தின் வீழ்ச்சி பற்றிய செய்தி வந்தது. நடுநடுங்கிப் போயிருந்த கிருஷ்ணமேனனைச் சந்தித்த நிருபர்கள் ''முன்னேறும் சீனர்களை எங்கே தடுத்து நிறுத்துவதாக உள்ளீர்கள்?'' என்று கேட்டனர். ''அவர்கள் வருவதைப் பார்த்தால் எதுவரை அவர்கள் போவார்கள் என்ற வரம்பே தெரியவில்லை'' என்று அலறினார். இந்தியாவின் பாதகமான நிலைமைகள், சீனாவின் சாதகமான நிலைமைகள் பற்றிக் கொஞ்சம் உளறினார். பத்திரிகையாளர்களிடம் இருந்து ஓடி ஒளிந்துகொண்டார் நேரு. இதிலே நேருவுக்கு எந்தப் பொறுப்பு மில்லை என்று கூறி கிருஷ்ணமேனனைப் பலிகிடாவாக்கிப் பலரும் சாடினர். அவரைப் பதவிநீக்கம் செய்யவேண்டும் என்று காங்கிரசு எம்.பி.க்களும், அரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனும் கோரினர். அது கௌரவப் பிரச்சினையெனக் கருதி ஆரம்பத்தில் மறுத்த நேரு தானே ராஜினாமா செய்வதாக மிரட்டினார். அதற்கும் காங்கிரசார் பணியவில்லை. நேருவின் ராஜினாமா மோசடி - புளுகு -மிரட்டல் அம்பலமானது. கிருஷ்ணமேனனை விலக்கிவிட்டு மகாராஷ்டிர முதல்வராயிருந்த ஒய்.பி.சவாண் இராணுவ மந்திரியாக்கப்பட்டார்.

மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் குதிபோட்டுக் கொண்டு நேருவை ஆதரித்து, உசுப்பிவிட்டன. ருஷ்ய திருத்தல்வாதிகள் நயவஞ்சகமான முறையில் நேருவை ஆதரித்தனர். ஆனால் நேரு அரசு மிகவும் எதிர்பார்த்த ''நடுநிலை'' நாடுகள் ஆதரவு தெரிவிக்கவில்லை. அரபு நாடுகளிடமிருந்து அனுதாபமில்லை கென்யா உள்பட ஆஃப்பிரிக்கத் தலைவர்கள் வாய்திறக்கவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவுக்கு இராணுவ உதவி கொடுக்க முன் வந்ததைச் சாடி அதன் பிரதமருக்கே எழுதினார் கானாவின் என்குருமா.''நடுநிலை நாடுகள் என்று சொல்லிக் கொள்பவை குழம்பிப் போயுள்ளன'' என்று உளறித் தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தினார், நேரு.

அதேசமயம் சீனாவுக்கு எதிராக இந்திய நாடு முழுவதும் மிகப்பெரிய அளவு தேசிய வெறி கிளப்பப்பட்டது ''பேரறிஞர்'' என்று பீற்றிக் கொள்ளும் அண்ணாதுரை உட்பட இந்திய அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் சீனாவுக்கு எதிரான கொச்சையான அவதூறுகள், வெறியூட்டும் செய்திகளைப் பரப்பினர். புதிய, வளரும், நேசபூர்வமான, சோசலிச அண்டை நாட்டுக்கு எதிராக இந்திய மக்கள் மனதிலே நஞ்சு விதைத்தனர். இந்திய அரசே விரும்பினால் கூட மீண்டும் சமாதானம் பேச்சுவார்த்தை மூலமான தீர்வு அடையமுடியாத அளவு மக்களிடையே வெறுப்பைத்தூவினார். அதேசமயம் தோற்றோடி வரும் படையை எப்படி விலக்கிக் கொண்டு பின்வாங்குவது என்பதில் கூட குழப்பமான முட்டாள்தனமான முடிவுகளையே எடுத்தனர்.

— தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com

## 'ஐயோ! என்னைக்கொல்ல சதி!'

# கொலைகாரர்கள் சதிகாரர்கள் அலறல்!

"எதை நம்புவது? எதை நம்ப முடியாது? எது உண்மை? எது பொய்?'' என்று தீர்மானிக்க முடியாத அளவு ஏராளமான சதிகளாலும் சதிக்குற்றச் சாட்டுக்களாலும் திண்டாடுகிறார்கள்.

''ஐயோ, என்னைக் கொல்ல சதி! என்னோடு என் மகனையும் மகளையும் கடத்திக் கொல்ல சதி!'' என்று அலறுகிறார் பிரதமர் ராஜீவ். இதை இன்னும் கொஞ்சம் நம்பும்படி செய்வதற்காக ''என்னோடு பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் புட்டோவையும் கொல்ல சதி! இதோ ஆதாரம்!'' என்று ஊளையிடுகிறார். சாதாரணமாக சதி என்றால் பழகிப்போனதால் நம்பமாட்டார்கள் என்று ''மிகப்பெரிய சதி! இந்திரா கொலையோடு நாட்டையே துண்டாடுவதற்கு, சீர்குலைப்பதற்கு நடந்த மிகமிகப் பெரிய சதி ' என்று பெருங்கூச்சல் போடுகிறார்.

பாசிச ராஜீவின் தமிழகத்துப் பங்காளி ஜெயலலிதா சும்மா இருப்பாரா? ''என்னைக் கொல்ல சதி! கொலை முயற்சி! என்னோடு என் குடும்ப நண்பரையும் அவர் மனைவியையும், என் கட்சி எம்.எல்.ஏயையும் கொல்ல சதி! ஒரு மாதத்துக்குள் எங்களைத் தீர்த்துக்கட்ட உத்திரவு போட்டிருக்கிறார், கருணாநிதி!'' என்று ஒப்பாரி வைக்கிறார், ஜெயலலிதா. கடந்த மார்ச்சு 25ந் தேதி சட்டமன்ற ரௌடித்தனங்களைத் தலைமை தாங்கி நடத்திய ஜெயலலிதா, கருணாநிதி இரண்டு பேருமே, ''ஐயோ, என்னைக் கொல்ல முயற்சி!'' என்றுதான் முதலைக் கண்ணீர் வடித்தார்கள். அதன் பிறகு ''தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு காங்கிரசு -அ.தி.மு.க. திட்டமிட்ட சதி!'' என்று ஓலமிட்டார் கருணாநிதி. அதற்கு ஒத்தூதுகிறார்கள் போலிக்கம்யூனிஸ்டுகளின் ஒரு பிரிவினர்.

கருணாநிதி ஜெயலலிதா போடும் கூச்சல்களினால் அரசியல் குட்டையைக் குழப்புவார்கள். அவர்களுடைய தொண்டர்கள் தான் வெளியே அடித்துக் கொண்டு சாவார்கள். அந்த வரைக்குமாவது தமிழகத்து மக்கள் தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் பாசிச ராஜீவ் கும்பல் போடும் சதி, கொலைக் கூச்சல் அப்படி இருக்காது. மத வெறியையும் தேசிய வெறியையும் தூண்டிவிடும். அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட முகாந்திரமாக அமையும் பாசிச ராஜீவ் கும்பல் ஓட்டுப் பொறுக்கவும், அரசியல் ஆதாயம் தேடவும் ஏராளமான அப்பாவி இந்திய மக்கள் பலி கொள்ளப்படுவார்கள்.

இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள் நடத்தவேண்டும் என்பது சட்டப்படியான கெடு. பாசிச ராஜீவ் கும்பல் ஒரு வேளை அதை மதித்து அப்படிப் பொதுத் தேர்தல்கள் வந்தால் அவை இதுவரை நாடு கண்ட எல்லா அரசியல் அராஜகம், அசிங்கம், கேலிக்கூத்துகளையும் மிஞ்சிவிடும். ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் இப்போதே செய்துவரும் தயாரிப்புகள், கிளப்பும் கூச்சல்கள் இதைத்தான் காட்டுகின்றன.



**''ஆஃப்கான் கலகக்காரர்களுடன் பஞ்சாப் பயங்கரவாதிகள் சதி!''**

தாக்கர் விசாரனைக் கமிஷன் அறிக்கை விவகாரம் இந்திரா கொலையில் பாசிச ராஜீவ் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கே பங்கு இருப்பதாக சந்தேகத்தை எழச்செய்துவிட்டது அல்லது இந்திரா கொலைக்குக் காரணமான ''வேறு எவரையோ'' பாசிச ராஜீவ் கும்பலே பாதுகாக்கிறது என்ற எண்ணத்தை உருவாக்கிவிட்டது. அதிலிருந்து திசை திருப்புவதற்காக ஒன்றுக்கு இரண்டு 'சதிகள்' பற்றி ஒப்பாரி வைக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல்.

ஆஃப்கான் முஜாகிதீன் கலகக்காரர்களுக்கும் பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக ராஜீவ் கும்பலே பத்திரிக்கை மூலமாக வதந்தி பரப்பியது. அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் விவாதத்தைக் கிளப்பியது. பத்திரிக்கை செய்திகள் அடிப்படையில் விவாதிக்க முடியாது என்று இதுவரை பல விவகாரங்களில் மறுத்துவரும் பாசிச ராஜீவ் கும்பல் இந்த விவகாரம் குறித்து அக்கறையோடு அனுமதித்தது.

பாசிச ராஜீவ் கும்பலின் அதிரடி -உளவுப்படை மந்திரி சிதம்பரம் தான் இந்தச் சதி பற்றி கட்டுக்கதையை சரஞ்சரமாக அவிழ்த்துவிட்டார். ''ஆஃப்கான் முஜாகிதீன் கலகக்காரர்களுக்கும் பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கும் 1985இல் இருந்தே இலண்டனில் முறையான தொடர்பு இருந்து வருகிறது. 1987 - 88 ஆண்டுகளில்சில ஏவுகணைகள் உட்பட ஆயுதங்கள் வாங்கும் போது அவர்களிடையே தொடர்பு இருந்தது. ஆனால் அவை இந்தியா வந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. கடந்த மாதம் இலண்டனில் சீக்கியப் பயங்கரவாதிகள் நடத்திய கூட்டத்தில் ஆஃப்கான் கலகக்காரர்கள் கலந்து கொண்டனர். பஞ்சாபில் மனித உரிமைகள் மீறும் பிரச்சினை மீது தீர்மானம் நிறைவேற்றிய சர்வதேசப் பொதுமன்னிப்பு நிறுவனத்துக்கும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தனர். அவர்களோடு சேர்ந்து ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினரும் ஒரு பேரணி நடத்தினர்''.

முன்னாள் சினிமா நடிகை; இந்நாள் அரசியல் நடிகை நடத்தும் "ஐயோ! என்னைக் கொல்ல சதி!" நாடகத்தின் கதறல் காட்சி!



படிப்பகம்

www.padippakam.com

"ஆஃப்கான் கலக்காரர்கள், பஞ்சாப் பயங்கரவாதிகள், ஜம்மு - காஷ்மீர் நாசவேலைக்காரர்கள் ஆகியோரிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. இவர்களின் இணைப்புப் பாலமான பாகிஸ்தானின் சேவைப்படைப் பிரிவுகளின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. உள்ளது. ஆஃப்கான் கலகப்படைத் தளபதி குல்புதீன் ஹேக்மாத்தியார் அந்நாட்டு இஸ்லாமியக் கட்சித் தலைவர் அலிகானுக்கு ஒரு இரகசியக் கடிதம் எழுதினார். அதிலே "இந்தியப் படைப்பிரிவுகள்" "இந்தியாவிலுள்ள நமது சகோதரர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"பெனாசிர் புட்டோ ஆட்சிக்கு வந்த பிறகு பாகிஸ்தான் உளவுப்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திவிட்டார். ஆனாலும் அதன் எஞ்சிய பகுதியினர் இந்தியாவுக்கு எதிராக செயல்படுகின்றனர். நாசவேலைக்காரர்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து ஜம்மு - காஷ்மீருக்குள் ஏவிவிடுகின்றனர்"

"வாசன் சிங் ஜஃபார்வால் மற்றும் குர்பஜன் சிங் மனோசல் ஆகிய இரு சீக்கிய பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானிலிருந்து கடிதம் கொண்டு வந்த இருவரை சுட்டுக் கொன்றோம். குருமுகி மொழியில் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. "சீக்கியர்களுக்கு பயிற்சியோ ஆயுதங்களோ தரக்கூடாது என்று பெனாசிர் உத்திரவு போட்டுவிட்டார். பயிற்சி முகாம்கள் மூடப்பட்டுள்ளன. ஆயுதங்கள் கடத்துவது சிரமமாக உள்ளது; இப்போது ராஜீவ், பெனாசிர் இருவரையுமே கொல்ல வேண்டியுள்ளது" என்று அந்த மார்ச்சு 15ந் தேதி கைப்பற்றப்பட்ட அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆக நாட்டைத் துண்டாடவும், சீர்குலைக்கவும் ஒரு பெரிய சதி நடப்பது ஆதாரபூர்வமாக நிருபணமாகிவிட்டது" என்று முடித்தார் சிதம்பரம்.

இந்தச் சதிக் கதையிலே ஒன்றும் புதிய தகவலே கிடையாது. உள்நாட்டில் ஒவ்வொருமுறை நெருக்கடி வரும்போதும் "அரசை சீர்குலைக்க, தேசத்தைத் துண்டாட அந்நிய சக்திகள் சதி! எதிர்க்கட்சிகள் பிளவுவாத - மதவாத - சீர்குலைவு சக்திகளின் கூட்டுச்சதி!" என்று ஆளும் கும்பல் புரளி கிளப்பிவிடுவது வழக்கமாகிவிட்டது. அப்படியே ஆஃப்கான் முஜாகிதீன்கள், பஞ்சாப் பயங்கரவாதிகள், காஷ்மீர் விடுதலைப் போராளிகள் கூட்டுச் சேர்ந்திருந்தாலும் அதிலே அதிசயம் ஒன்றும் இல்லை. ஆஃப்கானில் உள்ள ருஷ்ய அடிவருடி அரசை தாங்கிப் பிடிப்பதோடு தனது விமானிகள் மற்றும் இராணுவ ஆலோசகர்களை இந்திய அரசு அனுப்பியுள்ளது. எனவே ஆஃப்கான் முஜாகிதின்கள் இந்திய அரசுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டுச்சேரவே செய்வார்கள்.

ஈழம், வங்கதேசம், பலுச்சிஸ்தானம் போன்ற அண்டை நாடுகளின் இயக்கத்துக்காரர்களை இந்திய உளவுப் படையான "ரா" தத்து எடுத்துக்கொண்டு பயிற்சியும் ஆயுதங்களும் கொடுப்பதைப் போலவே பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. இந்திய அரசுக்கு எதிரான இயக்கங்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. அண்டை அரசுகளை சீர்குலைப்பது, தேசத்தைத் துண்டாடுவது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுமே தமது உள்நாட்டு நெருக்கடிகளைத் திசைதிருப்பி விடுவதற்கான உத்திதான்! அதிலே ஒரு அங்கம்தான் அண்டை - அந்நியநாடுகளின் சதி என்ற கூச்சலும்!





இந்திரா கொலைக்கும் சதிக்கும் காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட பல்பீர்சிங், கேஹார் சிங். பொய்யான குற்றச்சாட்டுகள் என்று பல்பீர்சிங் விடுவிக்கப்பட்டார், உச்ச நீதிமன்றத்தில்! ஆதாரமின்றி தூக்கிலிடப்பட்டார் கேஹார் சிங்!

அந்நிய சதிபற்றிப் பலமுறை கூச்சல் போட்டபோதும், அதற்கு ஆதாரம் இருப்பதாகச் சொல்லிவந்தபோதும் இந்திய அரசு ஆதாரங்களை வெளியிடவோ நடவடிக்கை எடுக்க முயன்றதோ கிடையாது. இப்போது ஆதாரமாக ஒரு கடிதத்தைக் காட்டுகிறது. போர்ஜரி -பொய்க் கடிதங்களை எழுதுவதில் கைதேர்ந்ததுதான் பாசிச ராஜீவ் கும்பல். அதிலும் குறிப்பாக இந்த விவகாரத்தில் சாட்சியமாக சிக்கியவர்களைக் கொன்றுவிட்டதாகக் கூறுகிறது. ஆகவே இந்தச் சதியும் வழக்கமான புரளிதான் என்று நம்ப வேண்டும்.



**"சதி!**

**இந்திரா கொலையைவிட**

**மிகமிகப் பெரிய சதி!"**

முன்னாள் பிரதமர் இந்திராவைக் கொலை செய்வது, நாட்டை சீர்குலைப்பது உட்பட பல பயங்கரக் குற்றங்கள் செய்ததாக முன்னாள் உயர் போலீஸ் அதிகாரி சிம்ராஞ்சித் சிங்மான் சீக்கிய மாணவர் கூட்டமைப்பு முன்னாள் தலைவர் அதீந்தர்பால்சிங் மற்றும் ஜக்மோகன் சிங், தாலீப்சிங் ஆகிய இரு கல்லூரி ஆசிரியர்கள் உட்பட ஐந்து பேர்மீது சதிவழக்கு தொடுத்துள்ளது இந்திய அரசு.

முக்கியமாக எட்டுக் குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது சுமத்தியுள்ளது. அவை :

* நாடாளுமன்றத்தைத் தகர்ப்பது; விமானத்தைக் கடத்துவது; மின் சப்ளையை சிதைப்பது; குடிநீரில் விஷம் கலப்பது -போன்ற பரபரப்பான செய்கைகளில் ஈடுபடுவது.
* ராஜீவ், தளபதி பிரார் போன்ற முக்கியப் பிரமுகர்களின் பிள்ளைகளைக் கடத்துவது.
* சீக்கியர்களின் விடுதலைக்காக அந்நியத் தலையீட்டைக் கோருவது.
* இந்திரா காந்தியைக் கொலை செய்வது.
* பஞ்சாபிலுள்ள போலீசு மற்றும் துணை ராணுவத்தினரிடையே அதிருப்தி -ஆத்திரத்தை தூண்டுவது.
* அரசாங்கத்துக்கு எதிராக வன்முறை, வெறுப்பு, ஆத்திரத்தைத் தூண்டுவது.
* பயங்கரவாதிகளின் தாக்குதலுக்காக ஆயுதங்கள், வெடி மருந்துகள் வாங்குவது.

இந்தக் குற்றங்களில் விமானத்தைக் கடத்துவது, ரேர்பர் கால்வாயைத் தகர்ப்பது, அந்நியத் தூதரகங்களுடன் தொடர்பு கொள்வது, பஞ்சாப் போலீசாருக்கு ஆத்திரத்தைத் தூண்டும் கடிதம் - அறிக்கை -பிரசுரம் எழுதியது மற்றும் இந்திரா கொலை ஆகியவற்றை செய்ததாகவும் பல கொலைகள் குண்டு வெடிப்புகள் நடத்தியதாகவும் அரசு புகார் கூறுகிறது.

பொற்கோவிலின் மீது இராணுவத்தாக்குதல் நடத்திய பிறகு மேற்கண்ட ஐந்து "சதிகாரர்களும்" பம்பாய், நாகபுரி போன்ற நகரங்களில் சந்தித்து சதி செய்தனர்; சிம்ராஞ்சித் சிங்மானின் ராஜினாமா கடிதம் மற்றும் குருமுகி மொழி பிரசுரம் ஆகியவற்றைப் பரப்பி சீக்கியரிடையே ஆத்திரத்தைத் தூண்டினர். சில பத்திரிக்கையாளர்களுக்கு தமது நோக்கம் குறித்து பேட்டியளித்துள்ளனர். நாகபுரியில் வைத்து இந்திராவைக் கொல்ல முயன்றனர்; ஆயுதங்கிடைக்காததால் நிறைவேற்றவில்லை; பிறகு பியந்தசிங், சத்வந்த்சிங் ஆகியோரைப் பிடித்து இந்திராவைக் கொன்றனர் என்கிறது குற்றப்பத்திரிக்கை.

ஏற்கனவே இந்திரா கொலைக்கும் சதிக்கும் காரணமானவர்கள் என்று பல்பீர் சிங், கேஹர்சிங் மற்றும் சத்வந்த்சிங் மீது

படிப்பகம்

www.padippakam.com

வழக்குப் போட்டு பல்பீர்சிங் விடுதலை ஆகிவிட்டார். மற்ற இருவரும் தூக்கிலிடப் பட்டுவிட்டனர். இப்போது குற்றம் சாட்டப் பட்டுள்ள ஐந்து பேர்களில் ஒருவரான ரத்தன்சிங்கை ஏற்கனவே பாசிச ராஜீவ் கும்பல் கொன்று விட்டது. ஜக்மோகன் சிங் மற்றும் தாலிப்சிங் இருவரும் குடியுரிமை இயக்கத்தினர். அவர்கள் மீது சில்லரை வழக்குகள் போட்டுத் தொல்லை கொடுத்து வந்தது. போதிய ஆதாரம் இல்லாததால் கடந்த நான்கு ஆண்டுகளாக சிம்ராஞ்சித் சிங்மானை வழக்கின்றி தனிமை கொட்டடியில் போட்டு சித்தரவதை செய்கிறது. கடந்த ஆண்டு பிடிபட்ட அதீந்தர்பால்சிங்கையும் அப்படியே செய்கிறது. இவர்களுக்கு எதிராகப் புலனாய்வு செய்து வருவதாகக் கூறிக் கொண்டே கேஹர்சிங் மற்றும் சத்வந்த்சிங் மீதான கொலை - சதி குற்றங்களுக்காக மரண தண்டனை நிறைவேற்றியது.

கேஹார்சிங் மற்றும்சத்வந்த் சிங்கைத் தூக்கிலிடுவதற்காகப் பல முறைகேடுகளைச் செய்தது, பாசிச ராஜீவ் கும்பல்.

* கேஹார்சிங் மீதான சதிக் குற்றம் நிருபிக்கப்படவில்லை.
* இந்திரா கொலைக்குக் காரணமான பியந்த் சிங்கைக் கொன்று சாட்சி தடயங்களை அழித்தது.
* பியந்த்சிங்கைக் கொன்று சத்வந்த் சிங் மீது துப்பாக்கி சூடு நடத்திக் கொல்ல முயன்ற இந்திய - திபெத் படையினர் மீது எந்த விசாரணை நடவடிக்கைக்கும் மறுத்து விட்டது.
* இந்திரா கொலை செய்யப்பட்ட போது பணியில் இருந்த அமர்ஜித்சிங், குர்தியால்சிங் ஆகிய இரு மெய்காவலர்களை பாசிச ராஜீவ் கும்பல் இரகசியமாகக் கொன்றுவிட்டது.
* இந்திராவின் பிரேதப் பரிசீலனை அறிக்கையில் பல குளறுபடிகள் -சந்தேகங்கள் உள்ளன. சாவு நேரம், உடலில் இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி ரவை ஆகியன மாறியிருந்தன.
* முற்றிலும் இரகசியமாக நடத்தப் பட்ட வழக்கு விசாரணையின் போது தாக்கர் கமிஷன் அறிக்கையைத் தர மறுத்தனர். வேறு இரு சதிக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆர்.கே.தவான், அதீந்தர்பால்சிங், நேரடி சாட்சியான சோனியா காந்தி ஆகியோரை விசாரிக்க அனுமதிக்கவில்லை.

இவ்வளவு முறைகேடுகள் செய்து இருவரைத் தூக்கிலிட்ட பிறகு இன்னொரு சதிவழக்குப் போட்டுள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். இரண்டு குற்றப்பத்திரிக்கைகளுக்கும் பல முரண்பாடுகள் உள்ளன. நீலநட்சத்திர நடவடிக்கையினால் ஆத்திரமுற்ற பல்பீர் சிங்கும் கேஹார்சிங்கும் 1984 செப்டம்பர் முதல்வாரம் சதி செய்து கொலைகாரர்களுக்கு வெறியூட்டிக் குற்றம் செய்ததாக முதல் அறிக்கை கூறுகிறது. ஆனால் செப்டம்பர் இரண்டாவது வாரம் நாகபுரியில் நடந்த கொலை முயற்சி தோல்வியுறவே கேஹார் சிங் மூலம் கொலைகாரர்களுக்கு வெறியூட்டினர் என்று இப்போது மான், அதீந்தர்பால் மீது குற்றம் சுமத்துகின்றனர். இவர்களுக்கிடையிலான தொடர்பாக இருந்ததாக பல்பீர் சிங்குக்கு எதிராகத்தான் சாட்சிகளை உருவாக்கி உள்ளனர். அவரே நிரபராதி என விடுவிக்கப்பட்டு விட்டார். இருந்தபோதும் போதிய ஆதாரங்களே இல்லாமல் நான்காண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த வழக்கை அவசர அவசரமாக தொடுத்துள்ளது, பெருங்கூச்சலோடு!



## ஓட்டுப் பொறுக்குவதற்கான ஆயுதமாக சதி குற்றச்சாட்டுகள்

அடுத்தடுத்த பல லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்திய எதிர்த் தரப்பினர், தாக்கர் கமிஷன் அறிக்கையை வெளியிட்டு ராஜீவ் கும்பலை நெருக்கடிக்குள் சிக்கவைப்பதில் வெற்றி பெற்றனர். ஆனால் அதற்கு ராஜீவ் கும்பல் எடுக்கும் பதில் நடவடிக்கைதான் இந்தச் சதிக்குற்றச்சாட்டுகள். அந்நிய சக்திகள், பிளவுவாத - மதவெறி சக்திகளோடு சேர்ந்து அரசை சீர்குலைக்கவும், தேசவிரோத செயல்களில் ஈடுபடவும் எதிர்க்கட்சிகள் சதி செய்வதாக அது பெருங்கூச்சல் போட்டு வருகிறது.

இப்போது குறிப்பாக இந்திரா கொலைக்குக் காரணமான சதிகாரர்களை ஆதரிப்பதாக எதிர்க்கட்சியினர் மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறார் ராஜீவ். இந்திரா கொலை வழக்கை எடுத்து வாதாடும் ராம் ஜேத்மலானி உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பஞ்சாப் பயங்கரவாதிகளுடன் தொடர்புகொண்டு தேசப் பிரிவினையை ஆதரிப்பதாகக் கூறுகிறார். காஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு ஜனதா தளத் தலைவர் மஃப்டி முகமது சையதுவும், பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கு மேற்கு வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுவும் புகலிடம் தருவதாகக் குறிப்பாகக் கூறுகின்றனர். முன்பு பிரதமர் - ஜனாதிபதி தகராறு வந்தபோது ஜெயில் சிங் மீதும் இவ்வாறு வதந்தி கிளப்பினர்

இனி இது வழக்கமாகிவிடும். பாசிச ராஜீவ் கும்பல் அதன் எதிரியாகக் கருதும் யாரை வேண்டுமானாலும் அந்நிய சக்திகளுடன் சேர்ந்து சதி செய்ததாக, பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தருவதாகக் கூறி பழிவாங்க முயலும். நூற்றுக்கணக்கான காங்கிரசு கூலிப்படையினரை ஏவி ராம் ஜேத் மலானியின் வீட்டைத் தாக்கியுள்ளது. தன்னை எதிர்க்கும் அனைவரையும் தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தி பாசிச பயங்கரவாதத்தை ஏவிவிடும். சீக்கிய பயங்கரவாதிகளுக்கு எதிராக இந்துமதக் காவலானகவும், தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக வேஷங்கட்டிக் கொண்டு மதவெறியையும், தேசிய வெறியையும் கட்டவிழ்த்துவிடும். அப்படிப்பட்ட ஒரு பயங்கரவாத நிலைமையில் பொதுத் தேர்தல்கள் நடத்தினால்தான் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கமுடியும் என்கிற நாசகார - விபரீத முயற்சியில் பாசிச ராஜீவ் கும்பல் இறங்கியுள்ளது.

இதை நிரூபிக்கும் வகையிலே நாடாளுமன்றத்தில் தாக்கர் அறிக்கை மீதான விவாதம் என்ற பெயரிலே ராஜீவே சண்டப்பிரசண்டம் செய்துள்ளார். தேர்தல் களத்துக்குப் புறப்பட்டுவிட்ட ஓட்டுப் பொறுக்கிக்கே உரிய சவடாலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்த அவையிலே அரங்கேற்றினார். வேறு யாரோ எழுதிக்கொடுத்த வசனத்தை வீராவேசம், இகழ்ச்சி, ஆத்திரம் பொங்க நவரசத்துடன் நடித்துக் காட்டினார். ''அடிக்கடி விசுவாசத்தை மாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாதிகள்'' என்று காங்கிரசுக் கொத்தடிமை எம்.பி.கள் ஆரவாரம் செய்ய, எதிர்க்கட்சியினரை ஏசினார். இந்திரா கொலை வழக்கில் எதிர்த்தரப்பு வக்கீலான ராம்ஜெத்மலானி, ''சட்டத்தின் தோலைப் போர்த்திக் கொண்டுள்ள அரசியல் நரி'' என்று இகழ்ந்தார்.

சதிவழக்குத் தொடுக்கும் சமயம் பார்த்து தாக்கர் அறிக்கையை பத்திரிக்கைகளுக்கு கொடுத்த துரோகிகளைக் கண்டுபிடிப்போம் என்று குளுரைத்தார். அரசியலும் மதமும் சேர்ந்த வெடிமருந்துக் கலவையை வெடிக்கச் செய்யும் சதி நடக்கிறது; அதைத் தகர்ப்போம் என உறுதிபூண்டார். தனது கட்சியில் ஊழல் பேர்வழிகளே கிடையாது; மிகவும் நேர்மையான, பொறுப்பான கட்சியும்

இந்திரா கொலையைவிட மிகப்பெரிய சதி செய்ததாக இரண்டாவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சிம்ராஞ்சித் சிங் மான் மற்றும் அதீந்தர்பால் சிங்.





படிப்பகம்

www.padippakam.com

ஆட்சியும் நடத்துவதாக பெருமையடித்துக் கொண்டார். தனது தாய் இந்திராவையும் சகோதரன் சஞ்சய்காந்தியையும் பாசத்தோடு நினைவு கூர்ந்து கண்ணீர் வடித்தார். அவர்களுடைய பெயரால் தேச ஒருமைப் பாட்டைக் காப்பதாக சபதமெடுத்தார். ஆக, வரவிருக்கும் தேர்தலுக்கு அவசியமான கவர்ச்சி, பாசம், சதி, கொலை, துப்பறிதல், வழக்குமன்றக் கட்சி, வீர வசனம் நிறைந்த ஒரு ''நல்ல மசாலா சினிமா''வைத் தயாரிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்!



## ஜெயலலிதா, கருணாநிதி மீதான கொலை முயற்சிகள்: துணைக்கதைகள்

பிணத்தைக் காட்டியும், கவர்ச்சியைக் காட்டியும் ஓட்டுப் பொறுக்குவதில் முன்னோடியான பாரம்பரியம் உடையது தமிழக அரசியல். கொலை முயற்சி சதியைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவதில் மட்டும் பின்தங்கி விடுமா என்ன? இருந்தாலும் பாசிச ராஜீவ் கும்பலின் கட்டுக்கதைகளோடு ஒப்பிடும் போது ஜெயலலிதா, கருணாநிதி மீதான கொலை முயற்சி - சதிகள் வெறும் துணைக் கதைகளாக - பிரதானக் கதையின் இணையாக ஓடும் நகைச்சுவைக் கதைகளாகத் தெரிகிறது.

புதுடில்லி புறப்படும்முன் பத்திரிக்கையாளர்களைக் கூட்டி தன்னை கொல்வதற்கான சதி பற்றிய கட்டுக்கதையை அவிழ்த்து விட்டார் ஜெயலலிதா. ''எனக்கும் எனது சிநேகிதி சசிகலாவுக்கும் விஷம் வைத்தும், எனது குடும்ப நண்பர் நடராஜனையும், எனது கட்சி எம்.எல்.ஏ. செங்கோட்டையனையும் காரை ஏற்றியும் ஒரு மாதத்துக்குள் கொன்றுவிட கருணாநிதி உத்திரவு போட்டுள்ளார். அவரது நெருங்கிய உள்வட்டத்திலிருந்து நம்பகமான ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்தார். தெரிவித்தவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுமாதலால் பெயரைச் சொல்லமாட்டேன்'' என்று சதியை விளக்கினார், ஜெயலலிதா.

கொலைச் சதிக்கு ஒரு ஆதாரமும் காட்டியுள்ளார். அவர் மருத்துவமனையில் இருந்தபோது யாரோ கோவில் பிரசாதம் என்று சொல்லி சர்க்கரைப் பொங்கலும், ரவா கேசரியும் வைத்துவிட்டுப் போயுள்ளார்கள்; அதை ஜெயலலிதா எறிந்துவிட்ட பிறகு தன் மீதான கொலைச் சதிபற்றிய தகவல் வந்தது; முன்னதாக வந்திருந்தால் பிரசாதத்தில் விஷம் இருக்கிறதா என்று பார்த்திருப்பார். இந்தச் சதிச் செய்தியை விளக்கி விட்டு, ''இதைக் கட்டுக்கதை என்றும், பரபரப்பூட்டுவதற்காகச் சொல்லவில்லை. மலிவான விளம்பரத்தின் மீது எனக்கு ஆசையில்லை. நான் நாடகமாடுவதாக சில ஆங்கில ஏடுகள் சொல்லும் என்று எனக்குத் தெரியும்... ஆனால் சிலசமயம் கட்டுக்கதைகளை விட உண்மை வியக்கத்தக்கதாக உள்ளது'' என்று ஜெயலலிதாவே தன்னுடைய புளுகை மறைமுகமாக ஒப்புக்கொண்டுவிட்டார்.

### சட்டமன்ற ரௌடித்தனங்களை அம்பலப்படுத்தி...

சட்டமன்ற ரௌடித்தனங்களை அம்பலப்படுத்தி திருச்சியில், 3.4.89 அன்று எடத்தெரு அண்ணாசிலை அருகிலும், 4.4.89 அன்று செந்தண்ணீர்புரம் மாதா கோவில் திடலிலும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

மேற்கண்ட இரு கூட்டங்களுக்கும் தோழர் முத்து தலைமை தாங்க, தோழர் காளியப்பன் (ம.க.இ.க. தஞ்சை கிளை செயலர்) சிறப்புரையாற்றினார். கடந்த மார்ச் 25ந் தேதி நடந்த தமிழக சட்டமன்ற ரௌடித் தனங்களை அம்பலப்படுத்தியதோடு, சட்டமன்ற மாண்பு -புனிதம் என்று ஒன்றும் கிடையாது என்று விளக்கியும், இதுபோன்ற பொறுக்கி அரசியலுக்கு மாற்று அரசியலான புரட்சிகர இயக்க அரசியலையும், புதிய ஜனநாயக மாற்று அரசியலைப்பையும் சிறப்பாக எடுத்துரைத்தார். இரு நிகழ்ச்சிகளிலும் 500க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டுவந்து உற்சாகத்துடன் ஆதரவளித்தனர்.

— ம.க.இ.க; திருச்சிகிளை.

நெய்வேலி - மந்தாரக் குப்பத்தில் சட்டமன்ற ரௌடித்தனங்களை அம்பலப்படுத்தி 8-4-89 அன்று பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் கலைச்சித்தன் தலைமையில், தஞ்சை ம.க.இ.க. செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். கடலூர் ம.க.இ.க. தோழர் சக்கரை, திருவெண்ணைநல்லூர் விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் நாராயணன் ஆகியோரும் உரையாற்றினர். பகுதிவாழ் தொழிலாளர்கள் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

தகவல்: 'புதிய கலாச்சாரம்' வாசகர் வட்டம், வடலூர் - நெய்வேலி

ஜெயலலிதா மீதான கொலை - சதி முயற்சி நாடகச் செய்தி கேட்டதும், ''அவருக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டது. அதுதான் இப்படி உளறி இருக்கிறார்'' என்று ஒரு தி.மு.க. மந்திரி பேசியுள்ளார். உண்மையில் இந்தக் ''கிறுக்கு'' முதலில் பிடித்தது கருணாநிதிக்குத்தான். தேர்தலுக்குத் தேர்தல் தன் மீது கொலைமுயற்சி என்று புரளிகிளப்பி ஓட்டுப் பொறுக்கியவர் கருணாநிதிதான். 1967 தேர்தலின் போது யாரோ சிலர் பயங்கர ஆயுதங்களுடன் தன்னைக் கொல்லுவதற்காக துரத்தினர்; ஒரு குடிசையில் ஒளிந்து கொண்டு தப்பித்தேன் என்று புரளி கிளப்பினார். சில ஆண்டுகளுக்கு முன்பு நாகர்கோவிலில் ஒருவர் தன்னைக் கொல்ல முயன்றதாக பரபரப்பு ஏற்படுத்தினார் இரண்டரை அங்குல உளி ஒன்றைக் காருக்குள் இருந்த கருணாநிதி மீது விசினாராம். அது முன்பக்க கண்ணாடியை சிதைத்துக்கொண்டு போனதாம்! பிறகு விசாரித்ததில் அப்படி உளியை வீசியவர் ஒரு மன நோயாளி என்று தெரிந்தது.

கடந்த ஜனவரி சட்டமன்ற தேர்தலின் போது யாரோ ஒருவர் கருணாநிதியைக் கொல்வதற்காக கட்சித் தலைமையகத்துக்கு ஆயுதத்துடன் வந்து அவரை விசாரித்ததாக பரபரப்பான செய்தி வெளியிட்டார். அவர் ஒரு தென் மாவட்டத்துக் கழக உடன்பிறப்பு. கருணாநிதி மீது மோகம் கொண்டவர். இரவெல்லாம் கண்விழித்து ரயிலில் வந்து கசங்கிய உடையோடு கருணாநிதியைப் பார்க்க முயன்றிருக்கிறார். அவரது பையில் ஒரு மூன்று அங்குலக் கத்தி இருந்ததாம். கருணாநிதி தலைமையகத்திலிருந்து புறப்பட்டுப் போய் அரைமணி நேரமாகிவிட்டது இருந்தும் இல்லாத நபரை, வெறும் மூன்று அங்குலக் கத்திகொண்டு, கழக உடன்பிறப்பே கொல்ல முயன்றார் என்று போலீசிடம் ஒப்படைத்து தலைப்புச் செய்தியாக்கி ஓட்டுப் பொறுக்கினார்கள்.

அரசியல் தொடர்பு இல்லாத எம்.ஜி ஆர். - எம்.ஆர்.ராதா துப்பாக்கி சூட்டை 1967 தேர்தலில் முக்கியப் பிரச்சார ஆயுதமாக பயன்படுத்தினார்கள். எம்.ஜி.ஆர். தனிக்கட்சி தொடங்கியபோது ஒரு மாணவர் ரோஜா மாலை அணிவித்தாராம். அதிலே ஒரு ஊசி இருந்து எம்.ஜி.ஆர். கழுத்தைக் குத்தியதாம். அவரே அந்த மாணவரைப் பிடித்து அடித்துவிட்டு, தன்னைக் கொல்ல முயன்றதாக புரளிகிளப்பினார். எம்.ஜி ஆர். பழைய கிராம அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்தபோது அவரைக் கொல்ல ஒரு வயதானவர் முயன்றதாக கைது செய்து வழக்குப் போட்டார். அவரிடம் இருந்து ஒரு சிறு பேனாகத்தியைப் பறிமுதல் செய்தனராம்! தன்னை யாரோ எப்போதும் கொல்ல முயல்வதாகக் கூறி ஒரு அடியாட்படையைக் கூடவே இழுத்துக் கொண்டு சுற்றினார் எம்.ஜி.ஆர். அதே போல ஜெயலலிதாவுக்கு ஒரு பூனைப் படை; கருணாநிதிக்கு ஒரு இளைஞர் படை; வீரமணிக்கு ஒரு கருஞ்சட்டைப்படை;

உறுப்படியான கொள்கை, இலட்சியம், திட்டத்தைச் சொல்லி ஓட்டுப்பொறுக்க முடியாத அரசியல் ஓட்டாண்டிகள், கவர்ச்சி, தனிநபர் மோகம், இலவசத் திட்டங்களைக் காட்டி ஏய்த்தவர்கள் இப்போது கொலைமுயற்சி -சதி போன்ற புரளிகளைக் கிளப்பி அனுதாபத்தைத் திரட்டி ஆதாயம் அடைகிறார்கள். புரளியைக் கிளப்புவது மட்டுமல்ல. ஏற்கனவே தலைவர்கள் கைது, உடல்நிலை சரியில்லாதது போன்ற அற்ப விவகாரங்களுக்கெல்லாம் தீக்குளிக்கும் தொண்டர்கள் கொலை முயற்சி - சதி கேட்டு வெறிபிடித்து எதிர்த்தரப்பினரைத் தாக்குகின்றனர்; இதுதான் வாய்ப்பென்று சமூக விரோதிகள் சூறையாடல் போன்ற வன்முறைகளில் இறங்குகின்றனர்; மதவெறியினர் அப்பாவிகளான மாற்று மதத்தினரைச் கொல்கின்றனர்.

ஆகவே உண்மையில் இந்த ஓட்டுப் பொறுக்கிகள்தான் மிகப்பெரிய சதிகாரர்கள், கொலைகாரர்கள். ஆத்திரமுற்ற தனிநபர்களால் கொல்லப்படுவதைவிட, மக்கள்திரள் எழுச்சியினால் பகிரங்கமாக அழித்தொழிக்கப்பட வேண்டிய தீய சக்திகள். ○

www.padippakam.com

## - பழிவாங்குதல்
## - மிரட்டல்
## பொய் வழக்கு
## - கொத்தடிமைத்தனம்!



# டி.வி.எஸ். நிர்வாகத்தின் அட்டூழியம்!

தென்னாட்டிலேயே மிகப் பெரிய தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிறுவனமான டி.வி.எஸ் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் உரிமைகள் ஏதுமின்றி அடிமைகளாக அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். இம்மென்றால் மெமோ; ஏன் என்றால் சஸ்பெண்ட்; போராடினால் நிரந்தர வேலை நீக்கம் என்று தொழிலாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு வருகிறார்கள். கொட்டை போட்ட பிரபல தொழிற்சங்க சுல்தான்கள் கூட டி.வி.எஸ்.-இல் தமது தொழிற்சங்கத்தை நிறுவ அஞ்சுமளவுக்கு அதன் ஆள் பலமும், பண பலமும், அடாவடித்தனங்களும், அட்டூழியங்களும் கொடி கட்டிப் பறக்கின்றது.

நெல்லை மாவட்டம் நான்குநேரியில் டி.வி.எஸ். நிர்வாகம் ஒரு நூற்பாலையையும், சதர்ன் ரோட்வேஸ் என்ற சரக்கு போக்குவரத்து நிறுவனத்தையும், டயர் ரீட்ரெட் நிறுவனத்தையும் இயக்கி வருகிறது. இதில் சதர்ன் ரோட்வேஸ் நிறுவனம் மிகத் தொன்மையானது. இங்கு கடைந்தெடுத்த பிற்போக்குத்தனமான, கருங்காலி காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. சங்கத்தை மட்டுமே டி.வி.எஸ். நிர்வாகம் அனுமதித்து, ஆதரிக்கிறது. இந்த பொம்மைச் சங்கத் தலைவராக, பொம்மையா என்ற எடுபிடி இருந்து வருகிறார்.

இந்நிலையில் ஒரு மாற்றுத் தொழிற்சங்கம் இருந்தால்தான் தொழிலாளிகள் தப்பிக்க முடியும், வாழ முடியும் என்ற உணர்வோடு தொழிலாளர்கள் சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் (SIEU), சதர்ன் ரோடுவேஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் (SREU) ஆகிய தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் துவக்கினர். உடனே நிர்வாகம் பீதியடைந்து, தொழிலாளர்கள் மீது அதிகமாக வேலைப் பளுவைச் சுமத்தி, பழவாங்கும் செயல்களில் வெறி கொண்டு இறங்கியது.

இதற்கிடையில் 1979ல் கூலி உயர்வுக்காக மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். நிரந்தரத் தொழிலாளர்கள் 600 பேரும் நிரந்தரமற்ற 50 தொழிலாளர்களும் விடாப்பிடியாக தொடர்ந்து 48 நாட்கள் போராடிய போது டி.வி.எஸ். நிர்வாகம் கிரிமினல் சதி வேலைகளின் மூலம் போராட்டத்தை உடைத்து மில்லை ஓட்டும் முயற்சியில் இறங்கியது.

சுமார் 100க்கும் மேற்பட்ட ரௌடிகளைக் கொண்டு வீடுவீடாகச் சென்று தொழிலாளர்களை மிரட்டத் தொடங்கியது. நிராயுதபாணியான தொழிலாளர்களில் சிலர் தம் உயிருக்கும் உடமைக்கும் அஞ்சி வேலைக்குத் திரும்பினர். தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தற்காலிகமாகப் பின்வாங்கிய அனைத்துத் தொழிலாளர்களும் பின்னர் வேலைக்குச் சென்றனர்.

இந்த சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்து காத்துக் கொண்டிருந்த நிர்வாகம் தி.மு.க., அ.தி.மு.க., ஹெச்.எம்.எஸ். தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் சங்க முன்னனியாளர்கள் 40 பேரிடம் நிர்பந்தமாக ராஜினாமா கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு அவர்களின் வயிற்றிலடித்தது. ஐ.என்.டி.யு.சி. சார்புடைய டி.வி.எஸ். தொழிலாளர் சங்கம் என்ற எடுபிடி கருங்காலி சங்கத்தை நிர்வாகமே உருவாக்கியது. அந்த சங்கத்திற்கு சந்தாவாக மாதா மாதம் ஒரு ரூபாயை தோட்ட வேலை செய்வர் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்கள் சம்பளத்திலும் நிர்வாகமே பிடித்தம் செய்து கொடுத்தது.

இக்கருங்காலி சங்கத்தின் துணையுடன் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு வடையும், கேசரியும், காப்பியும் வாங்கிக் கொடுத்து நைச்சியமாகப் பேசி ஒவ்வொரு தொழிலாளியையும் கூடுதலான வேலைப் பளுவைத் திணிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடும்படி நிர்வாகம் நிர்பந்தித்தது. கையெழுத்து போடாமல் வெளியே செல்ல முயன்றால் வாட்ச்மேன் மறிப்பார். அதையும் மீறிச் சென்றால் அடுத்த நாள் மில்லில் திருடியதாகவும், நிர்வாகிகளைத் திட்டியதாகவும் நோட்டீஸ் கொடுப்பார்கள்

இப்படி பல வழிகளிலும் தொழிலாளர்களை மிரட்டி கொத்தடிமைகளாக்கிய டி.வி.எஸ். நிர்வாகத்தின் அட்டூழியங்களை எழுதி மாளாது. இதன் உச்சகட்டமாக பஞ்சப்படிக்கு (DA) உச்சவரம்பைக் கொண்டு வந்து கடந்த 10 ஆண்டுகளாக தொழிலாளர்களின் உதிரத்தை உறிஞ்சி வருகிறது, டி.வி.எஸ். நிர்வாகம். இந்த அயோக்கியத்தனத்தை எதிர்த்தும், மாறிவரும் விலைவாசி புள்ளிக்கேற்ப பஞ்சப்படியும் கொடுக்க வேண்டுமென ஐ.என்.டி.யு.சி. தவிர இதர சங்கங்கள் போராடின. ஆத்திரமடைந்த நிர்வாகம் தொழிலாளர் குடும்பத்தாரிடம், தொழிலாளி இல்லாத நேரத்தில் சென்று மிரட்டி வந்தது. ஆனால் தொழிலாளர்கள் உறுதியாக இருந்ததால் நிாவாகத்தின் நரித்தனம் பலிக்கவில்லை.

பின்னர், எம்ப்ளாயீஸ் யூனியன் சங்கத் தலைவரான திருமதி நந்தனாரெட்டி அவர்களையும், சங்கத்தின் சட்ட ஆலோசகரும் உயர்நீதிமன்ற வுழக்கறிஞருமான வி.பிரகாஷ் அவர்களையும் நிர்வாகம் விலைக்கு வாங்கப் பார்த்தது. அது பலனளிக்காமல் போகவே, பிரகாஷ் அவர்கள் யூனியன் விஷயமாக மதுரை வந்தபோது, அவரை டவுன்ஹால் ரோடில் 10 அடியாட்களை ஏவிவிட்டு மிருகத்தனமாக தாக்கியது, நிர்வாகம். ''இனிமேல் டி.வி.எஸ்.-இல் ஐ.என்.டி.யு.சி.யைத் தவிர வேறு சங்கம் ஆரம்பித்தால் உன்னை பிணமாகத்தான் அனுப்புவோம்'' என்று அவரை மிரட்டியது. அடக்குமுறையின் மூலம் புதிய சங்கம் உருவாவதை தடுத்துவிடலாம் என்று மனப்பால் குடித்தது நிர்வாகம். ஆனால் எங்கெல்லாம் டி.வி.எஸ். நிறுவனம் உள்ளதோ அங்கெல்லாம் கருங்காலி ஐ.என்.டி.யு.சி. யிலிருந்து விலகி புதிய சங்கத்தில் தொழிலாளர்கள் திரளத் தொடங்கி நிர்வாகத்தின் எத்தனிப்புகளுக்கு ஆப்பறைந்தனர்.

இதன் விளைவாக, குறிப்பாக ரப்பர் பேக்டரியில் கருங்காலி ஐ.என்.டி.யு.சி. சங்கம் சிறுபான்மையாகிப் போனது. 80% தொழிலாளர்கள் எம்ப்ளாயீஸ் யூனியனில் திரண்டிருந்தனர். ஆனாலும் நிர்வாகம், சிறுபான்மை எடுபிடி சங்கமான ஐ.என்.டி.யு.சி.யை வைத்து தொழிலாளர்கள் மீது மேலும் வேலைப் பளுவைத் திணிக்கும் வகையில், அவர்களது தனிமனித உரிமைப் பறிக்கும் வகையில் 18(1) என்ற துரோக ஒப்பந்தத்தைப் போட்டு அதை தொழிலாளர்கள் மீது திணித்தது. இதை ஏற்காவிட்டால் தொழிலாளிக்கு இன்சென்டிவ், போனஸ் ஊக்கத் தொகை ஆகியன கிடைக்காது என்று அறிவித்தது. மேலும் 900 ரூபாயாக இருந்த பஞ்சப்படியை இப்போது ரூ.1175 ஆக மாற்றி, ஒப்பந்தத்தை ஏற்பவர்களுக்கு மட்டுமே இத்தொகை வழங்கப்படும் என்றும் வாதிட்டது. நைச்சியமாகப் பேசியும், துறை மேலாளர்களை வைத்து தனித்தனியே மிரட்டியும், தொழிலாளி இல்லாத நேரத்தில் அவர்தம் குடும்பத்தாரை அச்சுறுத்தியும் இத்துரோக ஒப்பந்தத்தில் பெரும்பான்மை தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்க நிர்வாகம் தலைகீழாக நின்று பார்த்தது. ஆனால் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் நிர்வாகத்தின் சூழ்ச்சியை ஓரணியில் நின்று எதிர்த்து, கையெழுத்திட மறுத்தனர்.

இதன் விளைவாக துரோக ஒப்பந்

படிப்பகம்

www.padippakam.com

தத்தை ஏற்காத எம்ப்ளாயீஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளிக்கு, உதாரணமாக, அக் - நவம் - டிசம்பர் '88 ஆகிய மூன்று மாத இன்சென்டிவ் தொகை ரூ.225யை வாங்க முடியவில்லை. இதோடு, பஞ்சப்படி ரூ.900 தான் கிடைக்கும். அதேசமயம் ஐ.என்.டி.யு.சி.யைச் சேர்ந்த தொழிலாளிக்கு மேற்கூறிய ஊக்கத் தொகையோடு புதிய பஞ்சப்படி ரூ.1175 கிடைக்கும். இப்படி ஒரே நிறுவனத்தில் இரண்டு வகையான சம்பளங்களைக் கொடுத்து, பெரும்பான்மைத் தொழிலாளிகளின் வயிற்றிலடித்து வருகிறது, டி.வி.எஸ். நிர்வாகம்.

இதோடு தொழிலாளிகளை எழுதக் கூசும் வார்த்தைகளால் ஏசி "மெமோ" கொடுப்பது, சதர்ன் ரோட்வேஸ் தொழிலாளிக்ளை அடிக்கடி மாற்றம் செய்து கொடுமைப் படுத்துவது, எம்ப்ளாயீஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் மீது கூடுதலாக வேலைப்பளுவைத் திணிப்பது, அவர்களுக்கு ஓவர்டைம் கொடுக்க மறுப்பது, மூலப் பொருட்களிலும் இயந்திரத்திலும் உள்ள குறைபாட்டை சீர் செய்யாமல் உற்பத்தியில் சேதாரம் அதிகமாக உள்ளது என்று கூறி ஸ்பின்னிங் தொழிலாளியின்




ஊதியத்தில் ரூ.150 வரை அநியாயமாக பிடித்தம் செய்வது என்று பலவழிகளிலும் மாற்று சங்கத் தொழிலாளிகளைக் கசக்கிப் பிழிகிறது. இன்னும் கீழ்த்தரமாகப் போய், "நிர்வாகம் கொடுக்கும் கேசரியை சாப்பிடாதீர்கள்; விஷம் வைத்துக் கொன்று விடுவார்கள்" என்று கூறியதாக தொழிலாளி மீது பொய்வழக்கு போடுவது, தீ வைக்க முயன்றதாக, அதிகாரியை மிரட்டியதாக, காரை மறித்ததாக, கதவைத் தட்டியதாக என கணக்கு வழக்கின்றி பல பொய் வழக்குகளை தொழிலாளர்கள் மீது போட்டுள்ளது. தென்னாப்பிரிக்க நிறவெறிக் காட்டுமிராண்டி போத்தா கூட டி.விஎஸ். நிர்வாகத்திடம் பாடம் கற்க வேண்டும். அந்த அளவுக்கு அதன் அடக்குமுறைகளும் அட்டூழியங்களும் எல்லை மீறிவிட்டன.

மாற்றுச் சங்கத்தை வளரவிடாமல் ஒழிக்க வேண்டும் என்ற வெறியில் 600 நிரந்தரத் தொழிலாளர்களில் 350 தொழிலாளர்களிடம் நிர்பந்தமாக ராஜினாமா கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு அவர்களை வேலையிலிருந்து விரட்டிவிட்டது, காட்டுமிராண்டி நிர்வாகம். வறுமையின் காரணமாக சில தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எதிராகத் தொடுத்த வழக்கிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்று எழுதிக் கொடுத்து வேலைசெய்த காலத்துக்கான கிராஜுடியைப் பெற்றுள்ளனர். வழக்கு நடத்திக் கொண்டிருக்கும் இதர தொழிலாளர்கள் மேல் பொய் வழக்கு போடுவதன் மூலம் நிர்வாகம் தொடர்ந்து மிரட்டிக் கொண்டிருக்கிறது. இதே நிறுவனத்தில் ரூ.1500 சம்பளம் பெற்ற தொழிலாளி வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டு வறுமை காரணமாக அதே நிறுவனத்தில் 10 ரூபாய் தினக்கூலிக்கு வேலை செய்யும் அவலம் தொடர்கிறது.

தொழிலாளர் உதிரத்தை உறிஞ்சியும், அவர்களின் நரம்புகளையே நூலாக்கி நூற்பாலையை இயக்கியும் கொள்ளையடித்த டி.வி.எஸ். நிர்வாகம் இன்று மதுரை அருகே மேலும் இரு மில்களை நிறுவுமளவுக்கு வளர்ந்துவிட்டது. தென்னாட்டிலேயே மிகப்பெரிய தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனமாக டி.வி.எஸ். வளர்ந்து புகழ் பெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணம் இப்படிப்பட்ட "நிர்வாகத் திறமை"தானே தவிர வேறில்லை.

எத்தனையோ கட்சிகள் வந்தன; ஆட்சிகள் மாறின. ஆனால் அவை டி.வி.எஸ்.-ன் அரக்கத்தனமான சுரண்டலுக்கும் அட்டூழியங்களுக்கும் எதிராக ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை. பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றும் தொழிலாளர்களும் இன்னமும் ஓட்டுக்கட்சிகள் மீது நம்பிக்கை வைப்பதில் பலனில்லை. ஏற்கனவே அவர்கள் சென்னை டி.வி.எஸ். தொழிலாளர் போராட்டத்தின் போது தமது கையாலாகாத்தனத்தை நிரூபித்துக்காட்டி விட்டனர். தொடர்ந்து தமது துரோகத்தனத்தை பல சந்தர்ப்பங்களின் நிரூபித்து வருகின்றனர். எனவே புரட்சிகர அமைப்புகளின் கீழ் தொழிலாளர்கள் திரள வேண்டும்; பிழைப்புவாத, தொழிற்சங்கவாத குறுகிய நலன்களைக் கைவிட்டு பிற பகுதி உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராட வேண்டும். இதன் மூலமே சர்வாதிகார டி.வி.எஸ். நிர்வாகத்தின் எத்தனிப்புகளை நிர்மூலமாக்க முடியும்.

— தகவல்: மக்கள் கலை இலக்கியக் கழகம், மதுரை கிளை.



## வறட்சியைப் போக்க வக்கற்ற அரசை எதிர்த்து பிரச்சாரப் பேரணி!

உத்தமபாளையம் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்கக் கோரியும், கூலி - ஏழை விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்திரவாதமளிக்க போர்க்கால நடவடிக்கை எடுக்கக் கோரியும், நடுத்தர விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யக் கோரியும் கடந்த மார்ச் 13ந் தேதியன்று விவசாயிகள் விடுதலை முன்னணி, சைக்கிள் பிரச்சார இயக்கத்தை நடத்தியது. இப்பிரச்சார இலக்கியத்துக்குத் தலைமை தாங்கிய தோழர் பழனிச்சாமி, "வாட்டுகின்ற வறட்சிக்கு முழுப் பொறுப்பு இந்த அரசுதான்; எனவே இந்த பொறுப்பற்ற அரசை -விவசாயிகளின் விரோத அரசைத் தூக்கியெறிய, ஆயுதப் போராட்ட அரசியலை உயர்த்திப் பிடிக்கும் வி.வி.மு.வில் அணி திரளுங்கள்" என்று அறைகூவல் விடுத்து இயக்கத்தைத் துவக்கி வைத்தார்.

எழுச்சியூட்டும் முழக்கங்களோடு 10 கிராமங்களுக்குச் சென்று புரட்சிகர பாடல்கள் மூலமாகவும், விளக்கச் சொற்பொழிவுகள் மூலமாகவும் அரசின் பொறுப்பற்ற தன்மையையும், புரட்சிப் போராட்டத்தின் அவசியத்தையும் விவசாயிகளுக்கு உணர்த்தினோம். பெண் தோழர்களும் பங்கேற்ற எமது பிரச்சார இயக்கம் பெருவாரியான விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றது. ஆங்காங்கே மக்கள் நிதி மற்றும் உணவுப் பண்டங்களை அன்போடு கொடுத்து ஆதரவளித்தனர்.

இப்பிரச்சார இயக்கத்தின் இறுதிக்கட்டமாக பண்ணைப் புரத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதிலே பேருரையாற்றிய ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் கதிரவன், ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தையும், விவசாயிகளின் விரோத அரசையும் அம்பலப்படுத்திப் பேசினார். உத்தமபாளையம் வட்ட வி.வி.மு. தோழர்களின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும், அதிலே குட்டித் தோழர்களின் பங்கேற்பும் மக்களின் மனப்பூர்வமான ஆதரவையும் வரவேற்பையும் பெற்றது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி, உத்தமபாளையம் வட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



கட்டணக் கழிப்பிட ஊழல்:

# பினாமிகள்மூலம் அதிகார வர்க்கம் அடிக்கும் கொள்ளை!

**க**ட்டணக் கழிப்பிடம்; ஏதோ அவசரத்திற்கு ஒதுங்குவதற்கு அரசு செய்திருக்கும் நல்ல ஏற்பாடு! இலவசமாக திறந்து வைத்ததெல்லாம் நாறிப்போய் கிடக்கும் போது இது ஒன்றாவது உருப்படியாக இருக்கிறதே என்று விபரம் அறியாதவர்களும் விதிவிலக்காக பயணம் செய்பவர்களும் ஆறுதல் அடைகிறார்கள்.

இலவசக் கழிப்பிடத்தை பொதுமக்கள் குப்பைத் தொட்டியாக பயன்படுத்துவதாக, வானொலி விளம்பரங்கள் மூலம் பிரச்சாரம் செய்து அடித்தட்டுமக்களை அவமானப்படுத்துகிறது, அரசு. அதையும் வக்கணையாக கேட்டு ரசிக்கிறது, நாட்டு நடப்புகளைப் பற்றிய சுய அறிவே இல்லாத மேட்டுக்குடி சோம்பேறி வர்க்கம்.

கால் அலம்பும் நீருக்கு வசதி செய்யாமல் கழிப்பிடத்தைக் கட்டிவிட்டு, சுத்தமாக இல்லை, சுத்தமாக இல்லை என்றால், எப்படியிருக்கும்? மக்கள் எல்லாம் என்ன பன்றிகளா? அதிகாரவர்க்கம், தங்கள் வீடுகளில் இருக்கும் கழிப்பிடத்தை நாக்கால் நக்கியா சுத்தம் செய்கிறது?... அறிவு வேண்டாம்! அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தால் எதையும் உளரலாம் என்ற திமிரா?

விசயம் இத்தோடு நின்றுவிடவில்லை! கை அரிப்பெடுத்து அலைவதையே தனது பிறவித் தொழிலாகக் கொண்ட அதிகார வர்க்க வெள்ளையானை, கழிப்பிடத் திட்டத்திலும் தான் கைவைத்திருப்பதை மறைப்பதற்குதான், சுத்தம், சுகாதாரம் பற்றி இப்படி கூப்பாடு போடுகிறது.

மாநிலத்தின் பெருநகரங்கள் அனைத்திலும் அமைக்கப்பட்டிருக்கும் இலவச மற்றும் கட்டணக் கழிப்பிடங்களை அந்தந்த ஊராட்சி; பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அமைப்புகள் இயக்குகின்றன. அக்கழிப்பிடங்களை பாதுகாப்பதற்கென அதிகாரவர்க்கத்தில் ஒரு தனிப்பிரிவே இயங்குகிறது. கழிப்பிடப் பாதுகாப்பு என்ற இரண்டடுக்கு அதிகார அமைப்புதான் கழிப்பிடத்தை பாதுகாப்பதற்கான ஏகபோக அதிகாரத்தை கையில் வைத்துள்ளது. கட்டணக் கழிப்பிடங்களை ஏலம் விடுவது முதல், பொதுக் கழிப்பிடங்களை சுகாதாரமாக வைத்திருப்பது வரை அனைத்தும் இதன் பொறுப்பு.

கட்டணக் கழிப்பிடங்களை ஏலம் விடுவது என்ற பெயரில், பினாமிகளை வைத்து தாங்களே ஏலம் எடுப்பது, ஏலத்தொகையை அடுத்த ஏலம் வரை வரவு வைக்காமல் கையாடல் செய்வது, கடைசி வரையில் ஏலத் தொகையை செலுத்தாமல் பினாமிகளின் மீது போலி புகார் எழுதி வசூலிக்க முடியவில்லையென கணக்கை முடிப்பது, கூட்டுச் சேர்ந்து குறைந்த தொகைக்கு ஏலம் எடுப்பது என சகல தில்லுமுல்லுகளையும் செய்து கட்டணக் கழிப்பிடங்களை தனது பரம்பரை சொத்தாகவே பாவிக்கிறது அதிகாரவர்க்கம்.

பினாமிகள் மூலம் நடத்தும் கட்டணக் கழிப்பிடங்களை சுத்தம் செய்யவும் பாதுகாப்பாக வைத்திருக்கவும் தனது நிர்வாகத்தின் கீழுள்ள அடிமட்ட ஊழியர்களையே பயன்படுத்திக் கொள்கிறது. இலவசக் கழிப்பிடங்களை சுத்தம் செய்யவும், அலுவல் எல்லைக்குள் இருக்கும் தெருக்குப்பைகளைக் கூட்டவும் அவர்கள் சென்றிருப்பதாக பொய்யான கணக்கெழுதுகிறது. பொது சுகாதாரத்திற்காக பன்படுத்த கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்துப் பொருட்களையும் தனது சொந்த கட்டணக் கழிப்பிடங்களை சுத்தம் செய்ய பயன்படுத்திக் கொள்கிறது. துடப்பம் முதல் 'ப்ரஷ்' வரை கழிப்பிட கறை நீக்கி **(BLEACHING POWDER)** முதல் 'பினாயில்' வரை, சோப்பு முதல் சீப்பு வரை அனைத்தையும் சுருட்டிச் சென்று தனது கட்டணக் கழிப்பிடங்களை அழகுபடுத்துகிறது. பொதுச் சுகாதாரத்திற்கு கொடுக்கப்பட்ட இந்தப் பொருட்கள் எதுவும் இல்லாமல், சுத்தம் செய்யவும் ஆட்கள் இல்லாமல் பொதுக் கழிப்பிடம் நாறுகிறது.

தப்பித்தவறி வெளியாள் யாராவது கட்டணக்கழிப்பிடத்தை ஏலம் எடுத்தால், அதில் சுகாதாரம் இல்லை, பாதுகாப்பு இல்லை என்று பொய் புகார் கிளப்பி உடனே மறு ஏலத்திற்கு உத்தரவிடுகிறது. பினாமிகள் மூலம் மீண்டும் அதை கையகப்படுத்துகிறது. அப்படியும் முடியாமல் போனால் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு வருவாயில் கணிசமான பங்கை பிடுங்கிக் கொள்கிறது. சொல்லி வைத்தது போல் தமிழகம் முழுவதும் இந்த நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது.

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில், அதிகாரவர்க்கத்தின் இம்மோசடி தலைவிரித்தாடுகிறது. பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்து கல்யாண மண்டபம் கட்டி வாடகைக்கு விடுபவர்களுக்குக்கூட சராசரியாக நாளொன்றுக்கு 500 ரூபாய் வருமானம் கிடைப்பது அரிது. ஆனால் பைசா செலவு இல்லாமல் அதிகாரவர்க்கம் சென்னையில் நாளொன்றுக்கு ஒரு கழிப்பிடத்தில் மட்டும் 1000 ரூபாய் வருமானம் பெறுகிறது.

139க்கும் மேற்பட்ட வட்டங்களை **(DIVISIONS)** உள்ளடக்கிய சென்னை மாநகராட்சியில் 150க்கும் மேற்பட்ட கட்டணக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளது. துணி மாற்றுமிடம், குளியலிடம் இவற்றுடன் சராசரியாக 5க்கும் மேற்பட்ட கழிப்பிட அறைகளும் 6 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள சிறுநீர் கழிப்பிடமும், சுத்தம் செய்வதற்குத் தேவையான பொருட்களை போட்டு வைக்க ஒருசிறு அறையும் கொண்ட ஒவ்வொரு கட்டணக் கழிப்பிடமும் வருடத்திற்கு பல பத்தாயிரம் ரூபாய்களை அதிகார வர்க்கத்திற்கு ஈட்டித் தருகிறது. இதில் முக்கிய இடங்களில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கழிப்பிடங்கள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 5 லட்சத்திற்கும் அதிகமான வருமானத்தைக் கொட்டுகிறது. சென்னை -மையப் பேருந்து நிலையத்தின் அருகில் கட்டப்பட்டிருக்கும் கழிப்பிடத்தில் நாளொன்றுக்கு வருமானம் ரூபாய் 1500க்கும் மேல்! நன்றாக விற்பனையாகும் ஒரு சாராயக் கடையின் வருமானம் கூட இவ்வளவு இருக்குமா என்பது சந்தேகமே!

அதிகாரவர்க்கமே அக்கழிப்பிடத்தை பினாமிகள் மூலம் ஆண்டொன்றுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் ஏலத்திற்கு எடுத்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஆனால், ஏலம்விட ஆரம்பித்த 1953-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கழிப்பிட ஏலத்தின் மூலம் மாநகராட்சிக்கு

படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கும் வருமானமோ ஆரம்ப ஆண்டிலிருந்து ஒரே அளவாக 'சீராக' இருக்கிறது. ஏலத்தொகையில் 5 சதவிகிதம் முன்பணமாக கட்டவேண்டும் என்ற ஒரேஒரு விதிதான் இன்றுவரை செயல்பட்டு வருகிறது. இந்த ஒரேஒரு வருமானம்தான் கழிப்பிடத்திலிருந்து மாநகராட்சிக்கு கிடைக்கும் நிரந்தர வருமானமாக இருக்கிறது. வெளியாட்களின் போட்டியைத் தவிர்ப்பதற்காக தவிர்க்கமுடியாமல் அதிகாரவர்க்கம் மாநகராட்சி கட்டுப்பாட்டில் சில கழிப்பிடங்களை கொண்டுவரும். இதிலிருந்து கிடைக்கும் நேரடி வருமானம் மாதம் ரூபாய் 500. 53 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இது மாறவேயில்லை.!

இதுவரை இந்த கூட்டுக் கொள்ளையில் அதிகாரவர்க்கத்திற்குள் ஒட்டுப்பொறுக்கிகள் மாதிரி சண்டையே வந்தது கிடையாது! தொழில் 'தர்மத்தை' அவ்வளவு துல்லியமாக கடைப்பிடிக்கிறது அதிகாரவர்க்கம். ஒரு பாதுகாப்பு ஆய்வாளரின் ஆட்சி எல்லைக்குள் இருக்கும் கழிப்பிடங்களுக்குள் இன்னொரு ஆய்வாளர் எந்தக் காரணத்தைக் கொண்டும் மூக்கை நுழைக்கமாட்டார்! இதனால் கழிப்பிடத்தைப் பாதுகாத்து சுத்தம் செய்யும் அடிமட்ட ஊழியர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இரண்டுவித பயனை அடைகிறார்கள். அதை கிரமமான முறையில் அதிகரித்துக் கொள்கிறார்கள். ஒன்று; பொதுக்கழிப்பிடங்களின் பக்கம் தலைவைத்து படுக்காததால் அவை ஒரே மாதத்தில் குப்பைமேடாகிறது. அதன் மூலம் நிரந்தரமாக ஒரு வேலைச்சுமை குறைகிறது. இரண்டு; அங்கு சென்றவர்கள் எல்லாம் வேறுவழியில்லாமல் கட்டணக் கழிப்பிடத்தை நாடுவதால் அதன் வருமானம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

இந்த லட்சணத்தில், கட்டணக் கழிப்பிட முறைகேடுகளை களைவதற்கென்று அரசு ஏராளமான சட்டவிதிகளை வகுத்துள்ளது. அதில் ஒன்று; கழிப்பிடத்திற்கு வசூலிக்கும் கட்டண விபர அட்டையை பகிரங்கமாக மாட்டவேண்டும். இரண்டு; அடிக்கட்டையுடன் கூடிய அச்சடித்த கட்டண ரசீதை உபயோகிப்பாளர்களுக்கு வழங்க வேண்டும். இரண்டையுமே அமுல்படுத்துகிறது அதிகாரவர்க்கம். எப்படியென்றால், அரசு அறிவித்திருக்கும் கட்டணத்தை அறிவிப்பு செய்துவிட்டு, அடிக்கட்டையுடன் கூடிய ரசீது புத்தகத்திலிருந்து கட்டண விபரம் இல்லாத வெறும் ரசீது ஒன்றை உபயோகிப்பாளர்களுக்கு கிழித்துக் கொடுக்கிறது. சட்டவிரோதமாக இரட்டிப்புக் கட்டணங்களை வசூலிக்கிறது. வெறும் ரசீதில் பிறகு பொய் கணக்கு எழுதுகிறது.

அதிகார வர்க்கத்தின் கூட்டுக் கொள்ளை கழிப்பிடத்தோடு நின்று விடுவதில்லை. இதே அளவுக்கு அரசின் சேவைத் துறை அனைத்திலும் தொடர்கிறது. பொது இடத்தில் சைக்கிள் நிறுத்த கட்டணம் வசூலிப்பது முதல் பொது இடத்தில் தள்ளுவண்டியில் சிறு வியாபாரம் செய்யும் சாதாரண மனிதர்கள் வரை அனைவரிடமும் தன் கையை நீட்டுகிறது.

அதிகாரிகள் எல்லாம் ஒட்டுப் பொறுக்கிகள் மாதிரி ஒழுங்கங்கெட்டவர்கள் அல்ல; படித்தவர்கள், பண்புள்ளவர்கள், கண்ணியமிக்கவர்கள், பலனை எதிர்பாராது கடமையைச் செய்பவர்கள், பெரிய இடத்தில் பிறந்தவர்கள், பிறர் சொத்துக்கு ஆசைப்படாதவர்கள், சட்டதிட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள், அதன்படி நடப்பவர்கள் என்பவையெல்லாம் அதிகாரவர்க்கமே தனது கட்டுப்பாட்டிலுள்ள பிரச்சார சாதனங்கள் மூலம் கிளப்பிவிட்ட கட்டுக்கதை! அதிகாரவர்க்க கும்பலின் நிழலில் வாழும் எச்சில் கூட்டம் பரப்பிவிட்ட புனைச்சுருட்டு! மயக்க நெடி! நச்சுப் பிரச்சாரம்!

மாறாக, அதிகார வர்க்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத வீணர்கள் கூட்டம்! மக்களின் மீது பெருஞ்சுமையாய் அழுந்தியிருக்கும் வெள்ளையானை! மக்களின் ரத்தத்தை உறிஞ்சி வாழும் தேவையற்ற சதைப் பிண்டம்! மக்களின் மீது சவாரிசெய்து அவர்களை கீழே தள்ளி குழிபறிக்கும் குள்ளநரிக் கூட்டம்! அடக்குமுறை அரசு எந்திரத்தை கவசமாக அணிந்து மக்களை கொத்திக்குதறும் உயிருள்ள கொடிய மிருகம்! தொடாமலேயே சிணுங்கும்; தொட்டால் பேயாக மாறும்! உழைக்கும் மக்கள் ஒன்றாகத் திரண்டு கோடிக்கால் பூதமாக எழுந்துநின்று அதை அடித்து நொறுக்கும் போது மட்டுமே, அதன் அட்டூழியங்கள் முடிவுக்கு வரும்.

— பச்சையப்பன்.

## குழந்தைகளுக்கு 'முட்டை'! அமைப்பாளருக்கு சத்துணவு!

சத்துணவு தந்த சரித்திர நாயகன் என்ற பட்டத்துடன் ஒட்டுப்பிச்சை கேட்ட இராப்பிச்சைக்காரன் எம்.ஜி.ஆரை விட நான்தான் 'உண்மையான சத்துணவு' தருவேன் என்று முழங்கி ஒட்டுப்பிச்சை பெற்று அரியணை ஏறினார் கலைஞர். ஆனால் 'உண்மையான சத்துணவு' என்று கருணாநிதி எதைச் சொன்னார், யாருக்குச் சொன்னார் என்று ஆரம்பத்தில் புரியாமல் இருந்தது. விரைவிலேயே அதற்கோர் நடைமுறை விளக்கத்தைக் கொடுத்துள்ளார், கலைஞரின் அன்புத் தம்பியும் தளபதியுமான புதுக்கோட்டை எம்.எல்.ஏ. பெரியண்ணன்.

சுந்தம்பட்டி ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் 400க்கும் மேற்பட்ட பிள்ளைகள் படிக்கின்றனர். சனி - ஞாயிறு நாட்களில் பெரும்பான்மையான பிள்ளைகள் சத்துணவுக்காக பள்ளிக்கு வருவதில்லை. இதன் மூலமும் இன்னும் பல வழிகளிலும் சத்துணவு அமைப்பாளராகப் பணிபுரியும் தங்கவேலு மாதத்திற்கு சில ஆயிரங்களை 'உண்மையான சத்துண'வாக விழுங்கி வந்தார்.

உணவுப் பொருட்களைத் தாமே பதுக்கிக் கொண்டு, திருடு போய்விட்டதென்று போலீசில் புகார் செய்துவிட்டு தப்பித்துக் கொள்வது இவரது வாடிக்கை. போலீசும் இதுவரை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இயலவில்லை. இம்முறையும், 12-3-89 அன்று 272 கிலோ அரிசியும், 73 கிலோ பருப்பும் காணாமல் போய்விட்டதாக கந்தர்வக் கோட்டை போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆனால் அன்று மாலையே காணாமல் போன பொருட்களில் ஒரு பகுதியையும் மூன்று சாக்குகளையும் போலீசார் அவர் வீட்டிலேயே கைப்பற்றினர். கடைசியில், சத்துணவு அமைப்பாளருக்கு எதிராகவே போலீஸ் தலையீடு முடிந்தது.



எனவே 'கில்லாடி' தங்கவேலு உடனே எம்.எல்.ஏ. பெரியண்ணனிலிருந்து அடிமட்டத் தி.மு.க. தலைவர்கள் வரை அனைவரது உதவியையும் நாடினார். இதற்கிடையே 17.3.89 அன்று இரவு கந்தர்வக் கோட்டை சமூகக்கூடத் திறப்பு விழாவுக்கு வந்த எம்.எல்.ஏ. மாவட்டக் கலெக்டர் ஆகியோரிடம் இந்தக் கொள்ளையைப் பற்றி ஊர் மக்கள் சார்பில் புகார் மனு கொடுக்கப்பட்டது. ஆனால் மக்களுக்கு சேவை செய்யக் கிளம்பியுள்ள எம்.எல்.ஏ.வும் கழக உடன்பிறப்புகளும் 'உண்மையான சத்துண'வை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கி தங்கவேலுவை வழக்கிலிருந்து விடுவித்துள்ளனர். கையும் களவுமாகப் பிடிப்பட்ட பகற்கொள்ளையன் தங்கவேலு இன்று காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு ஊரில் உலாவுகிறார். இதுதான் 'தூய்மையான நிர்வாகத்தை அளிப்போம்' என்று வாக்களித்த ஊழல் பெருச்சாளி கருணாநிதி ஆட்சியின் லட்சணம்!


இந்த விவகாரத்தில் மக்கள் சார்பாக ஒரு கை பார்த்துவிடுவதாக சவடால் அடித்த 'இடது' போலிக் கம்யூனிஸ்டுகள் பிறகு என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. திருடர்களின் கூட்டணிக் கட்சியான அவர்களுக்கும் ஒருவேளை 'சத்துணவு' கிடைத்துவிட்டதோ, என்னவோ!!

தகவல்: இருட்டு, கந்தர்வக் கோட்டை

படிப்பகம்

www.padippakam.com

# மின்வெட்டு ஏன்?



மின்வெட்டு, மின்வெட்டு! எங்கு திரும்பினாலும் மின்வெட்டு! விளக்கணைவதற்குள் அரக்கபரக்க சமையல் வேலை. சாப்பாட்டை முடித்துக் கொண்டு காற்றுக்காக வாசலுக்குப் படையெடுக்கும் அடிமட்ட நடுத்தரவர்க்கம். 30 கெஜம் ஆழமுள்ள கிணற்றில் இருக்கும் 3 அடி ஆழ தண்ணீரை இறைக்க வேண்டுமென்றாலும் நடுஜாமம் வரை விழித்திருக்கும் விவசாயிகள். உரிய நாளில் வேலையை முடிக்க முடியாமல் மின்வெட்டால் அச்சகவாசலில் தவம் கிடக்கும் பத்திரிக்கையாளர்கள். மின்வெட்டு நேரத்திற்கு தகுந்த மாதிரி நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்கும் அரசு மருத்துவமனைகள். ஏற்கனவே பற்றாக்குறையால் ஓடிக்கொண்டிருக்கும் நகர்ப்புறத்து மின்சார ரயில்களின் எண்ணிக்கை, மின்வெட்டால் மேலும் குறைக்கப்படுவதால் நெரிசலில் குளித்தது மாதிரி தொப்பையாக வேர்வையோடு வெளியே வந்துவிழும் பயணிகள்! மின்வெட்டைக் காரணம் காட்டி தொழிற்சாலைகளில் வேலைக்குறைப்பு; நிரந்தரமற்ற தொழிலாளர்கள் நிரந்தரமாக வீதியில் வீசப்படுதல்; குறிப்பாக நகர்ப்புறத்தில் இயங்கும் ஒருமனிதன் மின்வெட்டால் தனது உடலில் ஒரு அங்கத்தையே இழந்தது மாதிரி அவனது வேலை அனைத்திலும் காலதாமதம், சலிப்பு, பணவிரயம். அனைத்திற்கும் மேலாக, தேசம் முழுவதும் பலலட்சம் மனித உழைப்பு நாட்கள் விரயம். பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய தேசிய உற்பத்தி இழப்பு. ஒரு விழுக்காடு மின்வெட்டால் மட்டும் ஆண்டுக்கு தேசிய உற்பத்தியில் தொழிற்துறையில் ஏற்படும் இழப்பு மட்டும் 1000 கோடி ரூபாய். அரசு தரும் புள்ளி விபரம் இது. விவசாயம் மற்றும் சேவைத்துறைகளின் நட்டம் தனி! இருந்தும் பெரும்பாலான மாநிலங்களில் சராசரியாக ஆண்டுதோறும் 25லிருந்து 40 விழுக்காடு வரை மின்வெட்டு அதிகாரப்பூர்வமாக அரசால் அறிவிக்கப்பட்டு அமுல் படுத்தப்படுகிறது. இம்மின்வெட்டு, பருவமழை தவறுவதாலும், உள்ளீட்டுப் பொருட்கள், திட்டச் செலவுகள் பற்றாக்குறையாலும் ஏற்படும் மின்பற்றாக்குறையாக வேண்டுமென்றே அரசால் திரித்துப் புரட்டப்படுகிறது.

ஆனால் உண்மையோ வேறுவிதமாக இருக்கிறது. திட்டமிட்ட இலக்குக்கு தேவையான நிதி ஒதுக்கீடு, உள்ளீட்டுப் பொருட்கள், உதிரி பாகங்களின் உத்தேச விலையேற்றத்தையும் கணக்கில் கொண்டுதான் அரசால் திட்டச் செலவு தயாரிக்கப்படுகிறது. பருவமழை தவறுவது என்பது விதிவிலக்கான அம்சம். ஆனால் அவற்றையும் கணக்கில் கொண்டுதான் அரசு முன் எச்சரிக்கையுடன் சாத்தியமான மின் உற்பத்தி இலக்கைதான் திட்டமிடுகிறது. உண்மையில் விவகாரம் அதற்கும் உள்ளே தங்கியிருக்கிறது. திட்டமிட்ட இலக்கை அமுல்படுத்துவதில் நடக்கும் திட்டமிட்ட குளறுபடிகள், அதை சரிக்கட்டுவதற்கு என்று கொட்டப்படும் இலக்கற்ற நிதி ஒதுக்கீடுகள். நிர்வாகச் செலவுகள், திறனற்ற காலாவதியாகிப்போன மின் ஏற்று நிலையங்கள் **(TRANSMISSION).** மின் விநியோக முறைகள், உதிரி பாகங்கள், உள்ளீட்டுப் பொருட்கள் (நிலக்கரி, இன்ன பிற) கையிருப்புக்கு கவனம் செலுத்தாமை, அவற்றின் தரம் குறைந்த தன்மை ஆகிய பல்வேறு காரணங்களாலும் ஊழல்முறைகேடுகளாலும் முதுகெலும்பான மின்துறை முடமாக்கப்படுகிறது; மின்பற்றாக்குறை தீராத நோயாக புரையோடி விட்டது.

அனைத்திற்கும் மேலாக நாட்டின் மிகப்பெரும் மின்திட்டங்கள் ஏகாதிபத்தியங்களின் தொழில் நுட்பங்களையும், வடிவமைப்பையும் நிதி ஆதாரங்களையும் சார்ந்து நிற்பதால் அவற்றின் வாழ்வும் வளர்ச்சியும் ஏகாதிபத்தியங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. பிரதானமாக அமெரிக்காவின் பிடியிலுள்ள உலக வங்கிதான் நம் நாட்டின் மின் திட்டங்களை ஆளுமை செய்கிறது. தாமோதர் பள்ளத்தாக்கு, தூர்க்காப்பூர், கோத்தகுண்டம், சிங்க்ரோலி, ராமகுண்டம், பராக்கா போன்ற மிகப் பெரும் 16 அனல் மற்றும் நீர் மின்திட்டங்களுக்கு மட்டும் உலக வங்கியிடமிருந்து இந்திய அரசு பெற்றிருக்கும் கடன் 5,580.20 மில்லியன் டாலர்! இது 86 ஆம் ஆண்டு ஜூன் 30ந் தேதி வரையிலான புள்ளி விபரம்!

ஏகாதிபத்தியங்களின் கடனுதவி மற்றும் உள்நாட்டு மூலாதாரங்கள் மூலம் 85-90 ஆம் ஆண்டுகளில் 7வது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் மின் திட்டச் செலவுக்களுக்காக அரசு அறிவித்திருக்கும் தொகை ரூபாய் 64,000 கோடி! இதன் மூலம் பெறப்படும் மின் உற்பத்தி திறன் 46,563 மெகாவாட். ஆனால் உண்மையில் 7வது ஐந்தாண்டு திட்டத்தில் 64,736 மெகாவாட் மின் உற்பத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு நிர்மாண வேலைகள் நடந்து முடிந்திருக்க வேண்டும். இத்திட்டங்களின் முழு உற்பத்தி திறன் 2000 ஆண்டுகளுக்குள் எடுக்கப்பட வேண்டும். ஆனால், ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் செலவழித்த பிறகும், திட்டம் முழுமையாக நிறைவேறவில்லை. காரணம் 6வது ஐந்தாண்டு திட்டத்தில் முடிக்கப்பட வேண்டிய திட்டங்களில் 18 விழுக்காடு நிறைவேறாமல் போகவே அது 7வது ஐந்தாண்டு திட்டத்தில் தள்ளப்பட்டது.

தற்போது சராசரியாக ஆண்டுக்கு 4500 மெகாவாட் மின்திறன் உற்பத்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்ட பிறகும் அத்தொகையில் வெறும் 3000 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்திச் செய்யப்படுகிறது. துண்டாடப்படும் இந்த 15 விழுக்காடு மின் உற்பத்தி இழப்பால், திட்ட ஒதுக்கீட்டில் விர்யமாகும் பணத்தின் மதிப்பு 1350 கோடி ரூபாய். உற்பத்தியின் போது இயந்திரங்களின் ஏற்படும் கோளாறு, உள்ளீட்டு பொருட்களின் தரம் குறைவு இவற்றால் இந்நட்டம் ஏற்படுவதாக கணக்குக் காட்டப்பட்டு சரிக்கட்டப்படுகிறது. இரண்டாவதாக, உற்பத்தி செய்யப்படும் 3000 மெகாவாட் மின்சாரத்திலும் 20 விழுக்காடு திறனற்ற மின் ஏற்றம் மற்றும் மின் விநியோக முறைகளால் விரையமாக்கப்படுவதாக கணக்கெழுதப்படுகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஏற்படும் நட்டம் 1800 கோடி ரூபாய்

மூன்றாவதாக, உற்பத்தி திட்டங்கள். அனல், நீர், மற்றும் அணுமின்திட்டம் எதுவாக இருந்தாலும் அதன் நிர்மாணிப்பு காலத்தை சகலப் பிரிவு வேலைகளையும் முறைகேடான முறையில் கான்ட்ராக்ட் விடுவது ஆகியவற்றின் மூலம் சராசரியாக ஒவ்வொரு திட்டத்திலும் 40 விழுக்காடு தொகை அதிகமாக செலவிடப்படுகிறது. சராசரியாக, ஆண்டொன்றுக்கு இவ்வதிகச் செலவால் ஏற்படும் நட்டம் மட்டும் சுமார் 500 கோடி. 7,407.07 கோடிக்கு திட்டமிடப்பட்டு துவங்கப்பட்ட 17க்கு மேற்பட்ட திட்டங்கள முடிவடையும் போது ஆன மொத்த செலவு 10,450.64 கோடி. இதில் ராமகுண்டம் முதல் பிரிவு, பராக்கா முதல் பிரிவு ஆகிய சில திட்டங்கள் செலவு இரட்டிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. அதாவது 800 கோடி ரூபாய்க்கு திட்டமிடப்பட்டு 1500 கோடிக்கும் மேலாக செலவிடப்பட்டதாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மின் உற்பத்தி திறன் எந்த விதத்திலும் உயர்ந்து விடவில்லை. மாறாக பல ஆண்டுகளுக்கு முன்பாகவே உற்பத்தியை துவக்க வேண்டிய இத்திட்டங்களின் உற்பத்தி கால விரயத்தை கணக்கிட்டால் நட்டம் தலையைச் சுற்றும்.

70ஆம் ஆண்டுகளில் நாட்டின் மின் உற்பத்தி திட்ட இலக்கு 14,709 மெகாவாட்டாக இருந்தது. தற்போது 46,563 மெகா

படிப்பகம்

www.padippakam.com

வாட்டாக உயர்ந்திருக்கிறது. ஆனால் திட்டச் செலவோ 2,932 கோடியிலிருந்து 68,000 ரூபாய் உயர்ந்திருக்கிறது. 3 மடங்கு அதிகமான மின்திட்ட திறனுக்கு நிதி ஒதுக்கீடு 23 மடங்கு அதிகமாகியிருக்கிறது. குறைந்த மின் உற்பத்தி, மின் விரயம், கால நீடிப்பு ஆகிய மூன்று பெரும் முறைகேடுகள் மூலம் மீண்டும் மீண்டும் ஆட்சியதிகார கும்பலும் அதிகார வர்க்கமும் நிதி ஒதுக்கீட்டை சுருட்டிக் கொண்டு மின் வெட்டை தீராத நோயாக வைத்திருக்கிறது. இன்னொரு பக்கம் இதனினும் கொடூரமாக, நயவஞ்சகமாக நாட்டின் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் பாசிச ராஜீவ் கும்பலின் மின்விநியோக கொள்கை முறையால் வஞ்சிக்கப்படுகிறார்கள். தரகு முதலாளிகளோ மின் நுகர்வை கேள்விக்கிடமற்ற வகையில் ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளனர்.

உற்பத்தியாகும் மின்சாரத்தில் விவசாயத்திற்காக ஒதுக்கப்படும் மின்சாரத்தின் அளவு வெறும் 15 விழுக்காடு மட்டும்தான். ஆனால் தேசிய வருமானத்தில் விவசாயிகள் நாட்டுக்கு அர்பணிக்கும் பங்கோ 40 விழுக்காட்டிற்கும் அதிகம். மறுபுறம் 25 விழுக்காட்டுக்கும் குறைவான பங்கு செலுத்தும் தரகு முதலாளிகளின் தொழிற்சாலைகளுக்கு கொட்டப்படும் மின்சாரத்தின் அளவு 60 விழுக்காடு! இது மட்டுமல்ல வர்த்தக நிறுவனங்களுக்கு என்றும் சேவைத் துறைகளுக்கு என்றும் ஒதுக்கப்படும் 10 விழுக்காடு மின்சாரத்தில் பெரும்பங்கு தரகு முதலாளிகளின் நிறுவனங்களுக்கும் நிர்வாக அலுவலகங்களுக்கும் திருப்பி விடப்படுகிறது. ரயில்வே துறைக்கு என ஒதுக்கப்படும் 2.5 விழுக்காடு மின்சாரத்திலும் தரகு முதலாளிகளின் தொற்சாலைகளுக்கு தேவையான கச்சாப்பொருட்கள் போக்குவரத்து கணிசமான பங்கை விழுங்குகிறது.

ஆனால் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமான கிராமப்புற மக்களோ மின் ஒதுக்கீட்டிலும் உரிமைகள் ஏதுமற்ற அடிமைகள் போலவே நடத்தப்படுகின்றனர். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் மின் உற்பத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 260 கோடி ரூபாயில் கிராமப்புறங்களை மின்மயப்படுத்துவது என்ற திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மின் திறன் மதிப்பு வெறும் 8 கோடி ரூபாய். இதுவே ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலமான 85-90 ஆம் ஆண்டுகளில் 2,108 கோடியாக உயர்த்தப்பட்டது. இது 6.2 விழுக்காடு! இப்பணத்தைக் கொண்டு இந்தியாவிலுள்ள 5.76 லட்சம் கிராமங்களில் 86 ஆம் ஆண்டு வரையில் 3.94 லட்சம் கிராமங்கள் மின்மயப்படுத்தப்பட்டது. வார்த்தையைக் கண்டு மிரண்டுவிட வேண்டாம்! கிராமத்தில் ஒரு விளக்கு எரிந்தால்கூட அரசுக்கணக்குப்படி அக்கிராமம் மின்மயப்படுத்தப்பட்ட கிராமம்! இம்மாதிரியான அரசு புள்ளி விவரப்படி அரியானா, கேரளா, பஞ்சாப், தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில் 99.9 விழுக்காடு கிராமங்களை மின்மயப்படுத்தி விட்டதாக பகட்டி திரிகிறது அரசு. இதில் கொடுமையென்னவென்றால் மொத்தம் உள்ள 5.76 லட்சம் கிராமங்களில் 1.53 லட்சம் கிராமங்கள் பழங்குடிகள் மற்றும் மலை வாழ்மக்கள் வாழும் கிராமங்கள். 85 ஆம் ஆண்டு வரை இதில் 44 விழுக்காடு கிராமங்களில் மட்டுமே மின்சாரம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதில் பாலைவனத்தின் மத்தியில் இருக்கும் கிராமங்களும் அடக்கம்.

86ஆம் ஆண்டு ஜூன் வரை நாடு முழுவதும் வேளாண்மை மற்றும் பொது ஆழ்குழாய் கிணறுகள் என்ற வகையில் 62.91 லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. இது நாட்டின் மொத்த நிலத்தடி நீரில் 10.4 விழுக்காடு நீரை மட்டுமே பயன்படுத்தும் சக்தி படைத்தது ஆகும். இதில் அயோக்கியதனம் என்னவென்றால், நாட்டிலேயே உபரி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், மேகாலயா, நாகலாந்து, சிக்கிம் மாநிலங்களில் 5 சதவீத வேளாண்மை கிணறுகளுக்குகூட 85 ஆம்



ஆண்டு மார்ச்சு வரை மின் இணைப்பு தரப்படவில்லை. அம்மாநிலங்களின் மின்சாரம் அனைத்தும் அண்டை மாநிலங்களின் தரகு முதலாளிகளின் தொழிற்சாலைகளுக்கு திருப்பிவிடப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக நாட்டிலுள்ள மொத்த குடியிருப்புகளில் 80 விழுக்காடு வீடுகள் இன்னும் சிம்னி விளக்கின் கும்மிருட்டிலேயே வாசம் செய்கின்றன. ஆனால், மறுபுறம், தரகு முதலாளிகளின் தொழிற்சாலைகளின் பெருந்தொகையான மின்பாக்கி, இக்கும்பலின் தொழிற்சாலைகளுக்காக சட்ட விரோதமான முறையில் அதிகாரவர்க்கத் துணையோடு கடத்தப்படும் மின்திருட்டு ஆகியவைகளின் மதிப்பு பல நூறு கோடி ரூபாய்களை தாண்டும்!

காங்கிரசு அரசாளும் பிற மாநிலங்களில் மட்டும்தானா இந்நிலைமை! இனமான கழகங்கள் ஆட்சி செய்யும் தமிழகத்திலும் மின்வெட்டு கொடிக்கட்டி பறக்கிறது! தென் மாநிலங்களின் சராசரியான ஆண்டு மின் பற்றாக்குறை 22.5 விழுக்காடாக இருக்கும் போது தமிழ்நாட்டில் 40 விழுக்காடாக தொடர்கிறது.

வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது என்று ஒப்பாரி வைத்து ஆட்சிக் கட்டிலைப் பிடித்த கழகங்களின் ஆட்சி, மாறிமாறி டில்லிக்கு பல்லக்கு தூக்கியதே முக்கிய காரணம். தமிழக மக்களின் காலை நக்கி ஓட்டுப் பொறுக்கி ஆட்சியைப் பிடித்த இக்கும்பல், பிடித்த ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஓட்டுப்போட்ட மக்களின் காங்கிரசு எதிர்ப்புக் கொள்கையை கேவலப்படுத்தியது. ஆளும் காங்கிரசு கும்பலின் காலடியில் தஞ்சம் புகுந்தது. தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக்கூட பாசிசக் கும்பலுக்கு தாரை வார்த்துக் கொடுத்தது. நரிமணம் எண்ணெய் கிணறுகளில் தமிழகத்தின் பங்கு, நெய்வேலி அனல் மின்நிலையம், கல்பாக்கம் அணுமின்நிலையம் இவற்றின் உற்பத்தியில் கணிசமான பங்கை தமிழகத்துக்கு கோருவது என்று சொரணையே இல்லாமல் போட்ட பிச்சையை ஏந்திக்கொண்டது. மறுபுறம், சுயமாகவும் மாநில வளர்ச்சியின் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் அக்கரையற்று, மாநில வருமானத்தின் ஒரு சிறுபங்கை கவர்ச்சி திட்டங்களுக்குஇறைத்துவிட்டு பெரும்பங்கை பங்கு போட்டுக் கொண்டது. தூத்துக்குடி அனல் மின்சாரத்திற்கு ஆஸ்திரேலியாவிருந்து நிலக்கரி வரவில்லையென வெட்கங்கெட்ட முறையில் அறிவிப்பு செய்து, மத்திய அரசிடம் நிலக்கரியை கோரிப் பெறக்கூட தொடை நடுங்கி பலமாதம் அதை இழுத்து மூடியது. சமீபத்தில் கல்பாக்கம், அணுமின் நிலையத்தில் ''பழுது'' என்ற மத்திய அரசின் பல்லவியையே திரும்பப்பாடி 40 விழுக்காடு மின்வெட்டை அமுல்படுத்தியது. இம்மின் திட்டங்களின் உண்மை நிலையையும் உற்பத்தி திறனையும் சொந்த மக்களிடம் அம்பலப்படுத்தி மத்திய அரசை தோலுரிக்கும் திராணியற்று புழுவாக ஆட்சிக் கட்டிலில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு சொந்த மக்களை சுடுகாட்டுக்கு அனுப்புவதற்கு மத்திய அரசின் கூடங்குள அணுமின் திட்டத்தை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறது.

21ஆம் நூற்றாண்டிற்கு நாட்டை முன்னோக்கி நகர்த்துவதாக பம்மாத்து செய்யும் பாசிச ராஜீவுக்கும் தெற்கு தேய்கிறது என்று ஒப்பாரி வைக்கும் கருணாநிதிக்கும் இக்கொள்கை முழக்கங்கள் எல்லாம் தங்கள் பிழைப்புவாத அரசியலுக்கு தேவையான வெறும் கவர்ச்சி முழக்கங்கள்தான். மாறாக நாட்டின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் எள்ளளவும் இக்கும்பலுக்கு அக்கறையில்லை. எந்த நடவடிக்கையென்றாலும் அதில் தங்களுக்கு சொந்த ஆதாயம் தேடுவது என்பதே இவர்களது அரசியல் கொள்கை. இது பல ஆயிரம் முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டை மின்மயப்படுத்துவதான இவர்களது வாய் சவடால்கள் அதில் ஒன்று.

உழைக்கும் மக்கள் இனிமேலும் இத் தேசவிரோத மக்கள் விரோத கும்பலிடம் சொந்த நாட்டை விட்டுவைப்பது என்பது தனக்குத்தானே மரணக்குழி வெட்டிக்கொள்வதற்கும் இதற்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை என்பதை உணர வேண்டும்.

மணி

படிப்பகம்

www.padippakam.com



ஸ்ரீநகர் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர்கள் மீது கல்லெறிந்து தாக்கும் போலீசு ரௌடிகள்.

# பனிமலையில் தொடரும் இன உரிமைப் போர்!

இந்தியாவின் சொர்க்க பூமியாகச் சித்தரிக்கப்படும், இயற்கை எழில் கொஞ்சும் மாநிலமான காஷ்மீரம் ஏப்ரல் முதலாக ஒருவார காலத்துக்குப் போர்க்கோலம் பூண்டது. 'அமைதி' தவழும் அந்தப் பனிப் பள்ளத்தாக்குப் பகுதியில் மக்களது வீரஞ்செறிந்த போராட்டப் புயல் ஒருவார காலத்துக்குத் தொடர்ந்து வீசியது. ஆயிரக்கணக்கில் இளைஞர்களும் மக்களும் திரண்டு வீதிகளில் வீரப்போர் புரிந்தனர். அரசு வாகனங்கள் கொளுத்தப்பட்டன. நௌஹட்டா, கான்யார் போலீசு நிலையங்கள் சூறையாடப்பட்டன. போராட்டத்தை ஒடுக்க மாநிலப் போலீசுக்கு உதவியாக ராணுவமும் எல்லைப் பாதுகாப்புப் படையும் குவிக்கப்பட்டது. தடியடி, கண்ணீர்புகை, கண்டதும் சுட உத்திரவு, ஊரடங்குச் சட்டம் முதலான போலீசின் வன்முறை வெறியாட்டத்தால் 8 பேர் கொல்லப்பட்டனர். 300க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர். இன்று தலைநகரமான ஸ்ரீநகரின் அன்றாட வாழ்க்கை சிதைந்து ரண களமாகக் காட்சியளிக்கிறது.

அரசியல் விபச்சாரத்தின் மூலம் ஆட்சியைப் பிடித்த பரூக் -காங்கிரசு கூட்டணி அரசு கடந்த சில மாதங்களாக அப்பாவி இளைஞர்களைப் பல கருப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்து கொடுமைப்படுத்தி வந்தது. ''அவர்கள் தீவிரவாத -பிரிவினைவாத தேச விரோத இயக்கத்தின் ஆதரவாளர்கள். பாகிஸ்தான் அவர்களுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது. கடந்த ஆண்டு 300 இளைஞர்கள் ரகசியமாக எல்லையைத் தாண்டிச் சென்று பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர்'' என்று குற்றஞ்சாட்டி தமது செயலை நியாயப்படுத்தி வந்தது. இதனால், மாநிலத்தை போலீசு ராஜ்ஜியமாக்கிய பரூக் - காங்கிரசு சதிகார கும்பல் மீது காஷ்மீர மக்களும் குறிப்பாக, இளைஞர்களும் ஆத்திரமுற்றிருந்தனர்.

இந்நிலையில், பிரிவினையைக் கோரும் காஷ்மீர் மக்கள் லீக் கட்சியின் தலைமறைவுத் தலைவர் ஷாபிர் அகமதுஷாவின் தந்தையான 70 வயது முதியவர் குலாம் முகமது ஷாவை அனந்த்நாக் நகர போலீசார் கடந்த ஏப்ரல் 3ந்தேதி கைது செய்தனர். போலீசிடமிருந்து தப்பிவந்த ஒரு இளைஞருக்கு தமது வீட்டில் அவர் அடைக்கலம் கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. அம்முதியவரை போலீசு நிலையத்துக்கு இழுத்துச் சென்று அவரது தலைமறைவான மகன் எங்கே என்று கேட்டு கொடூரமாக சித்திரவதை செய்தனர். சித்திரவதை தாளாமல் அடுத்த நாளே அவர் மாண்டு போனார்.

ஏற்கனவே குமுறும் எரிமலையாக இருந்த மக்கள் இச்செய்தியை அறிந்ததும், ஆயிரக்கணக்கில் வீதிகளில் திரண்டு போலீசுக்கு எதிராக முழக்கமிட்டுக் கொண்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். அனந்த்நாக் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு கல்லெறிந்து தாக்கினர். தடியடி, கண்ணீர் புகை, துப்பாக்கிச் சூடு நடத்தி போலீசு கும்பல் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அதைத்தொடர்ந்து ஸ்ரீநகர், பாரமுல்லா, சோபூர், புல்லாமா, தோரூ, குல்காம், பண்டிபூர் நகரங்களில் மக்கள் போர்க்கோலம் பூண்டு போலீசை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். அரண்டு போன அரசு ராணுவத்தையும் எல்லைப் பாதுகாப்புப் படையையும் கொண்டுவந்து குவித்து அடக்கியது. கற்களாலும், பெட்ரோல் குண்டுகளாலும் இளைஞர்கள் திருப்பித் தாக்கினர். வருவாய்த்துறை மந்திரியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு தாக்கி தீ வைத்தனர். காஷ்மீர பிரிவினை கோரும் அமைப்புகள் முதியவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மூன்று நாட்களுக்குத்தான் கடையடைப்புப் போராட்டம் நடத்த அறைகூவல் விடுத்திருந்தன. ஆனால் அதையும் மீறி காஷ்மீர மக்களின் போராட்டம் ஏறத்தாழ ஒருவார காலத்துக்கு நீடித்து, இப்போது தற்காலிகமாக ஓய்ந்துள்ளது.

இந்திய ஆளும் வர்க்கங்களும் சுற்றுலா சுகவாசிகளும் சித்தரிப்பது போல காஷ்மீரம் என்றைக்குமே அமைதி தவழும் மாநிலமாக இருந்ததில்லை. காஷ்மீரத்தை அம்மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தியாவுடன் இணைத்த காலத்திலிருந்தே அம்மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். 1947 அதிகார மாற்றத்தின்போது இந்தியா, பாகிஸ்தான் என்று நாட்டை இரண்டாகப் பிளந்துவிட்டு, சமஸ்

படிப்பகம்

www.padippakam.com

தானங்கள் தமது விருப்பம்போல யாருடனும் சேர்ந்துகொள்ளலாம் என்று ஆங்கிலேய காலனியவாதிகள் அறிவித்தனர். காஷ்மீர் சமஸ்தானத்தில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள், அரசரோ இந்து மதத்தைச் சேர்ந்தவர். இந்திய அரசுடன் பேரம்பேசி காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது என்று அரசர் தன்னிசையாக முடிவு செய்தார். முஸ்லிம்கள் எதிர்த்தனர். அதன்பிறகு பாகிஸ்தானும் இந்தியாவும் போரின்மூலம் காஷ்மீரைப் பங்கு போட்டுக் கொண்டன. பாக். வசமுள்ள பகுதி ஆசாத் காஷ்மீர் என்றும், இந்தியா வசமுள்ள பகுதி ஜம்மு-காஷ்மீர் என்றும் இரு பகுதிகளாக கூறுபோடப்பட்டது. இன்னமும் இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் முழுவதும் தமக்கு மட்டுமே சொந்தம் என்று பரஸ்பரம் உரிமை பாராட்டுகின்றன.

பிரிவினையின்போது சுதந்திர காஷ்மீர் கோரிக்கையை முன்வைத்து, தமது அரசியல் நிலையை - சுயநிர்ணய உரிமையைத் தீர்மானிப்பதற்கு பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று காஷ்மீரி மக்கள் போராடினர். அவர்களது கோரிக்கையைக் கைவிடச் செய்வதற்காக நேரு அரசு பல சூழ்ச்சிகளைச் செய்தது. மறைந்த போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் ராமமூர்த்தியை இதற்காக தரகு வேலை செய்ய நேரு அரசு அனுப்பியது. அதன்பிறகு, காஷ்மீரி மக்களின் போராட்டத் தலைமையைக் கைபக்பற்றியிருந்த ஷேக் அப்துல்லா, (இன்றைய ஜம்மு-காஷ்மீர் முதல்வர் பரூக்கின் தந்தை) இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு தேர்தலில் நின்று முதலமைச்சரானார். இந்திய அரசும் காஷ்மீரைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சில சலுகைகளை அம்மாநிலத்துக்குக் கொடுத்து சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சித்து வந்தது.

ஆனால் அம்மக்களின் சுதந்திரத்துக்கான, உரிமைக்கான வேட்கையை ஒருக்காலும் மழுங்கடிக்க முடியவில்லை. காஷ்மீர விடுதலையில் மாளாக் காதல் கொண்ட இளைஞர்கள் சிலர் ஆயுதப் போராட்ட - பயங்கரவாதப் பாதையில் இறங்கினர். இந்து அரசுடன் இணைந்து வாழமுடியாது என்று முஸ்லீம் அடிப்படைவாதிகள் தனி அமைப்பாக திரண்டு பிரிவினையை வலியுறுத்தி மறுபக்கம் போராடினர். பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரத்தையும் ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தையும் இணைத்து சுதந்திரமான சுயாதிபத்தியமுடைய காஷ்மீர் தேசத்தை நிறுவுவது என்றும் ஒன்றுபட்ட காஷ்மீரத்தை பாகிஸ்தானுடன் இணைப்பது என்றும் அவர்களது லட்சியங்கள் வேறுபட்டிருந்தன. ஆனால் அவர்கள் ஒருக்காலும் இந்தியாவின் ஆதிக்கத்தின்கீழ் வாழ விரும்பவில்லை.

முக்கியமாக, ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி **(JKLF)** , காஷ்மீர மக்கள் லீக், மகாஸ் - இ - ஆசாதி ஆகிய மூன்று அமைப்புகள் சுயநிர்ணய உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வருகின்றன. இதில் பின்னிரு அமைப்புகளும் முஸ்லீம் அடிப்படைவாதிகளின் தலைமையின் கீழுள்ளன. ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி மக்பூல்பட் என்பவர் தலைமையில் 1965ல் நிறுவப்பட்டது. எல்லைப் பகுதியில் அவர்கள் ஆயுதமேந்திய திடீர் தாக்குதல்களைத் தொடுத்தனர். 1966ல் முன்னணியில் பலர் போலீசுடனான மோதலில் மாண்டனர். மக்பூல்பட் உட்பட பலரும் கைதாகி சிறையிலடைக்கப்பட்டனர். அதனால் இயக்கம் பின்னடைந்தது. ஆனாலும் இந்திய ஆதிக்க அரசு இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் என சந்தேகப்படுவோரை சிறையிலடைத்து சித்தரவதை செய்தது. முன்னணியை தடை செய்தது.

1968ல் பட் சிறையிலிருந்து தப்பினார். பின்னர் 1976ல் ஒரு வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டபோது மீண்டும் கைதானார். இடைப்பட்ட காலத்தில் அவர் முன்னணியை மீண்டும் உயிர்ப்பித்தார். அதன் விளைவாக, இம் முன்னணியின் செயல் வீரர்கள் 1976ல் ஒரு இந்திய விமானத்தைக் கடத்தி, மக்பூல்பட்டை விடுதலை செய்யக் கோரினர். ஆனால் அவர்களது கோரிக்கையை இந்திய அரசு ஏற்க மறுத்து, மக்பூல் பட்டை டெல்லி திஹார் சிறையில் தனிமைக் கொட்டடியில் அடைத்தது. பின்னர் 1984ல் இம்முன்னணியினர் பிரிட்டனில் இந்தியத் தூதரக அதிகாரியாக இருந்த ரவீந்தர் மகாத்ரே என்பவரைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்று மகபூல்பட்டை விடுதலை செய்யக் கோரினர்.

ஆனால் பாசிச இந்திரா அரசு மக்பூல் பட்டைத் தூக்கிலிட்டுக் கொன்று தனது பழி வாங்கும் வெறியைத் தீர்த்துக் கொன்றது!

மக்பூல் பட்டை இந்திய அரசு கொன்ற செய்தியை அறிந்ததும் காஷ்மீர மாநிலமே ஆத்திரமுற்று அரசுக்கு எதிரான போராட்டத்தில் குதித்தது. மக்பூல் பட்டை லட்சியத்துக்காக உயிர்நீத்த தியாகியாக காஷ்மீரி மக்கள் புகழாரம் சூட்டினர். இன்றும்கூட காஷ்மீர இளைஞர்கள் மக்பூல் பட்டை தமது லட்சிய நாயகனாகக் கருதி பெருமளவில் காஷ்மீர விடுதலை முன்னணியில் அணிதிரள்கின்றனர். இப்போதைய போராட்டத்தை இதர அமைப்புகளுடன் சேர்ந்து தலைமையேற்று முன்னின்று நடத்தியுமுள்ளனர்.

வழக்கம் போலவே ஆதிக்க வெறிபிடித்த இந்தியப் பிற்போக்கு அரசும், முதலாளித்துவப் பத்திரிக்கைகளும் காஷ்மீரி மக்களின் நியாயமான போராட்டத்தை எதிர்த்து, ''பிரிவினைவாத - தேசவிரோத - பயங்கரவாத சக்திகளின் வெறியாட்டம்'' என்று கொச்சைப் படுத்துகின்றன. சீக்கிய பயங்கரவாதிகளுடன் சேர்ந்து கொண்டு நாட்டைத் துண்டாட சதி செய்வதாகவும், பாகிஸ்தான் ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்து ஊக்குவிப்பதாகவும், சிறுபான்மை இந்துக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பீதியூட்டுகின்றன.

பாகிஸ்தான் ஆதரிப்பதாலேயே காஷ்மீரி மக்களின் நியாயமான போராட்டத்தை பிற்போக்கானதாக, தவறானதாகக் கருது முடியாது. எல்லா தேசிய இனப் போராட்டங்களையும் ஏகாதிபத்தியங்களும் பிற்போக்கு ஆதிக்க வெறியர்களும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பது எதிர்பார்க்கக் கூடியதுதான்! பாகிஸ்தான் அரசு காஷ்மீர சுய நிர்ணய உரிமைக்கான இயக்கத்தை ஆதரித்து ஊக்குவிப்பதைப் போலவே, இந்திய அரசும் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் தேசிய இன இயக்கத்துக்கு ரகசியமாக ஆதரவளிக்கிறது. ஏற்கனவே வங்கதேச, ஈழ விடுதலை இயக்கங்களைத் தத்து எடுத்து தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இவ்விரு நாட்டு அரசுகளுமே தமது உள்நாட்டு நெருக்கடியைத் திசை திருப்பிவிட்டு, அண்டை நாடுகள் சதிசெய்வதாக பீதியூட்டி, தேசிய வெறி - மத வெறியைத் தூண்டிவிட்டு, தமது கேடுகெட்ட ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகின்றன. குறிப்பாக இந்திய ஆளும் கும்பல் அன்னிய சதிக்கு எதிராக கூச்சல் போட்டுக்கொண்டு தேசிய ''ஒருமைப்பாட்டை'' கட்டிக்காத்து வரும் வேளையில், இன்று, வடகிழக்கிந்திய மக்களும், அஸ்சாமின் 'பாடோ' பழங்குடி மக்களும், பீகாரின் 'ஜார்கந்து' இயக்கத்தினரும் தமது சுயநிர்ணய உரிமைப் போரைத் தீவிரப்படுத்தி ஆளும் பாசிசக் கும்பலின் முகத்தில் கரிபூசி வருகின்றனர்.

சுயநிர்ணய உரிமைக்காக காஷ்மீரி மக்கள் தொடர்ந்து போராடினாலும் அவர்களின் போராட்டத் தலைமை இன்னமும் பிளவுபட்டே உள்ளது. ஒருபுறம் குட்டி முதலாளித்துவ வர்க்கத் தலைமையைக் கொண்ட காஷ்மீர விடுதலை முன்னணி பயங்கரவாதப் பாதையில் இழுக்கிறது; மறுபுறம், முஸ்லிம் அடிப்படைவாதிகளின் தலைமையைக் கொண்ட இதர அமைப்புகள் அஞ்ஞானவாத பிற்போக்குப் பாதையில் இழுக்கின்றன. அதிலும் குறிப்பாக, 'முஸ்லிம்கள் ஒரே இனம்; எனவே காஷ்மீரை விடுவித்து பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டும்' என்ற முஸ்லிம் அடிப்படைவாதிகளின் லட்சியம், காஷ்மீர் மக்களின் சுதந்திர வேட்கைக்கே எதிரானது. எனவே, காஷ்மீர மக்கள் இத்தகைய பிற்போக்கு - பயங்கரவாத சக்திகளை எதிர்த்துப் போராடி பாட்டாளி வர்க்கத் தலைமையை நிறுவவேண்டும்; பாகிஸ்தானை நம்பியிராமல், பரந்துபட்ட மக்களைச் சார்ந்து தம் சொந்தக்காலில் நின்று ஆதிக்கவெறியர்களை எதிர்த்துப் போராடுவதன் மூலமே தமது சுய நிர்ணய உரிமையைச் சாதிக்க முடியும்.

● மணி

மக்பூல்பட்



படிப்பகம்

www.padippakam.com

இதோ, இது மேட்டுக்குடி குழந்தைகளை கவர்ந்திழுத்து கல்வியில் கவனம் செலுத்த வைப்பதற்காக வானொளியில் காட்டப்படும் தேசிய நிகழ்ச்சி. இந்தி, ஆங்கிலம் இரு மொழிகளில் தரப்படும் இந்நிகழ்ச்சிகள் மூலம் குழந்தைகள் உலக அறிவு அனைத்தையும் உட்கார்ந்த இடத்திலேயே பெற முடிகிறதாம்! குறிப்பாக, காலை நேரத்திலேயே இந்நிகழ்ச்சிகள் புகட்டப்படுவதால் குழந்தைகள் மலரும் முகத்துடன் நாள் முழுக்க உற்சாகமாக அறிவு பசி எடுத்து ஆர்வமுடன் கல்வி கற்கத் துணைசெய்கிறதாம். ''பாபா பிளாக் ஷிப்'' போன்ற 'கான்வென்ட்' குழந்தைப் பாடல்கள், கதைகள் 'ஜோக்குகள்', 'சூப்பர்மேன்' போன்ற சாகசத் தொடர்கள், இவற்றுடன் அமெரிக்க நாட்டின் பிரபலமான 'செசேம் தெரு' - என்ற கல்விக்கதைத் தொடரும் இணைத்துக் கொடுக்கப்படுகிறது.



ஒழுக்கநெறி விலகிவிட்டேத்தியாக ஊர்மேயும் மேட்டுக்குடி இளைஞர்களை நெறிப்படுத்தவும், அவர்களின் சிந்தனையை, வாழ்க்கையை ஒரு நெறிக்குள் கொண்டுவரவும் படாதபாடுபடுகிறது, அரசு. அதற்காக, பல்வேறு கலைகளுடன் உடற்பயிற்சி தியானத்தோடு கூடிய ஐந்து நட்சத்திரப் பள்ளிகளைத் திறக்கிறது. அதுவும் போதாது என்று மக்களின் வரிப்பணத்தில் இப்படி, தொலைக்காட்சி தொடர் நடத்துகிறது.

இதோ, இவர்கள் மேற்சொன்ன குழந்தை கும்பலிலிருந்து வேறுபட்டவர்கள். அடிமட்டத்து உழைக்கும் மக்களின் குழந்தைகள், இவர்கள் பள்ளியும் சென்றதில்லை, கல்வியும் கற்றதில்லை; சுற்றத்துடனும் வாழ்ந்ததில்லை. சிறு வயதிலேயே விபச்சாரிகளாகி சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு மனித புழுக்களாக வாழும் நம்முடைய செல்வங்கள்! வாழ்க்கையை இழந்து, எதிர்காலமே சூன்யமாகி, நிர்கதியாய் நிற்கும் இப்பிஞ்சுகள் நாளொன்றுக்கு குறைந்தது 5க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு தங்கள் உடம்பைக் கொடுத்து வயிற்றைக் கழுவுகின்றனர். இதனால் குறுகிய காலத்திலேயே முதுமையடைந்து தீராத பல்வேறு நோய்களுக்கு ஆளாகி ஆதரவற்று மடிகின்றனர்.

# இதுதான் இன்றைய இந்தியா

இவர்கள் விரும்பி இவ்வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. வயிற்றுப்பசி, குடும்ப ஏழ்மை, சீரழிவுக் கலாச்சாரம் அனைத்தும் சேர்ந்து இவர்களை இங்கு துரத்தியது. இவ்வாறு இந்தியா முழுவதும் விபச்சாரத் தொழிலில் தள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 2.5 லட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சிறு வயதிலேயே விபச்சார தொழிலில் தள்ளப்பட்டுள்ள சிறுமிகளின் எண்ணிக்கை மட்டும் 41 ஆயிரத்திற்கும் அதிகம். கௌரவமான வாழ்க்கை மீதும் சொந்த ஊர் மீதும், தாய் தந்தையர் மீதும் இவர்கள் வைத்திருக்கும் பாசம் வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவு நெகிழ வைக்கிறது. 'நிரந்தரமான துணையாக ஒருசிறு துரும்பு கிடைத்தால் போதும்; நாங்கள் கௌரவமான பழைய வாழ்க்கைக்கு திரும்பி விடுவோம்' என்று தேக்கி வைத்திருக்கும் விருப்பத்தை ஏக்கத்துடன் வெளிப்படுத்துகிறார்கள்!

தரகு முதலாளிகள், பண்ணைப் பிரபுக்கள், மேட்டுக்குடி வர்க்கத்தின் குழந்தைகளுக்கு ஆடம்பர கல்வி, ஐந்து நட்சத்திர பள்ளி! உழைக்கும் மக்களின் குழந்தைகளோ கௌரமாக உழைத்து வாழவும் முடியாமல் விபச்சாரிகளாக வாழ்ந்து செத்து மடியும் கொடுமை! இதற்கு காரணமான ஆளும் வர்க்கத்தை, கேடுகெட்ட நீசர்களை நாம் அழித்தொழிப்பது எப்போது?



படிப்பகம்